



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www.tamilnaduepaper.com






CHENNAI | Volume- 3 | Issue:106 | 01-11-2025 | சனிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

01.11.2025 ஐப்பசி 15
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.03

திதி:
இன்று அதிகாலை 4.31 வரை தசமி பின்பு ஏகாதசி.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 2.47 வரை சதயம் பின்பு பூரட்டாதி

யோகம் :
இன்று அதிகாலை 1.31 வரை விருத்தி பின்பு இரவு 11.30 வரை துருவம் பின்பு வ்யாகாதம்.

கரணம் :
இன்று அதிகாலை 4.31 வரை கரசை பின்பு மாலை 3.55 வரை வணிசை பின்பு பத்திரை.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.02 வரை சித்த யோகம் பின்பு பிற்பகல் 2.47 வரை அமிர்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

சந்திராஷ்டமம்
இன்று பிற்பகல் 2.47 வரை பூசம் பின்பு ஆயில்யம்.

நல்ல நேரம்
காலை 7.45 – 8.45.
மாலை 4.45 – 5.45.
இராகு காலம்
காலை 9.00 – 10.30.
எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00.

குளிகை
காலை 6.00 – 7.30

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# பள்ளிகளில் காலை உணவு; விவசாயிகளுக்கு ரூ.9000

## பிஹாரில் தே.ஜ. கூட்டணியின் தேர்தல் அறிக்கை!




**பாட்னா, நவ.1:** பிஹார் சட்டப்பேரவை தேர்தலுக்கான கூட்டு தேர்தல் அறிக்கையை தேசிய ஜனநாயகக் கூட்டணி இன்று வெளியிட்டது. ஒரு கோடி இளைஞர்களுக்கு அரசு வேலை, விவசாயிகளுக்கு ரூ.9 ஆயிரம் நிதியுதவி உள்ளிட்ட வாக்குறுதிகள் இந்த 69 பக்க தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.

2025 பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கான கூட்டு தேர்தல் அறிக்கை இன்று (அக்டோபர் 31) வெளியிடப்பட்டது. பாட்னாவில் பாஜக தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா, முதல்வர் நிதிஷ் குமார், எல்ஜேபி தலைவர் சிராக் பாஸ்வான், பிஹார் பாஜக தேர்தல் பொறுப்பாளர் தர்மேந்திர பிரதான் ஆகியோர் முன்னிலையில் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

தேசிய ஜனநாயக கூட்டணி தேர்தல் அறிக்கையின் முக்கிய அம்சங்கள்:

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியமைத்த பின்னர் 1 கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்கப்படும். திறன் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

வெள்ள மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டு நதி இணைப்புத் திட்டங்கள், கரைகள் மற்றும் கால்வாய்கள் விரைவாக கட்டப்படும். அடுத்த 5 ஆண்டுகளில் வெள்ளம் இல்லாத பிஹார் என்று இலக்கு எட்டப்படும்.

இலவச ரேஷன், 125 யூனிட் இலவச மின்சாரம், ரூ.5 லட்சம் வரை இலவச மருத்துவ சிகிச்சை, ரூ.5 லட்சத்தில் புதிய வீடுகள் மற்றும் ஏழைகளுக்கு சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் ஆகியவை உறுதியளிக்கப்படும்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் பல்வேறு சாதிகளின் சமூக மற்றும் பொருளாதார நிலையை மதிப்பிடுவதற்கும், அவர்களின் அதிகாரமளிப்புக்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கத்திற்கு பரிந்துரைப்பதற்கும் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்படும். இதன்மூலம் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (EBC) பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு ரூ.10 லட்சம் வரை உதவித் தொகை வழங்கப்படும்.

முதல்வரின் மகளிர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம், பெண்களுக்கு ரூ.2 லட்சம் வரை நிதி உதவி வழங்கப்படும். தேசிய ஜனநாயகக் கூட்டணி ஒரு கோடி 'லட்சாதிபதி பெண்களை' உருவாக்கும். 'மிஷன் கோடீஸ்வரர்' திட்டம் மூலம் பெண் தொழில்முனைவோர் கோடீஸ்வரர்களாக மாற்றப்படுவார்கள்.

பாட்னா, தர்பங்கா, பூர்னியா மற்றும் பாகல்பூரில் சர்வதேச விமான நிலையங்கள் அமைக்கப்படும். இந்த நான்கு நகரங்களில் மெட்ரோ திட்டங்கள் அமைக்கப்படுவதோடு, ஏழு விரைவுச் சாலைகளை அமைக்கவும், 3,600 கி.மீ ரயில் பாதைகளை நவீனமயமாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. விமான இணைப்பு மேலும் 10 நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்சாலைகள் மற்றும் 10 புதிய தொழில்துறை பூங்காக்கள் கட்டப்படும். கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் குறைந்தது 100 சிறு, குறு தொழில் பூங்காக்கள் மற்றும் 50,000 க்கும் மேற்பட்ட குடிசை தொழில் நிறுவனங்கள் உருவாக்கப்படும்.

உலகத் தரம் வாய்ந்த மருத்துவம் வழங்கப்படும் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும்.

அனைத்து பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படும். கர்புரி தாக்கூர் கிசான் சம்மன் நிதி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ரூ.3,000 வழங்கப்படும். இதன்மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் ஆண்டு உதவித்தொகை ரூ.6,000 லிருந்து ரூ.9,000 ஆக உயர்த்தும்.

மீனவர்களுக்கான உதவி ரூ.4,500 லிருந்து ரூ.9,000 ஆக உயர்த்தப்படும். மாநிலத்தின் விவசாய உள்கட்டமைப்பில் ரூ.1 லட்சம் கோடி முதலீட்டை அரசாங்கம் உறுதி செய்யும்.

தேசிய ஜனநாயக கூட்டணி ஒரு கல்வி நகரத்தை உருவாக்கவும், உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களின் வளாகங்களை பிஹாரில் திறக்கவும் திட்டமிட்டுள்ளது. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு 'கேஜி முதல் பிஜி' வரை இலவச மற்றும் தரமான கல்வி, பள்ளிகளில் மதிய உணவுடன் சத்தான காலை உணவு ஆகியவை வழங்கப்படும்.

பட்டியல் சமூக பிரிவு மாணவர்களுக்கு குடியிருப்புப் பள்ளிகள் திறக்கப்படும். உயர்கல்வி பயிலும் பட்டியல் சமூக மாணவர்களுக்கு ரூ.2,000 மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படும். சீதை பிறந்த இடம் 'சீதாபுரம்' என்று அழைக்கப்படும். அது உலகத் தரம் வாய்ந்த ஆன்மீக நகரமாக மேம்படுத்தப்படும்.

## முழு காஷ்மீரையும் இந்தியாவுடன் இணைக்க படேல் விரும்பினார்; நேரு அனுமதிக்கவில்லை - பிரதமர்



**நர்மதா, நவ.1:** 'சர்தார் வல்லபாய் படேல் மற்ற சமஸ்தானங்களை இணைத்தது போல், முழு காஷ்மீரையும் நாட்டுடன் ஒன்றிணைக்க விரும்பினார். ஆனால் அப்போதைய பிரதமர் நேரு அதை நடக்க அனுமதிக்கவில்லை' என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

நரேந்திர மோடி முதல் முறையாக பிரதமரான 2014 முதல் அக்டோபர் 31 ஆம் தேதி சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாள் ராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ் (தேசிய ஒற்றுமை தினம்) ஆகக் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி, பிரதமர் மோடி குஜராத்தின் நர்மதா மாவட்டத்தில் உள்ள ஏக்தா நகர் அருகே உள்ள 182 மீட்டர் உயரமுள்ள சர்தார் வல்லபாய் படேலின் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதனை தொடர்ந்து படேல் சிலை முன்பாக முதன்முறையாக நடைபெற்ற தேசிய ஒற்றுமை தின அணிவகுப்பை பிரதமர் மோடி பார்வையிட்டார். இதில் காவல்துறை மற்றும் துணை ராணுவப் படைகளின் வீரர்கள் பங்கேற்றனர். இந்த அணிவகுப்பில் துணை ராணுவப் படைகள் மற்றும் ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், அசாம், திரிபுரா, ஒடிசா, சத்தீஸ்கர், கேரளா, ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த காவல் படைகள் உட்பட அனைத்துப் படைகளுக்கும் பெண் அதிகாரிகள் தலைமை தாங்கினர்.

இதனை தொடர்ந்து பேசிய பிரதமர் மோடி, "வரலாற்றை எழுதும் நேரத்தை வீணாக்கக்கூடாது, ஆனால் வரலாற்றை உருவாக்க நாம் கடினமாக உழைக்க வேண்டும் என்று சர்தார் படேல் நம்பினார். சுதந்திரத்திற்குப் பிறகு, 550க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை ஒன்றிணைக்கும் சாத்தியமற்ற பணியை சர்தார் படேல் சாத்தியமாக்கினார். ஒரே இந்தியா, சிறந்த இந்தியா என்ற யோசனை படேலுக்கு மிக முக்கியமானது.

சர்தார் வல்லபாய் படேல் மற்ற சமஸ்தானங்களை இணைத்தது போல், முழு காஷ்மீரையும் ஒன்றிணைக்க விரும்பினார். ஆனால் நேரு அவரது விருப்பத்தை நிறைவேற்றுவதைத் தடுத்தார். இதனால் காஷ்மீர் பிரிக்கப்பட்டது, தனி அரசியலமைப்பு மற்றும் தனி கொடி வழங்கப்பட்டது. காங்கிரஸின் இந்த தவறு காரணமாக நம் நாடு பல பத்தாண்டுகளாக பாதிக்கப்பட்டது.

எனது மிகப்பெரிய மகிழ்ச்சி தேசத்திற்கு சேவை செய்வதில் இருந்து வருகிறது என்று சர்தார் படேல் ஒருமுறை குறிப்பிட்டார். தேச சேவைக்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்வதை விட பெரிய மகிழ்ச்சி வேறு எதுவும் இல்லை என்பதை நம் நாட்டு மக்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்" என்றார்

இந்த அணிவகுப்பில் 900 கலைஞர்கள் பங்கேற்ற கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் இந்திய கலாச்சாரத்தின் செழுமை மற்றும் பன்முகத்தன்மையைக் குறிக்கும் பாரம்பரிய நடனங்கள் இடம்பெற்றன. இந்த நிகழ்ச்சியில், ஜார்க்கண்டில் நக்சல் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும், ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் துணிச்சலான நடவடிக்கையை வெளிப்படுத்திய சிஆர்பிஎஃப்-ன் 5 சௌரிய சக்ரா விருது பெற்றவர்களும், பிஎஸ்எப்-ன் 16 வீரதீரப் பதக்கங்களை வென்றவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

## தமிழக அரசின் 9 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல்



**சென்னை, அக்.31:** தமிழக சட்டப்பேரவையின் மழைக்கால கூட்டம் கடந்த அக்.14 முதல் அக்.17ம் தேதி வரை 4 நாட்கள் நடைபெற்றது. இதில் தனியார் பல்கலைகள், சித்த மருத்துவ பல்கலை. உருவாக்கும் சட்டம் உட்பட 18 சட்ட மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. முன்னதாக கடந்த 2022ம் ஆண்டு பிப்ரவரியில் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட நிதி பொறுப்புடைச் சட்ட மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல், மசோதாவை திருப்பி அனுப்பினார். அப்போது, "இன்னும் சில மாதங்களில் தேர்தல் நடப்பதால், அடுத்த நிதியாண்டுக்கும் நிதி ஒதுக்குவது சரியல்ல" என கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்நிலையில், இந்த மழைக்கால சட்டப்பேரவைக் கூட்டத்தில், ஆளுநரின் கருத்துக்களை நிராகரித்ததுடன், மசோதா மீண்டும் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டு ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. இந்நிலையில், இந்த மசோதா உட்பட 9 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

குறிப்பாக, தமிழ்நாடு நெடுஞ்சாலைகள், கடல் சார் வாரியம், தமிழ்நாடு மின் நுகர்வு அல்லது விற்பனை வரி திருத்த மசோதாக்கள், முன்னாள் எம்எல்ஏக்கள், எம்சி-க்களுக்கான ஓய்வூதிய உயர்வுக்கான தமிழ்நாடு சம்பளம் வழங்கல் திருத்த மசோதா, பல்வேறு வழக்கிழந்த சட்டங்களை நீக்குவதற்கான இரு சட்ட மசோதாக்கள் உள்ளிட்ட 9 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

## 'தமிழர்களுக்கும், பிஹார் மக்களுக்கும் பகை உண்டாக்கும் அற்ப அரசியல்'

### மோடிக்கு ஸ்டாலின் கண்டனம்

**சென்னை, நவ.1:** முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இந்த நாட்டிலுள்ள அனைவருக்குமான பிரதமர் பொறுப்பில் இருக்கிறோம் என்பதையே நரேந்திர மோடி அடிக்கடி மறந்து, இதுபோன்ற பேச்சுகளால் தன்னுடைய பொறுப்புக்குரிய மாண்பை இழந்துவிடக் கூடாது என்று ஒரு தமிழனாக வேதனையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒடிசா - பிஹார் என்று எங்கு சென்றாலும், பாஜகவினர் தமிழர்களின் மீதான வன்மத்தைத் தேர்தல் அரசியலுக்காக வெளிப்படுத்துவதற்குத் தமிழ்நாட்டு மக்களின் முதல்வர் என்ற முறையில் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பன்முகத்தன்மை கொண்ட, வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் பெருமைமிக்க இந்தியாவில், இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகையை வளர்ப்பது, தமிழர்களுக்கும் பிஹார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்வது போன்ற அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, நாட்டின் நலன் மீது பிரதமரும் பா.ஜ.க.,வினரும் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, நேற்று பிஹாரில் நடந்த பிரச்சார கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, "திமுக ஆளும் தமிழ்நாட்டில் திமுகவினர் பிஹாரைச் சேர்ந்த உழைக்கும் மக்களை துன்புறுத்துகின்றனர்" என்று குற்றம்சாட்டியிருந்தார்.

## அதிமுகவில் இருந்து செங்கோட்டையன் நீக்கம்: பழனிசாமி அதிரடி நடவடிக்கை



**சென்னை, நவ.1:** "அதிமுகவின் கொள்கை - குறிக்கோள்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டதாலும், கட்சியின் சட்ட திட்டங்களுக்கு மாறுபட்டு, கழகத்தின் ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்துகொண்டார். இந்தக் காரணங்களால் ஈரோடு புறநகர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டையன் (கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதி) இன்று முதல் அதிமுகவின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார். அதிமுகவினர் யாரும் இவருடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என கேட்டுக்கொள்கிறேன்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## புரிந்துணர்வு ஒப்பந்தம்



போர்டு நிறுவ னத்தின் உயர் அதிகாரிகள் உறுதியளித்தபடி, போர்டு நிறுவனம், ரூ.3250 கோடி முதலீட்டில் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், வாகன என்ஜின் உற்பத்தித் திட்டத்தை மீண்டும் தொடங்க உள்ளது. அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்றைய தினம், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முருகானந்தம், துறை செயலாளர் அருண் ராய், தலைமைச் செயல் அலுவலர் தாரேஸ் அகமது, போர்டு நிறுவனத்தின் உலகளாவிய இயக்குநர் மார்ட்டின் எவரிட், துணைத் தலைவர் மாத்யூ கோடி லூஸ்கி, தாய்லாந்து திட்டத்தின் மேலாண்மை இயக்குநர் சைமோநேட்டா வெர்டி, இயக்குநர் (உற்பத்தி) தீரஜ் தீக்சித், இயக்குநர் ஸ்ரீபாத் பட் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# திருக்குறள் குறள்-426

எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு



உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ, உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அவ்வாறு நடப்பதே அறிவாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



உருவத்தை காட்டும் கண்ணாடி....
அவர்களின் உள்ளத்தை காட்டும் தகுதியைப் பெற்றிருந்தால்
இன்று பலரின் போலி வேஷங்கள் என்றோ கலைந்து இருக்கும்....

**உஷா முத்துராமன்**

# 28- ஆம் ஆண்டு கந்த சஷ்டி பெருவிழாவில் சஹஸ்ரநாம அர்ச்சனை சிறப்பு வழிபாடு

**திருவண்ணாமலை,நவ.01:** திண்டிவனம் சாலை ஸ்ரீ அருணகிரிநாதர் சித்தர் பீடத்தில் எழுந்தருளியுள்ள சோ.கீழ்நாச்சிப்பட்டில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ அறிவுக்கோற்கையன் சுவாமி திருக்கோயிலில் கந்த சஷ்டி பூஜையில் சிறப்பு அலங்காரத்துடன் முருகனடிமை வேத வித்து சுவாமிகள் அவர்களால் நேற்று ஆலயத்தில் சஹஸ்ரநாம அர்ச்சனை வெகு சிறப்பாக நடைபெற்றது.

உற்சவருக்கு முருகர் வள்ளி தெய்வானை மயில் வாகனத்தில் வண்ணமலர் மாலைகளுடன் அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. வெகு சிறப்பாக நடைபெற்றது. சங்குகள் முழங்க, வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் மகா தீபாரதனையும் நடைபெற்றது.

பக்தர்கள் அரோகரா அரோகரா என்று முழுக்கமிட்டு சாமி தரிசனம் செய்தார்கள்.



பக்தர்கள் ஸ்ரீ முருகப்பெருமானை வேண்டி அருள் பெற்றனர். பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## குழந்தை திருமணம், போஸ்கோ சட்டம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி



சிதம்பரம் ரயில்வே பீடர் ரோட்டில் உள்ள அரசுப் பெண்கள் மேல்நிலை பள்ளியில் ரயில்வே போலீஸார் சார்பில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், குழந்தை திருமணம், போஸ்கோ சட்டம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.ரயில்வே காவல் நிலைய ஆய்வாளர் கார்த்திகேயன் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் கண்ணகி முன்னிலை வகித்தார்.மாவட்ட குழந்தைகள் நல அலுவலர் பார்த்தீபராஜ் ஆகியோர்பங்கேற்றார்கள்

## மாவட்ட மற்றும் மாநில நிர்வாகிகளுக்கான அறிமுக கூட்டம்




தமிழ்நாடு பாஜக உள்ளாட்சி மேம்பாட்டு பிரிவின் குமரி கோட்டத்திற்கான, மாவட்ட மற்றும் மாநில நிர்வாகிகளுக்கான அறிமுக கூட்டம் திருநெல்வேலியில் நேற்று நடந்தது.இதில் மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் துவக்கி வைத்தார்.

# இந்திரா காந்தியின் நினைவு தினம் மத்திய மாவட்ட காங்., சார்பில் அனுசரிப்பு!

**வேலூர், நவ. 1:** முன்னாள் பாரத பிரதமர் இந்தியாவின் இரும்பு மங்கை அன்னை இந்திராகாந்தியின் 41வது நினைவு தினம் 31.10.2025 வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் வேலூர் மத்திய மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் அனுசரிக்கப்பட்டது. நிகழ்விற்கு வேலூர் மத்திய மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.சுரேஷ்குமார் தலைமை தாங்கினார்.

மாவட்ட செயலாளரும், ஒன்றிய குழு உறுப்பினருமான செந்தில், RGPRS மாவட்ட தலைவர் ஆனந்தவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அன்னை இந்திராகாந்தியின் திருவுருவப் படத்திற்கு பேரணாம்பட்டு தெற்கு வட்டார தலைவர் சா.சங்கர், வேலூர் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவரும், பேரணாம்பட்டு மேற்கு வட்டார தலைவருமான



கிருஷ்ணவேணி ஜலந்தர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

RGPRS மாநில துணைத் தலைவர் ராஜசேகரன், மாநில சிறுபான்மையினர் பிரிவு ஒருங்கிணைப்பாளர் எம். டி.. ராகிப் ஆகியோர் முன்னாள் பாரதப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தியின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்வில் வேலூர் மத்திய மாவட்ட மகளிர் காங்கிரஸ் தலைவர் கோமதி குமரேசன் தீவிரவாத எதிர்ப்பு தின உறுதிமொழி வாசித்தார்.

நிகழ்வில் நிர்வாகிகள் கோவிந்தசாமி, ரஜினிகாந்த், மோகன்ராஜ், மகேஷ்வரன், விஜய்காந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



நாகர்கோவிலில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் கலெக்டர் அழகு மீனா ஆய்வு செய்தார்.

## 13 புதிய தார் சாலை அமைக்கும் பணியினை மஸ்தான் எம்எல்ஏ துவக்கி வைத்தார்




விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் ஒன்றியம் நகர் ஊராட்சியில் முதலமைச்சரின் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 723.00 லட்சம் மதிப்பீட்டில் 13 புதிய தார் சாலை அமைக்கும் பணியினை நேற்று அக்டோபர் 31 மஸ்தான் எம்எல்ஏ துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், மத்திய ஒன்றிய கழக செயலாளர் ரவிச்சந்திரன் மற்றும் திமுக கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்

## என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி குறித்து ஆலோசனை




விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காணை தெற்கு ஒன்றிய கிளை கழக செயலாளர் BLA2,BDA தேர்தல் பணிக்குழு கூட்டம் நேற்று அக்டோபர் 31 நடைபெற்றது. இதில் அன்னியூர் சிவா எம்எல்ஏ கலந்துகொண்டு என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.

## யாகசாலை பூஜைக்காக கடம் புறப்பாடு



சிதம்பரம் தில்லை கோவிந்தராஜ பெருமாள் மகா சம்ரோக்ஷணத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் இரவு (அக்-30) யாகசாலை பூஜைக்காக கடம் புறப்பாடு நடைபெற்றது. முன்னதாக கனகசபையில் நடராஜர் கோவில் பொது தீட்சிதர்கள் பெருமாள் கோவில் பட்டாச்சாரியார்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஊர்வலமாக யாகசாலை வரை அழைத்துச் சென்றனர். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## காலநிலை நடவடிக்கை கண்காணிப்பு தொடக்க விழா




சென்னையில் நடைபெற்ற, தமிழ்நாட்டுக்கான காலநிலை கரிமவாயு நீக்க வழிமுறைகள் மற்றும் காலநிலை நடவடிக்கை கண்காணிப்பு தொடக்க விழாவில் அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்றார்.

## பரமானந்த கூபம் கிணருக்கு சிறப்பு பூஜைகள்



சிதம்பரம் நடராஜர் கோவிலில் நேற்று மஹாநவமியை முன்னிட்டு கனக சபை அருகில் இருக்கும் பரமானந்த கூபம் என்று அழைக்கப்படும் கிணறுக்கு கங்கை வருவதாக ஐதீகம் அதை முன்னிட்டு நேற்று காலை பரமானந்த கூபம் கினருக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்தனர். கங்கைக்கு பூஜை செய்யும் ஒரே தலம் சிதம்பரம் என்பது சிறப்பம்சம் ஆகும்.

## பாமக தலைவர் அன்புமணி பொதுமக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரம்




சேலம் மாநகரத்தில் ஒடுகின்ற திருமணிமுத்தாறு முழுவதுமாக மாசடைந்து கழிவுநீர் ஆறாக ஓடுவதை தடுத்து நிறுத்தக்கோரி, தமிழக அரசை கண்டித்து பாமக தலைவர் அன்புமணி பொதுமக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தார்.

## மாசாணியம்மன் கோவில் உண்டியல் காணிக்கை



ஆனைமலை மாசாணியம்மன் கோவில் உண்டியல்கள் எண்ணப்பட்டதில் 22 லட்சத்து 4 ஆயிரத்து 224 ரூபாயை பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி இருந்தனர்.

# அன்னை இந்திராவின் 41- வது நினைவு தினம் அனுஷ்டிப்பு

**திருவாரூர், நவ.01:** வலங்கைமானில் வட்டார இளைஞர் காங்கிரஸ் சார்பில் அன்னை இந்திராவின் 41- வது நினைவு தினம் அனுஷ்டிப்பு.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் வடக்கு அக்ரஹாரம் சார் பதிவாளர் அலுவலகம் அருகே வலங்கைமான் வட்டார இளைஞர் காங்கிரஸ் சார்பில் இந்தியாவின் இரும்பு பெண்மணி, அன்னை இந்திராவின் 41- வது நினைவு தினம் வலங்கைமான் வட்டார இளைஞர் காங்கிரஸ் தலைவர் அப்துல் ரஹ்மான் தலைமையில், காங்கிரஸ் தொழிற்சங்கம் ஐஎன்டியுசி திருவாரூர் மாவட்ட தலைவர் குலாம் மைதீன் முன்னிலையில், சிறப்பு அழைப்பாளராக வட்டார சேவாதள தலைவர் கே.என். ஆர்.இளங்கோவன் அன்னாரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து,அன்னை இந்திரா நினைவுப் போட்டியில் பங்கு பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி அன்னை இந்திராவின் அரும் பெரும் சாதனைகளை விளக்கி பேசினார்கள்,

முன்னதாக சுவாமி நாதன் அனைவரையும் வரவேற்றார் அன்னை இந்திராவிக்கு



அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் முன்னதாக இந்திராவிக்கு அனைவராலும் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் இளைஞர்களும், மாணவர்களும், பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்.



## தேவர் திருவுருவசிலைக்கு சபாநாயகர் அப்பாவு மாலை

வள்ளியூர் புதிய பேருந்து நிலையத்தில் தேவர் திருவுருவசிலைக்கு சபாநாயகர் அப்பாவு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## தமிழகத்தில் நவ. 4 வரை மழை பெய்ய வாய்ப்பு!



**சென்னை, நவ.1:**

தமிழ்நாட்டில் நவம்பர் 4-ஆம் தேதி வரை மழைபொழிவு இருக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டின் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் மழை பெய்யலாம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னையை பொறுத்தவரை இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் கூறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தை விட, 2025 அக்டோபரில் வடகிழக்கு பருவமழை சுமார் 230 மி.மீ. அதிகமாக பெய்துள்ளது. இது இயல்பை விட 57 சதவிகிதம் அதிகமாகும். வங்கக்கடலில் மீண்டும் புயல்கள் உருவாவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாரதியார் பல்கலை.க்கு பதிவாளர் நியமனம்!

**கோயம்புத்தூர், நவ.1:**

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தின் பதிவாளராக பேராசிரியர் இரா.ராஜவேல் நியமிக்கப் பட்டு உள்ளார். பாரதியார் பல்கலைக் கழகம் வெளியிட்டு உள்ள அறிக்கையில், 9 ஆண்டுகளுக்கு மேலாக நிரந்தர பதிவாளர் பதவி நியமிக்கப்படாமல் இருந்து வந்த நிலையில், தற்போது முழு நேர நிரந்தர பதிவாளராக பேராசிரியர் இரா. ராஜவேல் நியமிக்கப்பட்டு உள்ளார் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## திருச்சி மாவட்ட அரசுப் பள்ளி மாணவர்கள் சாதனை

**திருச்சிராப்பள்ளி, நவ.1:**

திருச்சி மாவட்டத்தில் 2024-25 கல்வியாண் டில் பிளஸ் 2 முடித்த அர சுப் பள்ளி மாணவர்கள் 11 ஆயிரத்து 064 பேர் களில் 10 ஆயிரத்து 864 பேர் உயர்கல்வியில் சேர்ந்துள்ளனர். அதா வது, திருச்சி மாவட்ட அர சுப் பள்ளிகளில் பிளஸ் 2 முடித்த 98 சதவிகித மாணவர்கள் உயர்கல்வி யில் சேர்ந்து சாதனை படைத்துள்ளதாக மாவட்ட ஆட்சியர் சரவணன் தெரிவித்துள்ளார்.

## 60 கட்சிகளுக்கு அழைப்பு

**சென்னை, நவ.1:**

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி என்ற தேர்தல் ஆணையத்தின் சீர்குலைவு முயற்சியை முறியடிப்பது தொடர்பாக, நவம்பர் 2 அன்று முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை திமுக ஏற்பாடு செய்துள்ளது. இக்கூட்டத்திற்காக திமுக தலைமை நிலைய செயலாளர்களான பூச்சி முருகன், துறைமுகம் காஜா, ஆஸ்டின் ஆகியோர் ஒவ்வொரு அரசியல் கட்சியின் அலுவலகங்களுக்கும் சென்று அழைப்புக் கடிதம் வழங்கி வருகின்றனர். அந்த வகையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் அலுவலகங்களுக்கு வந்து பூச்சி முருகன் குழுவினர் அழைப்புக் கடிதத்தை வழங்கினர். இதேபோல, திராவிடர் கழகம், காங்கிரஸ், விசிக, மதிமுக, ம.ம.க., கொ.ம.தே.க., த.வா.கா., ம.நீ.ம., முஸ்லிம் லீக், ம.ஜ.க., முக்குலத்தோர் புலிப்படை ஆகிய திமுக கூட்டணி கட்சிகளுக்கு மட்டுமன்றி, பாமக (ராமதாஸ்), அமமுக, அதிமுக தொண்டர் உரிமை மீட்புக்குழு (ஓபிஎஸ்), த.வெ.க. த.மா.கா., தே.மு.தி.க., நாம் தமிழர் கட்சி, எஸ்டிபிஐ, த.ம.மு.க., உள்ளிட்ட 60 கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்தும் திமுக சார்பில் அழைப்புக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதிமுக, பாஜக, பாமக (அன்புமணி) ஆகிய மூன்று கட்சிகளுக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

# தமிழ் வளர்ச்சித் துறையில் 13 உதவி இயக்குநர்களுக்கான பணி நியமன ஆணை - அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்



**சென்னை, நவ.1:**

புதிதாகதேர்வுசெய்யப்பட்ட 13 உதவி இயக்குநர்களுக்கு திறன் மேம்பாட்டை உறுதி செய்வதற்காக பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தமிழ் வளர்ச்சித் துறையில் உதவி இயக்குநர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் வாயிலாகத் தேர்வு செய்யப்பட்ட 13 உதவி இயக்குநர்கள் அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் பயிற்சி பெற்றமைக்கான தகுதிச் சான்றுகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் இன்று (30.10.2025) வழங்கினார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

"தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழித் திட்டத்தை முழுமையாகவும் செம்மையாகவும் செயற்படுத்திடும் வகையில் 1958-ம் ஆண்டு ஆட்சிமொழிக் குழு உருவாக்கப்பட்டு, ஓர் ஆய்வுத் தனி அலுவலர் பணியிடம் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 1972-ல் இப்பணியிடத்துடன் சேர்த்து ஒன்பது ஆய்வுத் தனியலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டன. முத்தமிழறிஞர் கலைஞரால் தமிழ் வளர்ச்சித் துறையின் அலுவலகக் கட்டமைப்பு சீரமைக்கப்பட்டு தமிழாய்வு அலுவலர் என்ற பதவிப் பெயரினைமாற்றிஒருமுகமாக உதவிஇயக்குநர்பணியிடங்கள் என 1998-ம் ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டது.

இந்நிலையில், தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியதற்கிணங்க, தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக நிறைவு செய்திட அரசாணை வெளியிடப்பட்டது. இளங்கலை மற்றும் முதுகலை தமிழிலக்கியம் பயின்ற மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தேர்வு மற்றும் நேர்காணல் நடத்தப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட 13 நபர்களுக்குஉதவிஇயக்குநர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 22.09.2025 தலைமைச் செயலகத்தில் வழங்கினார். தமிழ் இலக்கியக் கல்வி கற்றவர்கள் தமிழ் வளர்ச்சித் துறையின் உதவி இயக்குநர்களாகப் பணி வாய்ப்புப் பெற்றுள்ளது தமிழுக்கான நற்காலம் மட்டுமல்லபொற்காலமுமாகும். புதியதாகத்தெரிவுசெய்யப்பட்ட 13 உதவி இயக்குநர்களுக்கு திறன் மேம்பாட்டை உறுதி செய்வதற்காகவும் காலத்திற்கேற்ப தேவையான பயிற்சிகள் வழங்கப்படுவது மிகுந்த அவசியத்தைக் கருதியும் தற்போது நடைமுறையில்உள்ள அரசுப் பணிகளுக்கான பொதுவான நடைமுறைகள் / விதிகளை அறிந்து செயலாற்றும் வண்ணம், தமிழ் வளர்ச்சித் துறை வரலாற்றில் முதன்முறையாக உதவி இயக்குநர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி பெற்றமைக்கான தகுதிச் சான்றுகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் இன்று (30.10.2025 வியாழக்கிழமை) அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரியில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ரெ.பாலகிருஷ்ணன், தமிழ் வளர்ச்சிஇயக்குநர் முனைவர் ந.அருள், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் உதவி இயக்குநர் ராகவேந்தர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவில் சொத்து விவரங்களை இணையத்தில் வெளியிட உத்தரவு

**சென்னை, நவ.1:**

தமிழ்நாடு முழுவதும் உள்ள கோவில்கள், மடங்கள், கட்டளைகளுக்கு சொந்தமாக உள்ள சொத்துக் கள், நிதி மற்றும் நிலங்கள் தொடர்பான விவரங்கள், அறநிலையத்துறையின் உத்தரவுகள், அரசாணை கள், டெண்டர் அறிவிக்கை கள் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் இணை யத்தில் வெளிப்படையாக வெளியிட வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத் தில் டி.ஆர். ரமேஷ் என்பவர் வழக்கு தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதி வி. லட்சுமி நாராயணன் முன்பு விசாரணைக்கு வந்தது. அறநிலையத்துறை தரப்பில், கோவில் நிலங்கள் தொடர்பான ஆவ ணங்களை இணையத்தில் பதிவேற்றம் செய்தால் அதன் மூலமாக முறைகேடுகள் நடைபெற



வாய்ப்புள்ளது என விளக்கம் அளிக்கப் பட்டது. ஏற்கெனவே, வருவாய்த்துறையின் 'தமிழ் நிலம்' என்ற இணைய தளம் வாயி லாக மாநிலத்தில் உள்ள நிலங்களின் வகைப்பாடு உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் பொது மக்கள் அறிய முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

நீதிபதி குறுக்கிட்டு, நகைகளை அணிந்து சென்றால் திருடர்கள் வழிப்பறி செய்து விடு வார்கள் என்பதற்காக யாரா வது தங்க நகை அணியாமல் செல்கிறார்களா என்று கேட்டார். கோவில்களின் சொத்துக்களை அனை வரும் தெரியும் வண்ணம் வெளியிடும்போது, நிலங் களை வாங்குபவர்கள் எச்ச ரிக்கையாக இருப்பார்கள் அல்லவா, என்று கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து, மனுதாரர் கோரியுள்ள அனைத்து விவரங்களும் சட்ட ரீதியாக பொது ஆவணங்கள் ஆகும். அவற்றை வெளி யிட முடியாது என மறுக்க முடியாது.

எந்தெந்த தகவல்கள் பதிவேற்றம் செய்ய முடியும், எந்தெந்த தகவல்கள் தற்போது பதி வேற்றம் செய்யப் பட்டுள்ளது என்பது குறித்து விரிவான பதில் மனுவை அறநிலையத்துறை கமி ஷனர் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். விசாரணை யை நவம்பர் 12-ஆம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

# சிஎம்எஸ்-03 செயற்கைக்கோள் நாளை விண்ணில் பாய்கிறது

**சென்னை, நவ.1:**

*கடற்படை, ராணுவப் பயன்பாட்டுக்கான சிஎம்எஸ்-03 செயற்கைக்கோள், ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்-3 ராக்கெட் மூலம் நாளை (நவம்பர் 2) விண்ணில் செலுத்தப்பட உள்ளது.*

*நாட்டில் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் இதுவரை 48 செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்தியுள்ளது.*

*அதில், கடந்த 2013-ஆம் ஆண்டு செலுத்தப்பட்ட ஜிசாட்-7 செயற்கைக்கோளின் ஆயுள்காலம் விரைவில் முடிவடைய உள்ளதால், அதற்கு மாற்றாக, சுமார் ரூ. 1,600 கோடியில் அதிநவீன சிஎம்எஸ்-03 செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது. இதுவரை புவிவட்ட சுற்றுப்பாதைக்கு ஏவப்பட்டதிலேயே இதுதான் அதிக எடை (4,400 கிலோ) கொண்ட தகவல் தொடர்பு செயற்கைக்கோள்.*




*ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரி கோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து எல்விஎம்-3 ராக்கெட் மூலம் இந்த செயற்கைக்கோள் நவம்பர் 2 அன்று விண்ணில் செலுத்த தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.*

*இறுதிகட்டப் பணியான கவுண்ட்டவுன் நவம்பர் 1 அன்று மாலை 5.26 மணி அளவில் தொடங்க இருக்கிறது. நவம்பர் 2 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.26 மணிக்கு செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படுகிறது.*

*ராக்கெட் விண்ணில் ஏவப்படுவதை பார்வையிடுவதற்காக ஸ்ரீஹரிகோட்டாவில் 10 ஆயிரம் பேர் அமர்ந்து பார்வையிடும் வகையில் பார்வையாளர்கள் மாடம் கட்டப்பட்டுள்ளது. இதில் அமர்ந்து எல்விஎம்-3 ராக்கெட் ஏவப்படுவதை பார்வையிட விரும்பும் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் https://lvg.shar.gov.in என்ற இணையதள முகவரிக்கு சென்று முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.*

*ராக்கெட் விண்ணில் ஏவப்படுவதையொட்டி ஸ்ரீஹரிகோட்டா அருகில் உள்ள பழவேற்காடு பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் நவம்பர் 2 அன்று கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என்று மீன்வளத்துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.*


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389




## நலம் தரும் மருத்துவம்

## ஒருமுறை பயன்படுத்திய எண்ணெயை மீண்டும் மீண்டும் பயன்படுத்தினால்...



நாம் எந்த அளவுக்கு உலகிற்கு பெட்ரோல், டீசல் முக்கியம் என பேசுகிறோமோ, அதை விட அதிகமாக சமையல் எண்ணெய் மிக முக்கியமானது. சமையல் எண்ணெய் (Cooking oil) எப்படி இருந்தாலும் அதை உணவில் சேர்க்கும் பழக்கம் மக்களிடம் உள்ளது. சமையல் எண்ணெய் தான் உணவிற்கு சுவையைக் கூட்டி உண்பதற்கு ஏற்ற பதத்தைக் கொடுக்கிறது. ஆனால் ஒருமுறை பயன்படுத்திய எண்ணெயை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதால் உடலுக்கு பல பாதிப்புகள் ஏற்படலாம்.

எண்ணெயின் விலை பன்மடங்கு இருப்பதால், ஒருமுறை பயன்படுத்திய எண்ணெயை இந்திய வீடுகளில் மீண்டும் மீண்டும் பயன்படுத்தும் வழக்கம் உள்ளது. இப்படி மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதால் என்ன பாதிப்புகள் ஏற்படும்? மற்றும் அந்த பாதிப்புகள் ஏற்படாத வகையில் எப்படி ஒரே எண்ணெயை மீண்டும் பயன்படுத்தலாம் என்பது பற்றி இந்த பதிவில் தெரிந்து கொள்ளலாம்.

ஒருமுறை பயன்படுத்திய எண்ணெயை மீண்டும் மீண்டும் பயன்படுத்தும்போது அதில் ஃப்ரீ ராடிகள்கள் உருவாகலாம். இது உடலில் வீக்கத்தை ஏற்படுத்தி பல நோய்களுக்கு வழிவகுக்கும். இது உடலில் உள்ள ஆரோக்கியமான உயிரணுக்களுடன் தன்னை இணைத்துக் கொண்டு உடல்நல பிரச்னைகளை ஏற்படுத்தும். இது சில சமயங்களில் புற்றுநோய் செல்களாக மாறி, தீவிர பாதிப்பைக் கொடுக்கலாம்.

மேலும் ஒரே எண்ணெயை மீண்டும் மீண்டும் பயன்படுத்தும்போது அதன் அமிலத்தன்மை அதிகரித்து, அல்சர், இதய நோய், பார்க்கின்சன், தொண்டையில் எரிச்சல் உள்ளிட்ட பாதிப்புகளை ஏற்படுத்தும். எனவே, மீண்டும் மீண்டும் ஒரே எண்ணெயை பயன்படுத்தக் கூடாது என்பது பரிந்துரைக்கப்படுகிறது. இருப்பினும் சில எண்ணெய் வகைகளைப் பொறுத்து, அவை எந்த முறையில் சமைக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து மீண்டும் பயன்படுத்தலாம்.

சமையல் எண்ணெயை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளைக் குறைக்க, ஒருமுறை பயன்படுத்திய எண்ணெயை நன்றாக குளிர்வித்து, வடிகட்டி, காற்று நுழையாத பாட்டிலில் சேமிக்க வேண்டும். இப்படி செய்வதால் எண்ணெயை பாதிக்கும் துகள்கள் அகற்றப்படுகிறது.

அதேபோல ஒரு முறை பயன்படுத்தி எண்ணெய் எந்த நிறத்தில் இருக்கிறது என்பதை கவனியுங்கள். அது ஒரு கிரீஸ் நிறத்தில் தடிமனாக இருந்தால் நிச்சயம் அதைப் பயன்படுத்தக் கூடாது.

மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்ட எண்ணெய் சூடாகும்போது அதிலிருந்து புகை வந்தால், ஒருபோதும் அதை பயன்படுத்தக் கூடாது. எண்ணெயில் நச்சுப்பொருள் சேர்ந்தால் மட்டுமே சூடு படுத்தும்போது புகை வரும். எனவே, இது பல நோய்களுக்கு வழிவகுக்கும்.

எனவே, சமையலுக்கு தரமான எண்ணெயை தேர்ந்தெடுத்து பயன்படுத்துங்கள். ஏதோ ஒரு எண்ணெய் பயன்படுத்தலாம் என நினைத்து மீண்டும் மீண்டும் எதைப் பற்றியும் கவலைப்படாமல் பயன்படுத்திக் கொண்டிருந்தால், நிச்சயம் உங்களுடைய உடல் நலத்தை அது பாதிக்கலாம்.

# மாமன்னன் ராஜராஜ சோழனின் 1040வது சதய விழா துவக்கம்





**தஞ்சை, நவ.1:**

தஞ்சையில் உலக பிரசித்தி பெற்ற பெரியகோயில் உள்ளது. இது இன்றும் கட்டிட கலைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சியே இல்லாத அந்த காலத்தில் 1,000 ஆண்டுகளுக்கு முன் மாமன்னன் ராஜராஜ சோழன், பெரிய கோயிலை கட்டினார். பெரிய கோயிலுக்கு தினம்தோறும் தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலம், வெளிநாடுகளில் இருந்து ஏராளமான பக்தர்கள், சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். இந்நிலையில் தஞ்சை பெரிய கோயிலை கட்டிய ராஜராஜ சோழன் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தன்று பிறந்ததால் ஒவ்வொரு ஆண்டும் ஐப்பசி மாதத்தில் வரும் சதய நட்சத்திரத்தன்று சதய விழா அரசு சார்பில் விமரிசையாக 2 நாட்கள் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி இந்த ஆண்டு 1040வது சதய விழா நேற்று (31ம் தேதி) துவங்கியது. முதல் நாளான இன்று காலை 8.15 மணியளவில் தஞ்சை அரண்மனை வளாகத்தில் இருந்து நாட்டுப்புற கலைஞர்கள் பங்குபெற்ற மாபெரும் சதய விழா ஊர்வலம் நடந்தது. பின்னர் கோயில் வளாகத்தில் 400 கலைஞர்கள் பங்கேற்ற பரதநாட்டிய புஷ்பாஞ்சலி நடந்தது. இதைதொடர்ந்து மங்கள இசையுடன் விழா துவங்கியது.

இரண்டாம் நாளான இன்று காலை 6.30 மணிக்கு மங்கள இசை, 7 மணிக்கு கோயில் பணியாளர்களுக்கு புத்தாடை வழங்குதல் நிகழ்ச்சி நடக்கிறது. காலை 7.20 மணிக்கு மாமன்னர் ராஜராஜன் உருவச்சிலைக்கு மாலை அணிவித்தல், காலை 8 மணிக்கு திருமுறை வீதியுலா நிகழ்ச்சி நடக்கிறது. தொடர்ந்து தருமபுர ஆதீனம் 27வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பிரமாச்சாரியார் சுவாமி தலைமையில் பெருவுடையார், பெரியநாயகி அம்மனுக்கு மதியம் 1 மணி வைர பேரபிஷேகம் நடக்கிறது.

மாலை 6 மணிக்கு 4 ராஜவீதிகளில் 50க்கும் மேற்பட்ட கலைஞர்களின் இன்னிசையுடன், மயிலாட்டம், ஒயிலாட்டம் முதலிய கிராமிய கலைநிகழ்ச்சிகளுடன் பெருவுடையார், பெரியநாயகி உருவ செப்பு திருமேனிகள் வெள்ளி ரிஷப வாகனத்தில் வீதியுலா நடக்கிறது. இரவு 7.05 மணிக்கு விருது வழங்கும் விழா நடக்கிறது.

சதய விழாவையொட்டி தஞ்சை மாவட்டத்துக்கு நாளை உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளது.

விழாவையொட்டி தஞ்சை பெரிய கோயில் முழுவதும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதனால் தஞ்சை நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528

## ரூ.50,000-க்கு மேல் செலவு: தீபாவளிக்கு கிரெடிட் கார்டு பயன்பாடு அதிகரிப்பு

**சென்னை, நவ.1:**

இந்த தீபாவளி பண்டிகையின் போது பிளிப்கார்ட், அமேசான் போன்ற ஆன்லைன் வணிக நிறுவனங்கள் கிரெடிட் கார்டு, டெபிட் கார்டுகளுக்கு பல்வேறு சலுகைகளை அறிவித்திருந்தன. 91 சதவீதம் பேர் இந்த கார்டுக்கான கேஷ் பேக் ஆபர் களை மனதில் வைத்து இந்த தீபாவளிக்கு பொருட்களை வாங்க வேண்டும் என திட்ட மிட்டிருந்தனர்.

இதேபோன்று 48 சதவீதம் பேர் ஆன்லைன் மற்றும் ஆப் லைன் ஆகிய இரண்டின் வழி யாகவும் தீபாவளிக்கு தேவை யான பொருட்களை தேர்வு செய்தனர்.

இதுதொடர்பாக பைசாபஜார் நடத்திய ஆய்வில் தெரியவந் துள்ளதாவது: கிரெட்டிட் கார்டு மூலம் கடன் வாங்கி இந்த தீபாவளியை பலர் மகிழ்ச்சியாக கொண்டாடி உள்ளனர். குறிப்பாக, 42 சதவீதம் பேர் இந்த ஆண்டு தீபாவளி பண்டிகையின்போது தங்களது ஷாப்பிங்கிற்காக ரூ.50,000-க் கும் மேல் செலவிட்டுள்ளது ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது நுகர்வோரிடையே அதிக பொருட்களை வாங்க வேண்டும் என்ற ஆர்வத்தை அடிக்கோடிட்டு காட்டுவதாக உள்ளது. 22% பேர் ரூ. 50,000 முதல் ரூ. 1 லட்சம் வரை செலவிட் டுள்ளனர், அதே நேரத்தில் 20% பேர் இந்த தீபாவளியின் போது ரூ.1 லட்சத்திற்கு மேல் தங்கள் கிரெடிட் கார்டுகளில் செலவிட்டுள்ளனர்.

2,300 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில் அதிகபட்சமாக ஹோம் அப்ளையன்சஸை 25% பேரும், அதற்கு அடுத்த படியாக மொபைல் கேட்ஜெட்டு களை 23% பேரும், ஆடைகளை 22% பேரும் வாங்கியுள்ளனர். அதிக சலுகைகள் வழங்கப் படுவதன் காரணமாக கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்துவது அதிகரித்து வருவது கணக் கெடுப்பு மூலம் தெரியவந் துள்ளது. இவ்வாறு பைசாபஜார் தெரிவித்துள்ளது.

## பாரத் பே நிறுவன மனிதவள அதிகாரியாக ஹர்ஷிதா நியமனம்

**புதுடெல்லி, நவ.1:**

பின்டெக் நிறுவனமான பாரத்பே நிறுவனத்தின் புதிய தலைமை மனிதவள அதிகாரியாக (சிஎச் ஆர்ஓ) ஹர்ஷிதா கன்னா நேற்று நியமிக்கப்பட்டார்.

இதுகுறித்து பாரத்பே தலைமை செயல் அதிகாரி நலின் நெகி கூறுகையில்,"உயர்செயல் திறன் கலாச்சாரத்தை உருவாக்குவதில் அவர் முக்கிய பங்கு வகிப்பார்" என்றார். இதே போன்று என்ஐஐடி நிறுவனத்தில் ஷில்பா துபா புதிய சிஎச் ஆர்ஓ-வாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் மேக்ஸ் லைப் இன்சூரன்ஸ், வால்மார்ட், ஹிந் துஸ்தான், கோகோ-கோலா, ஜிஎஸ்கே போன்ற நிறுவனங் களில் பணியாற்றியுள்ளார்.

# திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதி: இந்திய அளவில் தொடர்ந்து முதலிடம்

**திருப்பூர், நவ.1:**

கடந்த நிதியாண்டான 2024-25-ம் ஆண்டில் இந்தியாவின் பின்னலாடை ஏற்றுமதி ரூ.65 ஆயிரத்து 178 கோடிக்கு நடந்தது. இதில் திருப்பூரில் இருந்து ரூ.39 ஆயிரத்து 618 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது. இது இந்தியா அளவில் திருப்பூரின் பங்களிப்பு 61 சதவீதம் ஆகும்.

2023-24ம் ஆண்டில் இந்தியாவின் ஏற்றுமதி ரூ.55 ஆயிரத்து 798 கோடிக்கு நடந்தது. இதில் திருப்பூரின் பங்களிப்பு ரூ.33 ஆயிரத்து 45 கோடியாகும். நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை என கடந்த 5 மாதங்களில் இந்தியாவின் ஏற்றுமதி ரூ.29 ஆயிரத்து 899 கோடியாகும். இதில் திருப்பூரின் பங்களிப்பு ரூ.18 ஆயிரத்து 238 கோடியாகும். ஏப்ரல் மாதம் ரூ.3 ஆயிரத்து 260 கோடியும், மே மாதம் ரூ.3 ஆயிரத்து 924 கோடியும், ஜூன் மாதம் ரூ.3 ஆயிரத்து 622 கோடியும், ஜூலை மாதம் ரூ.3 ஆயிரத்து 834 கோடியும், ஆகஸ்ட் மாதம் ரூ.3 ஆயிரத்து 598 கோடிக்கும் ஏற்றுமதி நடந்துள்ளது.



இது குறித்து திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதியாளர்கள் கூறுகையில், "நாட்டின் மொத்த பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூர் 61 சதவீத பங்களிப்பை வழங்கி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது" என்றனர்.

# வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவாக வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்



**சென்னை, நவ.1:**

இன்று வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், நேற்று (31-10-2025) தெற்கு மியான்மார் கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு அந்தமான் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, மத்தியகிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 48 மணி நேரத்தில் உருவாகக்கூடும். கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்று முதல் நவ.2ம் தேதி வரை தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும். ஓரிரு இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது.

03-11-2025: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

04-11-2025: தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

05-11-2025 மற்றும் 06-11-2025: தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு:

இன்று (01-11-2025): வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 35° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

வங்கக்கடல் பகுதிகள்:

31-10-2025 மற்றும் 01-11-2025: அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும், இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

02-11-2025: மத்தியகிழக்கு வங்கக்கடலின் கிழக்கு பகுதிகள் மற்றும் அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

03-11-2025: மத்தியகிழக்கு மற்றும் அதனை ஒட்டிய வடகிழக்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

04-11-2025: மத்தியகிழக்கு வங்கக்கடல் பகுதிகள், வடகிழக்கு, அதனை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

அரபிக்கடல் பகுதிகள்:

மத்தியகிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், நேற்று (31-10-2025) காலை 08.30 மணி அளவில் அதே பகுதிகளில் நிலவுகிறது.

இது, அடுத்த 24 மணி நேரத்திற்கு குஜராத் வடக்கு கொங்கன் கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மத்தியகிழக்கு வடகிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

02-11-2025: குஜராத் கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய வடகிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

03-11-2025 மற்றும் 04-11-2025: எச்சரிக்கை ஏதுமில்லை". இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பள்ளிக்கரணையில் குடியிருப்பு வளாகம் கட்டக் கூடாது: ஐகோர்ட் உத்தரவு!!

**சென்னை, நவ.1:**

சதுப்பு நிலமான பள்ளிக்கரணை பெரும்பாக்கத்தில் பிரிகேட் அடுக்குமாடி குடியிருப்பு கட்டக்கூடாது என சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் அடுக்குமாடி கட்ட அனுமதி அளித்த உத்தரவை ரத்து செய்யக்கோரியும், சதுப்பு நிலத்தை சுற்றி ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்கு எந்த கட்டுமான பணிகளுக்கும் அனுமதி அளிக்கக்கூடாது என்ற கோரியும் அதிமுக வழக்கறிஞர் அணி நிர்வாகி ப்ரஸ்நெவ் சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்தார்.

அதில், சுற்றுச்சூழலுக்கு பல்வேறு நன்மைகளை ஏற்படுத்தும் சதுப்பு நிலத்தில் கட்டுமானப் பணிக்கு சட்ட விரோதமாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. மத்திய அரசால் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்ட சதுப்பு நிலத்தில் தனது அதிகார எல்லையை மீறி தமிழக அரசு அனுமதி அளித்துள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று ஐகோர்ட் தலைமை நீதிபதி அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில், "கட்டப்படும் கட்டடத்திற்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அனுமதி வழங்கி உள்ளது. சதுப்பு நிலத்தில் எல்லையை துல்லியமாக தீர்மானிப்பது குறித்த ஆய்வு 2 வாரத்தில் முடிவடையும்" என வாதங்கள் முன் வைக்கப்பட்டது. பின்னர் ஐகோர்ட் நீதிபதிகள், "சுப்ரீம்கோர்ட், பசுமைத் தீர்ப்பாய உத்தரவுகள் தெரியாமல் சிஎம்டிஏ கட்டுமானத்துக்கு அனுமதித்தது எப்படி?. பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதியில் குடியிருப்பு வளாகம் கட்டும் பணி மேற்கொள்ளக் கூடாது. நவம்பர் 12ம் தேதிக்குள் தமிழக அரசு, மத்திய அரசு பதில் அளிக்க வேண்டும்," என உத்தரவிட்டனர்.

## ஓஆர்எஸ்எல், ஓஆர்எஸ்எல் பிளஸ் என பெயர் அச்சிட்டு மருந்தகத்தில் விற்பனை செய்ய தடை!!

**சென்னை, நவ.1:**

ஓஆர்எஸ்எல், ஓஆர்எஸ்எல் பிளஸ் என பெயர் அச்சிட்டு மருந்தகத்தில் விற்பனை செய்ய சுகாதாரத் துறை தடை விதிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் ஓஆர்எஸ் என்ற பெயரில் பானங்களை அனுமதியின்றி விற்பனை செய்ய ஒன்றிய அரசு கடந்த வாரம் தடை விதித்திருந்தது. இந்நிலையில், ஓஆர்எஸ் என்ற பெயரில் போலி பானங்களை விற்பனை செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மாவட்டங்களில் உள்ள மருந்தகம் உள்ளிட்டவற்றில் நேரடியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க மாவட்ட உணவுப் பாதுகாப்புத் துறை அலுவலர்களுக்கும் சுகாதாரத் துறை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஓஆர்எஸ்எல், ஓஆர்எஸ்எல் பிளஸ், ஓஆர்எஸ் ஃபிட் என்ற பெயர்களில் பானங்களை மருந்தகங்களில் விற்பனை செய்யக் கூடாது என்று சுகாதாரத் துறை தடை விதித்துள்ளது. மேலும், உலக பொது சுகாதார நிறுவனத்தால் வழங்கப்படும் அங்கீகாரம் அச்சிடப்பட்ட ஓஆர்எஸ் மட்டுமே விற்பனை செய்யப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகம் உள்ளிட்ட நாடு முழுவதும் ஓஆர்எஸ்எல் என்று பெரிய கொட்டை எழுத்துகளில் அச்சிடப்பட்ட போலியான பானங்கள் பல்வேறு வண்ண நிற பெட்டிகளில் விற்பனையாகி வந்தது. அதில், கடைசியாகக் கீழே, இவை ஓஆர்எஸ் இல்லை என்று அச்சிடப்பட்டிருப்பதையும் காண முடியும்.

## தமிழ்நாட்டில் ஏழு ஐஏஎஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு..!!

சென்னை: தமிழ்நாட்டில் ஏழு ஐஏஎஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

1.மனித உரிமைகள் ஆணையத்தின் செயலாளராக கண்ணன் ஐ.ஏ.எஸ். பணியிட மாற்றம். 2.கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் அம்ரித், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குனராக மாற்றம் 3.சென்னை ஆறுகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை உறுப்பினர் செயலராக லீலா அலெக்ஸ் நியமனம் செய்யப்பட்டார். 4.பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணைய இணை மேலாண்மை இயக்குநராக கவிதா ஐ.ஏ.எஸ். நியமனம். 5.கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளராக மு.வீரப்பன் நியமனம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு. 6.உயர்கல்வித் துறை துணைச் செயலாளராக ரேவதியை நியமனம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு.

7.தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமை இயக்குநராக சி.முத்துக்குமரன் நியமனம்

# "குத்தாட்டம்"



அவனை "முருகன்" என்று சொல்வதை விட "குத்தாட்ட முருகன்" என்று சொன்னால்தான் அந்த ஊரில் எல்லோருக்கும் தெரியும்.
ஊரில் எந்தத் தெருவில், எந்த வீட்டில் சாவு விழுந்தாலும் முதல் ஆளாகச் சென்று தாரை தப்பட்டைகாரர்களுக்கு மத்தியில் புகுந்து போடுவான் பாரு ஒரு குத்தாட்டம்... சாவுக்கு வந்திருந்த அனைவரும் சோகத்தை மறந்து அவன் ஆட்டத்தை ரசிப்பர்.
குழந்தை ஆட்டத்தில் துவங்கி, பாலகனாய் ஆடி, இளைஞனாய் மாறி, நடுத்தர வயதுக்காரன் போல் நடனமாடி, கடைசியில் வயதானவனாய் நடித்து விழுவான்.
ஒரு மனிதனின் மொத்த வாழ்க்கையையும் ஆட்டத்திலேயே காட்டுவான். ஊருக்கு வெளியே ஒரு புறம்போக்கு நிலத்தில் குடிசை கட்டி வாழும் அவனுக்குச் சொந்தமென்று யாரும் இல்லை. தனிமரம். யாராவது அவனிடம் பிறப்பு வளர்ப்பு பற்றி விசாரித்தால் "ஹே... நான் தனி மனிதனாக்கும்... அது!" என்பான் அஜித் ஸ்டைலில். கடந்த பத்துப் பதினைந்து வருடங்களாக அவன் அந்த ஊரில்தான் இருக்கிறான். கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சாவுகளில் குத்தாட்டம் போட்டிருக்கிறான்.
சவ ஊர்வலம் துவங்கி, சாலையில் ஊர்ந்து, சுடுகாட்டை அடையும் வரை அந்த ஊர்வலத்தின் முன்புறம் நின்று ஆடிக் கொண்டே செல்வான். எல்லாக் காரியங்களும் முடிந்த பிறகு தலையைச் சொறிந்துக் கொண்டு நிற்பவனுக்கு ஒரு பெரிய தொகை கிடைக்கும்.
அந்தக் குத்தாட்ட முருகன்தான் இன்று மரணித்திருந்தான்.
ஊரே அவன் குடிசைக்கு முன் கூடி "த்சொ... த்சொ..." என்று பரிதாபம் காட்டியதே தவிர யாருக்குமே அந்தச் சவத்தை என்ன செய்வது?... யாருக்குத் தகவல் சொல்வது?... என்றே புரியவில்லை.
நிதானமாய் நடந்து கூட்டத்தின் முன்பகுதிக்கு வந்த பஞ்சாயத்துத் தலைவர், மெல்லக் கனித்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.
"இந்த முருகன் யாரு?... எந்த ஊரு?... எந்த ஆளு?... என்பது யாருக்குமே தெரியாது!... ஆனா இவன் இந்த ஊரில் உள்ள எல்லோருக்குமே உறவுக்காரனாட்டம் பழகி இருக்கான்... உதவியிருக்கான்... எல்லா வீட்டுச் சாவிலும் முன்னாடி நின்னு காரியங்களைச் செய்திருக்கிறான்... அந்தச் சவத்தை ஆட்டத்தோடு வழியனுப்பி வெச்சிருக்கான்... அதனால ஊர்ப் பஞ்சாயத்து செலவுல இவன் சவத்தை முறையான சடங்குகளோடு எடுத்திடலாம்!ன்னு நான் நினைக்கிறேன்"
ஒட்டு மொத்தப் பேரும் ஒப்புதல் அளிக்க, அந்த குடிசை முன் பந்தல் போடப்பட்டது. சவத்தை எடுப்பதற்கான வேலைகள் "மள...மள"வென்று செய்யப்பட முருகனின் கடைசிப் பயணத்திற்கான தேரும் கட்டப்பட்டது.
"ஏதோ ஒண்ணு... குறையுதே?" பஞ்சாயத்து தலைவர் சொல்ல.
"வேறென்ன?... குத்தாட்டம்தான்!... நூற்றுக்கணக்கான சவங்களைத் தனது குத்தாட்டத்தோடு வழியனுப்பி வெச்ச முருகன் சவத்துக்கு குத்தாட்டம் இல்லாமப் போச்சே!" பள்ளிக்கூட வாத்தியார் வருந்தினார்.
"ஏன் இல்லை?... நாங்க ஆடறோம்!" ஊர் இளைஞர்கள் சிலர் முன் வர, தங்கள் வீட்டுச் சாவுக்கு முருகன் வந்து ஆடியதற்கு நன்றி சொல்லும் விதமாய் சில நடுத்தர வயதுக்காரர்களும் முன் வர, பெண்களும் களமிறங்கினர்.
அடுத்த சில மணித்துளிகளில் கிளம்பிய முருகனின் சவ ஊர்வலத்தில் ஊர் மக்கள் அனைவருமே, ஆண் பெண் வித்தியாசமின்றி ஆடித் தீர்த்தனர்.
விண்ணுலகிலிருந்து இதை பார்த்த முருகனின் ஆன்மா கையெடுத்துக் கும்பிட்டு தன் நன்றியைச் செலுத்தியது.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# மௌனப் புன்னகை

சூரிய ஒளி சுள்ளென்று சுட்டெரிக்க, விடாது பெய்த அடைமழையில், ஒரு வாரமாய் வீட்டுக்குள்ளே முடங்கியவர்கள் வேலைக்கு செல்ல வெளியே தலைகாட்டினார்கள், குடிசை வீட்டிற்குள் முடங்கி இருந்த கருப்புக்குயில் சாந்தி வெளியே வந்து ஒற்றையாய் நின்றாள்.
கருத்த கலையான முகம். சிறுத்த குள்ளமான உருவம். குடிசை வீடு. தெரு எங்கும் தேங்குகின்ற மழை நீர். வெளியே வந்து நின்று வேடிக்கை பார்த்த சாந்தியின் ஒட்டுமொத்த உருவமும் கண்ணாடியில் தெரிவதுபோல் தண்ணீரில் தெரிந்தது.
கையில் நோட்டு புத்தகத்தைத் தூக்கிப்பிடித்துத் தண்ணீரில் நீந்தி நடந்த செவ்வேலுவைப் பார்த்து, வைத்த கண் வாங்காமல் சின்ன சிரிப்பைச் சிந்தி விட்டு, குனிந்து கீழே இருந்த உடைந்த பானை ஓடுகளில் ஒன்றை கையில் எடுத்து, தேங்கி நின்ற தண்ணீரில் தெறிக்க விட்டாள்.
தத்தி தத்தி தண்ணிரில் பட்டு, அவன் உடல் முழுக்க தண்ணீரை வாரி தெறித்தது பானை ஓடு.
சுற்றும் முற்றும் பார்த்தான் யாருமில்லை. சின்னதாய் சிரித்து, "வெளியே கிளம்பலையா?" என சத்தம் இல்லாமல் கேட்டான்.
"இல்ல, தண்ணியா இருக்கு. நீ போயிடுவ... நான் போக முடியுமா..?" எனத் திருப்பிக் கேள்வியாகக் கேட்டாள்.
"சில்லுனு இருக்கு... குளிருது..." என்றான்.
"அதுக்கு நான் என்ன பண்ண முடியும்..? போயிட்டு வா.. இல்ல, வீட்ல படுத்துத் தூங்க வேண்டியதுதானே.." என கிண்டலாகப் பதில் சொன்னாள் சாந்தி.
"சாந்தி, இங்க வாடி... நேரம் ஆகுது... நீ பாட்டு போய் வெளிய நின்னுகிட்டு, யார்கூடடி பேசிகிட்டுயிருக்க" எனச் சத்தம் போட்ட தாயின் குரலுக்குப் பயந்து பதில் சொல்வதுபோல்,
"நீ கிளம்பும்மா, நான் இன்னைக்கு போகல. தண்ணியா இருக்கு" ன்னு சத்தமா தான் வெளியே போகவில்லை என்பதை உரக்கச் சொல்லி உறுதிப்படுத்தினாள் சாந்தி.
இடுப்பளவு தண்ணீரில் மெதுவாக நடந்து, திரும்பி அவள் முகத்தைப் பார்த்து, சின்னதாய் சிரிப்பைச் சிந்தி, சாலையைக் கடந்தவனை, மெல்ல கையசைத்து அனுப்பி விட்டு உள்ளே சென்றாள்.
மாலை நேரம்.
"வீட்டைச் சூழ்ந்து நிற்கும் மழைநீரில் வாழ்வது கடினம் என முடிவெடுத்த சாந்தியின் அம்மா, அப்பா தன் தம்பியோடு மூட்டை முடிச்சியை தலையில் சுமந்தபடி இடுப்பளவு தண்ணீரில் நீந்திக் கடந்து நடந்து வந்து கொண்டிருந்தார்கள் செவ்வேலுக்கு எதிரில்.
கல்லூரி முடித்து ஒற்றை நோட்டோடு வீட்டை நோக்கி வந்தவன், தேங்கிய மழை நீரில் இறங்கி, நீந்திச் சாந்தியை கடக்கும்போது,
சாந்தி சொன்னாள்
"வீட்ட பாத்துக்க. வாடகை வீட்டுக்குப் போறோம். தண்ணி வத்தட்டும். திரும்பி வந்துடுவோம்" எனச் செல்லமாய் தேங்கிய தண்ணீரில் கைப்பிடி தண்ணீரை வாரி அவன்மீது வீசி, "மூஞ்சப் பாரு, கொஞ்சம் சிரியான். எங்க அம்மா என்ன சிங்கம்மா, இல்ல புலியா, உன் அத்தைதானே, நான் அத்தை பொண்ணுதானே" ன்னு செல்லமா சாந்தி நடந்து கொண்டே பேச..
"வாயாடி... பேய் இருந்த வீட்டுக்கு ஒன்னும் ஆகாது. பத்திரமா போயிட்டு வா.." என அவன் பதில் சொல்ல,
"பேயா... பேயின்னு யார சொல்ற..? என்னையா, இல்ல, என் அம்மாவையா.." என்று கொஞ்சம் கோபம், கொஞ்சம் சிரிப்போடு கேட்க...
"நீ எப்படி வேணும்னாலும் எடுத்துக்கோ.."ன்னும் வேகமாகச் செவ்வேல் நடக்க,
ஆத்திரத்தோடு தண்ணீரை வாரிச் செவ்வேல் மீது தெளித்தாள் சாந்தி.
"அங்கே என்னடி..."ன்ன சாந்தியின் தாய் அதட்ட,
"ஒன்னும் இல்லம்மா... உங்க அண்ணன் பையன் சும்மா போக மாட்டேங்கிறான் பேயின்னு சொல்றாம்மா உன்ன." எனப் போட்டுக்கொடுத்தாள் சாந்தி.
"பேய் பொறந்த வீட்டுக்கு வாக்கப்பட்டு வருவேன்னு சொல்லுடி... அப்பறம் பாரு... கம்முன்னு இருப்பான் ' என பதில் சொன்னாள் சாந்தியின் தாய்.
அம்மா சொன்ன சொல் சாந்தியின் காதில் தேன் வந்து பாய்ந்ததுபோல் இருந்தது,மெல்ல புன்னகைத்தாள் . மௌனத்தால் மலர்ந்தாள் சாந்தி...?





- கயப்பக்கம்
இரா.இரமேஷ்

# வாழ்ந்தே தீருவோம் நகரும் நிழல்கள்

அத்தியாயம் -26



■முனைவர்
க. அன்பழகன் (ஹரணி)
கரந்தை.தஞ்சாவூர்

## நேர்மை துணிவிருந்தால்...




இந்த ஹோட்டல் எளிமையா இருக்கு. நல்லா இருக்கு. ஆனா இன்னும் நல்லா செய்யலாம் என்று பீடிகை போட்டார்..
ஏன் சார்? என்ன குறை சார்? என்றார் சற்றே பதற்றத்துடன்.
சின்ன இடம் ஆனா அழகாக வச்சிருக்கீங்க.. இன்னும் இதைக் கொஞ்சம் அழகுபடுத்தலாம். ஒவ்வொரு டேபிளுக்கும் ஓர் ஆளுன்னு இன்னும் ரெண்டுமூணு பேர வேலைக்கு வைக்கலாம். ஒரு டேபிள்ல ஆர்டர் கொடுத்தா அதிகப்பட்சம் பத்து நிமிஷத்துக்குள்ள கேட்ட உணவு டேபிளுக்கு வந்துடணும்.. கேட்கும்போதும்.. வைக்கும்போதும் கொஞ்சம் தன்மையாப் பேசணும்.. இதை முதல்ல சரிப்பண்ணா இன்னும்கூட்டம் வரும்.. ஒரு டேபிள்கூட காலியா இருக்காது.. அப்புறம் டேபிள்கிட்ட நிக்கறவர் கொஞ்சம் சுத்தமா இருக்கணும். அவர் முகத்தப் பார்த்தா சாப்பிடறத வாந்தி எடுக்கமாதிரி இருக்கக்கூடாது.. நிறுத்தினார் மாதவன்.
கல்லாவில் உட்கார்ந்திருந்தவர் கல்லாவை விட்டு இறங்கி மாதவன் அருகில் வந்து.. ரொம்ப நன்றி சார்.. நான் செஞ்சுடறேன். சார்.. நீங்க் எங்க சார் இருக்கீங்க? என்றார்.
மாதவன் சொன்னார்.. நான் சென்னைக்குப் புதிசு. ஆனா நிருவாகம் பண்றதுல பழசு. நிறைய அனுபவர். முப்பத்து ஐந்து ஆண்டுகள் அனுபவம். அரசு ஊழியன். போதுங்கற அளவுக்குப் பென்ஷன் வருது. ஆனாலும், நாலுபேருக்கு நல்லது செய்யணும்..சோம்பேறியா உக்காரக்கூடாது.. உங்களுக்கு ஆட்சேபனை இல்லண்ணா எனக்கு இங்க ஒரு வேலை கொடுங்க.. நான் சொன்னதை எல்லாம் செஞ்சு காட்டறேன்.. என்றார். அதுக்காக நான் பென்ஷன் வாங்கறதால இலவசமா வேலை செய்யமாட்டேன்.. உங்களால என்ன கொடுக்கமுடியுமோ கொடுங்க.. காலையிலேர்ந்து இரவு வரைக்கும் இருக்கேன்.. என்றார் மாதவன்.
அப்படியே மாதவன் கைகளைப் பிடித்துக்கொண்டார்.. நீங்க எங்கப்பா மாதிரி பேசறீங்க சார்.. இருங்க சார்.. நாளையிலேர்ந்து வாங்க நீங்க என்ன சொல்றீங்களோ அதைக் கேக்கறேன்..
சரி நாளையிலேர்ந்து வரேன்.. மாதவனும், சிவராமனும் வெளியில் வந்தார்கள்.
என்னங்க ஐயா இது? என்றான் குழப்பமாக.
முன்வினைப் பயன் உன்னோட என்னோட சொச்ச வாழ்க்கைன்னு போட்டிருக்கு.. என் மேல நீ காட்டுன அன்புக்கு நன்றி செய்யணும்.. உன்னோட கவலை என்னோட கவலை.. உனக்கு ஒரு வாழ்க்கையை உருவாக்கணும்.. எனக்குச் சும்மா இருக்கப்புடிக்காது. அப்படியே இருந்து பழகிட்டேன். உழைச்சுச் சாப்பிடணும்.. அப்படியே செத்துப்போகணும்.. அதான்.. பல விஷயங்கள் இருக்கு மனசுக்குள்ள உன்கிட்ட சொல்லமுடியாது.. ஆனா அதுக்குரிய காலம் வரும்போது தானாத் தெரிஞ்சுக்குவே.. வா..

- தொடரும்

# நெய் நந்தீஸ்வரர் கோவில்

பிரச்சினை, நோய்களை தீர்த்து வைக்கும் நெய் நந்தீஸ்வரரின் இரு கொம்புகளுக்கு நடுவே "சக்கரம்" ஒன்று உள்ளது. இது இயற்கையாகவே அமைந்தது

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி எனும் ஊருக்குத் தெற்கே 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிற்றூர் வேந்தன்பட்டி. இவ்வூர் நகரத்தார் என்று சொல்லக்கூடிய நாட்டுக்கோட்டை செட்டியார்கள் மிக அதிகமாக வாழ்கின்ற ஊர் செட்டிநாட்டு ஊர் என்றே சொல்லலாம். 1000 புள்ளிகள் கொண்ட இவ்வூரில் ஆறு கோவில் நகரத்தார் வாழ்கின்றனர். இவ்வூரில் உள்ள சிவன் கோவிலில் நந்தி எம்பெருமான் நெய்-நந்தீஸ்வரராக அருள்பாலிக்கின்றார்.

நந்தி எம்பெருமான் நெய் நந்தீஸ்வரராக அருள்பாலிப்பது இவ்வூரில் மட்டுமே. அதனால் இவ்வூர் தமிழகத்து ஊர்களில் தனி சிறப்பிடம் பெறுகின்றது.

ஊரின் சிறப்பே நெய்-நந்தீஸ்வரர்தான் இவரின் அருள்திறம் ஊர் முழுக்க நிறைந்திருப்பதால் இவ்வூரிலிருக்கும் நகரத்தார் பெரும் தனவான்களாகவும் சிறந்த கல்விமான்களாகவும் வாழுகின்றனர். நெய் நந்தீஸ்வரரால் இவ்வூருக்கு - இவ்வூர் நகரத்தார்க்கு பெருமையும் புகழும் எந்நாளும் உண்டு.

இவ்வூருக்குள் நுழைந்தவுடன் பஸ்ஸைவிட்டு இறங்கியதும் நம் கண்ணுக்கு தெரிவது நெய் நந்தீஸ்வரர் கோவில்தான். இவ்வூரைச் சார்ந்த நகரத்தார் பெருமக்கள் பெருமுயற்சி செய்து பெரும்பணம் சேகரித்து இக்கோவிலை கட்டியுள்ளனர். நிர்வாகப் பொறுப்பையும் இவர்களே ஏற்றுள்ளனர்.

நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கோவில் ஒன்பதுமுறை கும்பாபிஷேகம் கண்டுள்ளதாம். சிவபெருமானும் உமாதேவியும் மீனாட்சி சொக்கலிங்கேஸ்வரர் என்னும் பெயரில் இக்கோவிலின் மூலஸ்தானக் கடவுளர்களாக அருள் பாலிக்கின்றனர். இவர்களைத் தவிர விநாயகர், முருகப்பெருமான், தெட்சிணாமூர்த்தி, சண்டிகேஸ்வரர், பைரவர், நவக்கிரகங்கள் போன்ற கடவுளர்களும் தனித்தனி சந்நிதிகளில் அருள் பாலிக்கின்றனர் என்றாலும் நெய் நந்தீஸ்வரரே இக்கோவிலின் சிறப்புக் கடவுளாக உள்ளார். அதனால் இக்கோவில் சிவன் கோவிலாக இருந்த போதிலும் நந்திகோவில் என்றே இவ்வூர் மக்களால் அழைக்கப்படுகின்றது.

ஊரின் நடுவே அழகுற அமைந்துள்ளது கோவில் உள்ளே நுழைந்ததும் நெய்மணம் கமகமக்கிறது. சிவனாரின் சந்நிதியை நோக்கி கம்பீரமாக வீற்றிருக்கின்றார் நெய் நந்தீஸ்வரர் இவரின் மேனி முழுவதிலும் பசு நெய் அப்படியே உறைந்து போயிருக்கிறது. எவ்வளவுதான் நெய் பூசினாலும் இவரது மேனியை ஈ, எறும்பு, பூச்சிகள் எதுவும்



நெருங்குவதில்லையாம். ரொம்ப சக்தி வாய்ந்த கடவுள் இவர்.

இவரைப் பற்றி கேள்விப்பட்டு இவரைப் பார்க்க வந்தவர்கள் இன்றும் நல்ல நிலையில் வாழ்கின்றார்கள். கவியரசர் கண்ணதாசன் இவரை போற்றிப் பாடியுள்ளார்.

* பிரம்மாண்ட நெய் உருவம் - ஆன்மீக ஆச்சர்யம் - பெருமையின் அணிகலன் - இந்தியாவின் தனிச்சிறப்பு (உலகின்) எட்டாவது அதிசயம் - நெய்மீது அலாதி ப்ரியம் - யுகங்கள் பல கடந்தாலும் எந்த நிலையிலும் அருள்திறம் குறையாத இறை தன்மை - தனக்கு ப்ரியமான நெய்யினையே காணிக்கைப் பொருளாக வைத்திருப்பது - தன்னைப் பார்க்க வருகின்றவர்கள் வியப்பில் ஆழ்த்துவது "ரொம்ப சக்தியுள்ள நந்தி" என்று ஊராரின் பேச்சில்....

* வேந்தன்பட்டியிலும் அதன் சுற்றுவட்டார கிராமங்களிலும் பசுமாடு வைத்திருப்பவர்கள் பால் கறந்து காய்ச்சி நெய் எடுத்து நெய் நந்தீஸ்வரருக்கு காணிக்கையாக செலுத்திய பிறகுதான் பாலை விற்கவோ சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளவோ செய்கின்றார்கள். இன்றும் இப்பழக்கம் இவ்வூர் மக்களிடம் இருந்து வருகின்றது.

* நந்தி எம்பெருமானுக்கு "தன-ப்ரியன்" என்ற ஒரு பெயர் உண்டு. அதனால் தானோ என்னவோ இவ்வூர் மக்கள் நெய்-நந்தீஸ்வரரின் நெற்றியில் காசுகளை பொட்டுகளாக வைப்பதையும் பண நோட்டுகளை கயிற்றில் கட்டி நெய் நந்தீஸ்வரரின் கழுத்தில் மாலையாக போடுவதையும் வழக்கமாக கொண்டுள்ளனர்.

* வருடந்தோறும் தை மாதத்தில் மாட்டுப்பொங்கலன்று அதிகாலை 4 மணிக்கு நெய் நந்தீஸ்வரருக்கு நந்தி விழா என்ற ஒரு விழாவினை இவ்வூர் மக்கள் நடத்தி வருகின்றார்கள். நந்தி விழா தினத்தன்று நெய் நந்தீஸ்வரருக்கு சிறப்பு அபிஷேங்கள் செய்து 30 வகையான மாலைகளால் அலங்கரித்து தீப ஆராதனைகள் காட்டி வழிபடுகின்றனர். இந்த அதிசய விழா தமிழகத்து ஊர்களில் திருவண்ணாமலையிலும் வேந்தன்பட்டியிலும் தான் நடைபெறுகின்றது. மற்ற ஊர்களில் நடைபெறுவதில்லை.

* நெய் நந்தீஸ்வரரின் இரு கொம்புகளுக்கு நடுவே "சக்கரம்" ஒன்று உள்ளது. இது இயற்கையாகவே அமைந்தது (பொதுவாக இந்த அமைப்பு நந்தி எம்பெருமானின் தோற்றத்தில் இருப்பதில்லை).

* நெய் நந்தீஸ்வரருக்கு பசு நெய்தான் காணிக்கை பொருள். எனவே நெய் நந்தீஸ்வரரை பார்க்க வருகிறவர்கள் வரும்போது கலப்படமில்லாத சுத்தமான பசு நெய் கொண்டு வரவேண்டும்.

நெய் - நந்தீஸ்வரருக்கு மணி சார்த்துதல்

இப்படி ஒரு வேண்டுதலை நெய் நந்தீஸ்வரருக்கு இவ்வூர் மக்கள் நடத்தி வருகிறார்கள்.

இவ்வூர் மக்களில் பெரும்பாலோர் தங்களின் சொந்த வாழ்க்கையில் பிரச்சினைகள் ஏற்பட்டாலோ உடலில் நோய்கள் தோன்றினாலோ நெய் நந்தீஸ்வரருக்கு மணி சார்த்துவதாக வேண்டிக்கொள்கிறார்கள்.

நோய்களோ பிரச்சினைகளோ தீர்ந்த பிறகு வெங்கல மணி ஒன்றும் பட்டுத்துண்டு ஒன்றும் மாலை ஒன்றும் வாங்கி நெய்-நந்தீஸ்வரருக்கு சார்த்தி தங்களது வேண்டுதலை நிறைவேற்றுகிறார்கள்.

நெய் நந்தீஸ்வரருக்கு பிரதோஷ வழிபாடு வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. அன்றைய தினம் நந்தியை பசு நெய்யினால் அபிஷேகம் செய்வர். அபிஷேகம் செய்த நெய் நந்தீஸ்வரரின் தோற்றம் முழுவதிலும் நிறைந்து தரையில் வழிந்து அப்படியே தேங்கி நிற்கின்றது.

மறுநாள், அதை ஒரு பாத்திரத்தில் எடுத்து நந்தவனத்தில் உள்ள நெய்கிணற்றில் கொட்டுகிறார்கள். நெய் கிணற்றின் உள்ளே பல ஆண்டுகளாக நெய் உறைந்து போயிருக்கிறது. இதன் உள்ளே உறைந்திருக்கும் நெய்யில் கூட ஈ, எறும்பு, பூச்சிகள் எதுவும் மொய்ப்பதில்லையாம்.

பக்தி மணம் கமழ வருவோரெல்லாம் மீனாட்சி சொக்கலிங்கேஸ்வரரைத் தரிசிப்பதோடு சிவகுடும்பத்துப் பிள்ளையான நந்திகேஸ்வரரையும் நெய்மணம் கமழ தரிசித்து மகிழ்கின்றார்கள். தங்கள் கோரிக்கைகள் நிறைவேறிய சந்தோஷத்தை நன்றியாகச் சொல்ல திரும்பத் திரும்பவும் வருகின்றார்கள்.

**பஸ் வசதி**

சென்னை, மதுரை, கோவை, ஈரோடு, திருச்சி, திண்டுக்கல், சேலம், திருப்பூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர் போன்ற ஊர்களில் இருந்து பொன்னமராவதிக்கு நேரடி பஸ்கள் உள்ளன. பொன்னமராவதியிலிருந்து வேந்தன்பட்டி வருவதற்கு சிட்டி பஸ்களும், தனியார் பஸ்களும் நிறைய உள்ளன.

**தரிசன நேரம் :**

காலை 6.00 மணி முதல் பகல் 12 மணிவரை மாலை 4.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை பக்தர்கள் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறிய சந்தோஷத்தை நன்றியாகச் சொல்ல திரும்பத் திரும்பவும் இந்த கோவிலுக்கு வந்து செல்கின்றனர்.

-எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி _620015

# தினம் ஒரு தலைவர்கள் — சித்தரஞ்சன் தாஸ் வரலாறு

தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் (நவம்பர் 5, 1870 - ஜூன் 16, 1925) இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கை ஆற்றியவர்.

தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர். 1917-ஆம் ஆண்டிலிருந்து 1925- ஆம் ஆண்டு வரை தீவிர அரசியலில் ஈடுபட்டவர். இவர் பூபன் மோகன் தாஸ் என்பவருக்குப் பிறந்தார். இங்கிலாந்தில் சட்டக் கல்வி கல்வி கற்றவர், 1909இல் அலிப்பூர் குண்டுவெடிப்பு வழக்கில் அரவிந்தருக்கு ஆதரவாக வெற்றிகரமாக வாதாடினார்.

இவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் அரசியல் குரு.

அவரது அரசியல் ஞானத்தாலும் பேச்சுத் திறமையாலும் அவர் இந்திய தேசிய காங்கிரஸில் முக்கியமான நபராக உயர்ந்தார். அவர் கிராமங்களை முன்னேற்றி கைத்தொழில்களை வளர்க்க விரும்பினார். சுய ராஜ்ஜியக் கட்சித் தலைவர். சாதி வேற்றுமையையும் தீண்டாமையையும் வெறுத்தவர். பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். புகழ் பெற்ற வழக்கறிஞராக இருந்தபோதும் சுதந்திரப் போராட்டத்திற்காக தனது தொழிலைத் தியாகம் செய்தவர்.

இளமைக்காலம்

1870- ஆம் ஆண்டு நவம்பர் 5-ஆம் நாள் வங்காளத்தில் டாக்கா மாவட்டம் விக்ராம்பூரில் வசதியான குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை பூபன் மோஹன் தாஸ் கல்கத்தா நீதிமன்றத்தில் சட்ட ஆலோசகராகப் பணியாற்றினார். பூபன் தாஸ் சிறந்த அறிவாளி. பிரம்ம சமாஜத்தில் தீவிர நம்பிக்கை உடையவர். மிகுந்த நாட்டுப் பற்று உடையவர். சித்தரஞ்சன் தாஸ் நாட்டுப் பற்று உடையவராக விளங்கியதற்கு அவரது தந்தையே காரணம். சித்தரஞ்சன் தாஸ் அவரது முதல் மகன். அவருக்கு ஒரு தமக்கை உண்டு. சித்தரஞ்சன் தாஸ் கல்கத்தா பிரசிடென்சி கல்லூரியில் பட்டம் பெற்றார். பின்னர் 1890-இல் இங்கிலாந்து சென்று இந்தியக் குடிமைப் பணி தேர்வு எழுதினார். இந்தியா திரும்பி 1894-ல் கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்ற ஆரம்பித்தார். அவரது இளைய சகோதரர் பி. ஆர். தாஸ் பாட்னா உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றினார். வங்கப்பிரிவினையின்போது அரவிந்தர், பிபின் சந்த்ர பாலுடன் இணைந்து "வந்தே மாதரம்" என்ற ஆங்கில இதழில் எழுதி வந்தார்.

அனுஷீலன் சமிதி

அரவிந்தரும் சித்தரஞ்சன் தாஸும் சுதந்திரப் போராட்ட புரட்சி இயக்கமான அனுஷீலன் சமிதியின் துணைத்தலைவர்கள் ஆவர். இவ்வியக்கம் இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் கிழக்கு இந்தியாவின் முக்கிய ஆயுதம் ஏந்திய இயக்கம் ஆகும். ஆயுதப்புரட்சி மூலம் இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தருவதே இதன் குறிக்கோள் ஆகும். ஜதீந்திரநாத் பானர்ஜி, ஜதீந்திரநாத் முகர்ஜி, யதீந்திர கோஷ் (அரவிந்தரின் இளைய சகோதரர்), ராஷ் பிஹாரி போஸ் ஆகியோர் இதன் முக்கிய உறுப்பினர்கள் ஆவர். சித்தரஞ்சன் தாஸ் ஐரோப்பிய இலக்கியத்தில் ஆர்வம் உடையவர். அவர் சாகர் சங்கீத், நாராயண்மாலா, கிஷோர்-கிஷோரீ, அந்தர்யாமி போன்ற இலக்கியங்களை எழுதியுள்ளார். மேற்கத்திய கல்விமுறை ஆத்மா முன்னேற்றத்திற்குப் பயனற்றது என்று கருதினார். பிரம்ம சமாஜ நூல்கள், ராமகிருஷ்ண பரமஹம்சர் நூல்கள் ஆகியவற்றை ஆழ்ந்து படித்தார். விவேகானந்தரின் கருத்துகள் இவரைக் கவர்ந்தன. புகழ்பெற்ற அறிஞர்களான பக்கிம் சந்திரர், D.L. ராய், கிரீஷ் கோஷ், இரவீந்திரநாத் தாகூர் போன்றவர்களின் நூல்களையும் அவர் ஆழ்ந்து படித்தார். எல்லோரும் கல்வி கற்க வேண்டியது அவசியம் என்று கருதினார். ஈஷ்வர் சந்த்ர வித்யா சாகரின் விதவை மறுமண இயக்கத்திற்கு உதவினார். அவர் 1890-லிருந்து 1894 வரை இங்கிலாந்தில் இருந்த காலத்தில் தாதாபாய் நௌரோஜிக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்தார். ஜான்மெக்கலன் என்பவரின் இந்திய விரோதப் பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்து கிளாட்ஸ்டோன் தலைமையில் நடந்த கூட்டத்தில் பேசினார். அரவிந்தரின் அலிப்பூர் குண்டுவழக்கில் தாஸின் வாதத் திறமையால் அரவிந்தர் விடுவிக்கப்பட்டார். அதனால் அவரது புகழ் பரவியது. தும்ரோன் அரசரின் தத்தெடுப்பு குறித்த வழக்கிலும் அவர் வெற்றி பெற்றார். இவ்வாறாக அவர் சிவில், கிரிமினல் இரண்டிலுமே தேர்ச்சி பெற்றவராக விளங்கினார். 1920-ல் அவரது மாத வருமானம் ரூ.50,000 ஆகும். அவரது தந்தை தாராள குணத்தாலும், ஆடம்பரத்தாலும் திவாலாகி இருந்தார். 1913-ல் தாஸ் தனது தந்தையின் கடன்களை அடைத்தார். இது அவரது உயர்ந்த தர்ம நியாய உணர்ச்சியைக் காட்டுகிறது. 1921- ஆம் ஆண்டு விக்ராம்பூரில் நடைபெற்ற தேசிய கல்வி மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். அதே ஆண்டு அஸ்ஸாம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வெளியேற்றம், அஸ்ஸாம்-வங்காள ரயில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் போன்றவற்றிலும் கவனம் செலுத்தினார்.

அலிப்பூர் குண்டு வழக்கு

குதிராம் போஸ் என்ற இளைஞர் நாட்டுப்பற்று மிகுந்தவர். தனது 13-ஆவது வயதிலேயே சுதந்திரப் போராட்ட புரட்சி இயக்கமான யுகாந்தர் இயக்கத்தில் இணைந்தவர். வங்கப்பிரிவினையை எதிர்த்து நடந்த குண்டு வீச்சுகளில் தீவிரமாகப் பங்கு பெற்றவர். வங்காளத்தில் முசாபூர் நகரத்தில் அதிகாரியாகப் பணிபுரிந்த கிங்ஸ்போர்டு என்பவர் மீது குண்டுவீச குதிராம் போஸும் அவரது நண்பர் பிரபுல்ல சாஹியும் சென்றனர். 1908-ஆம் ஆண்டு ஏப்ரல் 30-ஆம் தேதி கிங்ஸ்போர்டின் வாகனத்தின் மீது குண்டு வீசினர். அந்த வாகனத்தில் வந்த வேறு ஒரு பெண்மணியும் அவரது மகளும் இறந்தனர். பிரபுல்ல சாஹி பிடிபட்ட உடன் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு இறந்தார். குதிராம் போஸ் 1908-ஆம் ஆண்டு ஆகஸ்டு 11-ஆம் தேதி தூக்கிலிடப்பட்ட போது அவரது வயது 18 ஆகும். அப்போதும் அவர் "வந்தே மாதரம்" என்றே முழங்கினார். இந்த வழக்கில் அரவிந்தரும் கைது செய்யப்பட்டார். ஆனால் தாஸின் வாதத் திறமையால் அரவிந்தர் விடுவிக்கப்பட்டார். 1921-ஆம் ஆண்டு அகமதாபாத் நகரில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேசத் தொண்டாற்றுவதற்காக புகழ்பெற்ற, திறமை வாய்ந்த வழக்கறிஞரான தாஸ் தனது தொழிலைத் துறந்தார். அவரது இந்த தன்னலமற்ற தியாகம் நாடுமுழுவதும் அவருக்கு இருந்த நன்மதிப்பை அதிகரித்தது. வேல்ஸ் இளவரசரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் சித்தரஞ்சன் தாஸ் மனைவி பசந்தி தேவி, மகன் சிரா ரஞ்சன், சகோதரி ஊர்மிளா தேவி, கிரண் சங்கர் ராய், சுபாஷ் சந்திர போஸ் ஆகியோருடன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 1922-ல் காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டதால் காங்கிரஸிலிருந்து விலகி சுயராஜ்ஜியக் கட்சி துவங்கினார்.



சுயராஜ்ஜியக் கட்சி

1923-ஆம் ஆண்டு ஜனவரி 9-ஆம் தேதி காந்திஜியை எதிர்த்த இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களால் சுயராஜ்ஜியக் கட்சி துவங்கப்பட்டது. இதில் முக்கியமானவர்கள் சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு(ஜவஹர்லால் நேருவின் தந்தை), நரசிம்ம சிந்தாமன் கேல்கர் (கேல்கர் மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்தவர். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பாலகங்காதரத் திலகருடன் நெருக்கமாகப் பணியாற்றியவர்.1910-ஆம் ஆண்டிலிருந்து 1932-ஆம் ஆண்டு வரை "கேசரி" இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். திலகர் குறித்து பல நூல்கள் எழுதியுள்ளார்.), ஹுசேன் சாஹித் ஜராவார்டி(பின்னாளில் பாகிஸ்தான் பிரதமராகப் பணிபுரிந்தார்), நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், விதால்பாய் படேல் (வல்லபாய் படேலின் அண்ணன். இவரும் அமிதவாதப் போக்கு உடையவர். 1923-ஆம் ஆண்டு மத்திய சட்டமன்ற உறுப்பினராகவும், 1925-ஆம் ஆண்டு சபாநாயகராகவும் விளங்கினார். சுபாஷ் சந்திர போஸின் தேசப்பணிகளால் கவரப்பட்ட விதால்பாய் படேல் அவரது ரூ.1,20,000 மதிப்புடைய சொத்தை போஸின் தேசப்பணிகளுக்காகக் கொடுத்தார். ஆனால் காந்திஜி அந்தத் தொகையை காங்கிரஸ் கட்சியின் விருப்பத்திற்கேற்பதான் செலவிட வேண்டும் என்றார். போஸ் மறுத்ததால் வழக்கு நீதிமன்றம் சென்றது. உயில் தெளிவாக இல்லாததால் போஸ் அந்தத் தொகையை இழந்தார்.) போன்றோர் ஆவர். இவர்கள் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்றத்தில் அரசாங்கத்தின் நியாயமற்ற கொள்கைகளை எதிர்க்க நினைத்தார்கள். பிரித்தானிய ராஜ்ஜியத்திலிருந்து சுதந்திரம் பெற்று சுயராஜ்ஜியம் அமைப்பதே இவர்கள் குறிக்கோள் ஆகும். சித்தரஞ்சன் தாஸ் "ஃபார்வார்டு" என்ற பத்திரிக்கை ஆரம்பித்து சுபாஷ் சந்திர போஸிடம் ஒப்படைத்தார். 1924-ஆம் ஆண்டு நடைபெற்ற கல்கத்தா மாநகராட்சி தேர்தலில் சுயராஜ்ஜியக்கட்சி வெற்றி பெற்றது. மாநகராட்சி மேயராக சித்தரஞ்சன் தாஸும் மாநகராட்சி நிர்வாக அதிகாரியாக சுபாஷ் சந்திர போஸும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கல்கத்தா மாநகராட்சியில் பல சீர்திருத்தங்களைச் செய்து மக்களிடம் பேராதரவைப் பெற்றனர். சிறந்த செயல்பாட்டால் 1925-ஆம் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தாராள குணம்

1925-ஆம் ஆண்டு ஜூன் 16 அன்று டார்ஜிலிங்கில் தனது 55-ஆவது வயதில் இறந்தார். அவரது உடல் கல்கத்தாவுக்குக் கொண்டுவரப்பட்டு மக்களின் மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. இரண்டு மைல் நீளத்திற்கு மக்கள் வெள்ளமாகத் திரண்டிருந்தனர். தாகூர் சித்தரஞ்சன் தாஸைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது அவரது தியாகமும் ஆக்கசக்தியும் நம்மை வழிநடத்தும் என்று கூறுகிறார். அவரது தாராள குணம் நினைத்துப் போற்றத்தக்கது. அவரது இல்லம் "சித்தரஞ்சன் சேவாசதன்" என்ற பெயரில் மருத்துவமனையாகச் செயல்படுகிறது.

மேற்கு வங்கத்தில் முக்கிய புள்ளியாக இருந்த இவர் 1919-1922 காலப் பகுதியில் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து பிரித்தானியரின் ஆடைகளைப் புறக்கணிக்க முன்னின்று உழைத்தார். மோதிலால் நேருவுடன் இணைந்து சுயாட்சிக் கட்சியை ஆரம்பித்தார்.

ஃபோர்வார்ட் (FORWARD) என்ற செய்திப் பத்திரிகையை பிரித்தானிய ஆட்சியாளருக்கு எதிராக ஆரம்பித்து நடத்தினார். இப்பத்திரிகை பின்னர் விடுதலை (LIBERTY) என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இவர் பல கவிதைகளையும் இயற்றியுள்ளார். இவரது கவிதைத் தொகுப்பு சாகர் சங்கீத் என்ற பெயரில் புகழ் பெற்றவை.

# தியேட்டர்களில் அதிக நபர்கள் பார்த்த படம்- சரத்குமார் சொன்ன தகவல்

தமிழ் சினிமாவில் 35 ஆண்டுகளுக்கும் மேலாக பயணித்து வரும் சரத்குமார், சுமார் 150-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். தமிழ் தாண்டி தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி மொழிகளிலும் நடித்திருக்கிறார்.

சமீபத்தில் வெளியான 'டியூட்' படத்தில் இவரது கதாபாத்திரம் பெரிதும் கவனம் ஈர்த்தது. இதற்கிடையில் தனது நடிப்பில் வெளியாகி மிகப்பெரிய ஹிட் அடித்த 'சூர்ய வம்சம்' படம் குறித்த நினைவலைகளை அவர் பகிர்ந்துள்ளார்.

அவர் கூறுகையில், "சூர்ய வம்சம் படம் ரிலீசான சமயத்தில் ஒரு தியேட்டரில் ரசிகர்களின் மனநிலை அறிய காத்திருந்தோம். அப்போது ஒரு இயக்குனர் என்னிடம் வந்து 'என்ன படம் எடுத்துள்ளீர்கள், இது எப்படி ஓடும்?' என்று கேட்டு சென்றார். எல்லோரும் சூப்பர் என்று சொல்லும் சூழலில், இவர் இப்படி சொல்லிட்டாரே... என்று யோசித்தேன். சில நேரம் நம் பார்வையை விட ரசிகர்களின்



பார்வை வேறுவிதமானது என்பதையும் புரிந்துகொண்டேன்.

என்னை பொறுத்தவரை இன்று வரை தியேட்டர்களில் அதிக ரசிகர்கள் பார்த்த படம் என்றால், அது சூர்ய வம்சம் படம் தான். அதை உறுதியாகவே சொல்வேன்", என்றார்.



நடிகை ராஷ்மிகா மந்தனா தமிழ், தெலுங்கு, ஹிந்தி என பல மொழிகளில் டாப் ஹீரோயினாக இருந்து வருகிறார்.

இவர் தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டாவை காதலித்து வருகிறார் என்பது அனைவரும் அறிந்தது தான். இவர்கள் திருமணம் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறும் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், தற்போது வெள்ளை நிற உடையில் கலக்கும் நடிகை ராஷ்மிகாவின் லேட்டஸ்ட் ஸ்டில்ஸ் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# கரூர் கூட்ட நெரிசல்: முதன்முறையாக மனம் திறந்த அஜித் குமார்

கரூரில் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் சார்பாக கடந்த செப்டம்பர் 27 ஆம் தேதி சனிக்கிழமை நடந்த பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. இதில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் 10 பேர் உள்பட மொத்தம் 41 பேர் உயிரிழந்தனர்.

நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தின் உத்தரவின்படி சிபிஐ விசாரணை நடந்து வருகிறது.

உயிரிழந்தோர் குடும்பத்துக்கு தவெக சார்பில் ரூ.20 லட்சம் நிவாரணம் வழங்கிய விஜய் அண்மையில் அவர்களை சென்னை வரவழைத்து ஆறுதல் கூறி அனுப்பினார்.

இந்நிலையில் ஹாலிவுட் ரிப்போர்ட்டர் நேர்காணலின்போது இந்த துயர சம்பவம் தொடர்பாக நடிகர் அஜித் குமார் மனம் திறந்துள்ளார்.

அவர் கூறியதாவது, நான் யாரையும் குறை சொல்ல விரும்பவில்லை. கரூர் கூட்டநெரிசல் சம்பவத்திற்கு ஒருவர் மட்டும் பொறுப்பல்ல, நாம் அனைவருக்கும் பொறுப்புதான். ஊடகங்களுக்கும் அதில் பங்கு உண்டு.

கூட்டம் திரட்டுவதை பெரிய விஷயமாக்குவதை நிறுத்த வேண்டும். கிரிக்கெட்டில் கூட்டம் கூடினாலும் இப்படி நடப்பதில்லை. தியேட்டரில் முதல் நாள் முதல் காட்சி, பிரபலங்கள் கலந்துகொள்ளும் நிகழ்வுகளில் மட்டும் ஏன் இப்படி? இது நம் திரையுலகை உலகளவில் தவறாகக் காட்டுகிறது.

ரசிகர்களின் அன்புக்காகவே நடிகர்களான நாங்கள் உழைக்கிறோம். ஆனால், உயிரைப் பணயம் வைத்து அன்பு காட்ட வேண்டாம். அன்பை காட்ட வேறு வழிகள் உண்டு. முதல் நாள் முதல் காட்சி கலாச்சாரத்தை நாம் ஆதரிக்கக் கூடாது. ஊடகங்களும் பொறுப்புடன் இருக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.



# 21 வயதில் உயிர் தியாகம் செய்த ராணுவ வீரரின் கதையில் நடிக்கும் அமிதாப் பச்சனின் பேரன்



நாட்டின் மிக உயர்ந்த இராணுவ விருதான 'பரம் வீர் சக்ரா' விருதைப் பெற்ற இளம் வீரரான லெப்டினன்ட் அருண் கேதர்பாலின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட 'இக்கிஸ்' என்ற இந்தி படம் உருவாகி உள்ளது.

1971 ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் போரின் போது தனது 21 வயதில் உயிர் தியாகம் செய்தார். இந்த படம் அருண் கேதர்பாலின் தியாகத்தை நினைவுகூரும் வகையில் இருக்கும்.

பாலிவுட் மூத்த நடிகர் அமிதாப் பச்சனின் மூத்த மகள் ஸ்வேதா பச்சனின் மகன் அகஸ்திய நந்தா இந்த படத்தில் அருண் கேதர்பாலாக நடிக்கிறார்.

அந்தாதுன் போன்ற வெற்றிபடங்களை இயக்கியஸ்ரீராம் ராகவன் இந்த படத்தை இயக்கியுள்ளார்.

இந்த படத்தில் மூத்த நடிகர் தர்மேந்திரா மற்றும் ஜெய்தீப் அஹ்லாவத் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். படத்தின் டிரெய்லர் வெளியாகி வரவேற்பை பெற்று வருகிறது.



நடிகை ஷ்ரத்தா ஸ்ரீநாத் ஆர்யன் பட ப்ரோமோஷன் நிகழ்ச்சிக்கு எப்படி ஹாட் ஆக வந்திருக்கிறார் பாருங்க. சிவப்பு நிற உடையில் அழகிய போட்டோஷூட்.

# பெருமாள் முருகனின் சிறுகதையை தழுவி உருவாகும் 'அங்கம்மாள்'

பெருமாள் முருகனின் சிறுகதையை தழுவியே 'அங்கம்மாள்' படம் உருவாகி வருகிறது.

ஸ்டோர் பெஞ்ச் நிறுவனம், என்ஜாய் பிலிம்ஸ் மற்றும் ஃபிரோ மூவி ஸ்டேஷன் ஆகியவை இணைந்து தயாரித்து வரும் படம் 'அங்கம்மாள்'. இதன் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் இணையத்தில் வரவேற்பைப் பெற்றது. இப்படம் புகழ்பெற்ற எழுத்தாளர் பெருமாள் முருகனின் 'கோடித்துணி' என்ற சிறுகதையை மையமாக வைத்து உருவாக்கி வருகிறது படக்குழு.

இது குறித்து கூறிய பெருமாள் முருகன், "இந்தப் படத்தின் கதை என்னுடையது என்றாலும் இதற்கான தழுவல் உரிமையை கொடுத்ததோடு என் பங்கு முடிந்துவிட்டது. இதன் பிறகு, இந்தக் கதையை முழுமையாகப் புரிந்து கொண்டு படமாகக் கொண்டு வந்ததில்தான் இயக்குநரின் திறமை உள்ளது. சிறுகதை சினிமாவாக மாறும்போது அதில் பல விஷயங்கள் மாறலாம். குறிப்பாக இந்தக் கதையில் கிளைமாக்ஸ் மற்றும் பெண் கதாபாத்திரங்களை முன்னிலைப்படுத்துவதை சொல்லலாம். 25 நிமிடங்கள் நீளம் கொண்டு குறும்படத்திற்கான கதையை முழுநீள படமாக நேர்த்தியுடனும் ஆழத்துடனும் இயக்குநர் மாற்றியிருக்கிறார்" என்று தெரிவித்துள்ளார்.

'அங்கம்மாள்' படத்தில் முதன்மை கதாபாத்திரத்தில் கீதா கைலாசம் நடித்துள்ளார். மேலும் சரண், பரணி, முல்லையரசி மற்றும் தென்றல் ரகுநாதன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்கள். இதற்கு ஒளிப்பதிவாளராக அஞ்சோய் சாமுவேல், இசையமைப்பாளராக முகமது மக்பூல் மன்சூர் ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள்.




# 'ரெட் லேபிள் ' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்ட நடிகை சிம்ரன்




கே.ஆர்.வினோத் இயக்கத்தில் ரெவ்ஜென் பிலிம் பேக்டரி சார்பில் லெனின் தயாரித்துள்ள படம் 'ரெட் லேபிள்'. கதாநாயகனாக லெனின், நாயகியாக அஸ்மின் நடித்துள்ள இப்படத்தில் முக்கியமான கதாபாத்திரத்தில் இயக்குநர் ஆர். வி. உதயகுமார், கௌரவ வேடத்தில் முனிஷ்காந்த் நடித்துள்ளனர்.

கோவை பின்னணியில் ஒரு கல்லூரியில் நடக்கும் கொலையும் கொலை சார்ந்த சம்பவங்களும் கொண்ட மர்மமான கதையைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது இப்படம். படப்பிடிப்பு முழுக்க முழுக்க கோவை நகரில் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 'ரெட் லேபிள்' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை நடிகை சிம்ரன் வெளியிட்டுள்ளார். பொதுவாக சிம்ரன் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர் அல்ல. ஆனால் புதிய படக் குழுவினரை ஊக்குவிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் முதல் முறையாக சிம்ரன் இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டு வாழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


LOCATION - CHENNAI
WE ARE
HIRING
TELECALLERS
VACANCIES - 50
QUALIFICATION - ANY DEGREE
FRESHERS ALSO CAN APPLY
TELECALLING EXPERIENCE IS PREFERABLE
9337501889
7789941009
qknewstv@gmail.com


PRODUCT
PROMOTION
Rs.100 Only
5000+ Views
FB, INSTA, WEBSITE
Whatsapp
8122798599
vilambaram.com
விளம்பரம்


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
7871617005


தமிழ்நாடு இ பேப்பர்.காம்
Are you looking to
publish News, Story, Kavidhai, Articles etc
in TamilnaduEpaper, Anandabhaskar, PaperBoy
If yes,
send to tamilnaduepaper@gmail.com
Please mention in Subject
Papername and Category - News, Article, Kavithai,
Story, Cooking, Aanmigam, Book Review, Vasagar
Kaditham, Sindhika Oru Nodi, Rowse Ramani etc.,
Please send articles from own email
Articles without Author Details will be Ignored
ஆனந்த பாஸ்கர்


WE'RE
HIRING!
A Passionate
Content Creator
CONTACT US!
94386 10756


தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய்
மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு
பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட
தன்னார்வலர்கள் (freelancer)
அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற,
மக்கள் தொடர்பு அதிகம் உள்ள
பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள்,
தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009



தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
tamilnaduepaper@gmail.com
தமிழகம் முழுவதும் மாவட்டம் தாலுக்கா வாரியாக
தேவை
நிருபர்கள்
புகைப்பட கலைஞர்கள்
ஏஜெண்டுகள்
Call: 9337501889


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


MLM PERFECT
LIMITED OFFER
HURRY UP!
Cryptocurrency
MLM Software
Development
RS.19999/-
Onetime, No hidden cost
Contact Us
Visite Our Website
www.mlmperfect.com
Call US
9853719337,7436914247


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756



WANTED
STORE
HELPER
Boys only
Fresher / Experience
SAA
Venus Sorting Technologies Pvt Ltd
Ganapathy, Coimbatore
Ph: 97919 60482
E-Mail ID: hr@whitechhoses.in


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


PADMA
MEDIA HOUSE
Best Newspaper
Advertising Agency
Matrimonial
Property
Recruitment
Business
Announcements
Obituary
Public Notices
Education
CONTACT : +91 81227 98599


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PADMA
MEDIA HOUSE
BOOK
NEWSPAPER ADS IN
Recruitment
Public Notice
Property
Business
Matrimony
Education
CONTACT : +91 81227 98599
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
ஆனந்த பாஸ்கர்
பேப்பர்பாய்
ADVERTISE WITH US!


WORK FROM
HOME
Extra
Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009




### மரபின் மலர்களை மாந்து..

வந்தவரை வரவேற்றல் தமிழர்
மரபு.. வாழவைத்து வாழுவதே
தமிழர் மரபு..

பிறப்பொக்கும் என்பதுவும்
தமிழர் மரபு! பேதமிலா
சமுதாயம் நமது விழைவு!

பசியாற்றல் எவ்வுயிர்கும்
தமிழர் மரபு..
வறுமையிலும்
வழங்குவதே குல மரபு.!

ஈந்துவக்கும் தாய்
தந்தை பேணுவது மரபு!
இனிய சொல்லும்
இரக்கமுமே தமிழ் மரபு!

அயராது உழைப்பதுவே
தமிழர் மரபு.. அனைத்துயிரும்
உறவுயெனல் தமிழர் மரபு!
வரும் பகையை முடிப்பதுவம்
நமது மரபு. வாகை மலர்
சூடுவதே தமிழர் மரபு!

பண்பாட்டுத் தேன் சுவை
தந்த மரபு.. பாரில் உள்ள
இனமெல்லாம் வியக்கும் மரபு..



காவியமாய்
நிலைத்திருக்கும்
கவி மரபு.. காலமதை
வென்றதுதான் தமிழர்
மரபு!

**வே.கல்யாண்குமார்**

### ஹைக்கூ !

வளர்ப்போம்
புறத்தில் மரம்
அகத்தில் அறம்

நல்லது நினை பேசு செய்
நடக்கும் நன்மை !

உணருங்கள் ஆடம்பரமன்று
அவசியம் கல்வி !

சேமிப்பில் சிறந்தது
வளமாக்கும் சேமிப்பு
மழை நீர் சேமிப்பு !

இல்லங்களில் இன்று
வழக்கொழிந்தது வரவேற்பு
தொல்(ல்)லைக்காட்சி !

தேய்பிறை
வளர்பிறையாகுமா ?
அரசுப்பள்ளிகளில் தமிழ்!

உறவுகள் மட்டுமல்ல
ஊரும் மரணத்திற்கு
அழுதால் வாழ்வாங்கு
வாழ்ந்துள்ளார் !

இறப்பு இல்லை
இறந்தும் வாழ்கிறார்கள்
பொதுநலவாதிகள் !

வராது நோய் பசித்த பின்
புசித்தால் !

உச்சரிக்க வேண்டாம்
முன்னேற்றத்தின் எதிரிகள்
முடியாது தெரியாது
நடக்காது!

நாளை என்று
நாளைத் தள்ளிட
நாள் உன்னைத் தள்ளும் !

உடலை உருக்கும்
உருவமில்லா நோய் கவலை !



பெறுவதை விட
கொடுப்பதே இன்பம்
பொதுநலம் !

**கவிஞர்**
**இரா .இரவி!**

### ஓதலின் சிறந்தன்று ஒழுக்கமுடைமை!

நேரிசை வெண்பா!

கல்வியின் மேம்பட்ட
தெந்நாளும்
காணொழுக்கம்!
நல்ல ஒழுக்கமே
நாளுமே... வல்லதாகும்!
ஆழிசூழ்ப்பாரில்
அழகாகத்தானென்றும்
வாழி நலமே வளம்!

கடல்சூழ்க்காசினியில்
காணொழுக்கம் தானே
திடமான தொன்றறிந்தே
தேர்வாய்...மடமாதே!

நல்லொழுக்கம் எந்நாளும்
நற்பயன் ஆகுமே!
பொல்லொழுக்கம்
நீக்குப் பொலிந்து!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

கோல மயில்
வானவில்லை பார்த்து
பார்த்து வண்ண மயிலும்
ஆடுதே! வண்ணம்
ரெண்டும் ஒன்று என்று
வாஞ்சையோடு பாடுதோ?

காணவில்லை மேகம் என்று
கவலை கொண்டு வாடுதே!
காண வேண்டும் மழையை
என்று தோகை விரித்து
தேடுதோ?

தேனையொத்த அழகினோடு
தேடித்தேடி ஓடுதே!தேவை
நன்மை, தேவை என்று தேடி
வெற்றி சூடுதோ?

மானை போல மருண்ட
பார்வை மானிடத்தை
ஊடுதோ! மாலை போது
மாலை போட்டு
மகிழ்ந்திருக்க கூடுதோ?

பூனை போல பதுங்கி பதுங்கி
பூமி நோக்கி மேகமும்,
பொழியும்போது
விரியும்தோகை
புதிய கோலம்
போடுதோ!?



**வெ.தமிழழகன்**
எம்.ஏ.பிஎட்
சேலம்



### என்னவெளே... கண்மனியே

மூடிய இதழுக்குள்
சிந்த முத்து... இருண்ட
கருவரையில் சிலையாய்
வளர்ந்தது....!

செவ்வாழை மேனி கொண்டு
சித்திரமாய் வாழ்ந்தவளே...
சிறை பிடிக்க நானிருக்க
சிதரி நீ ஓடலாமோ...!

ஒட்டு மொத்த அழகையும்
குத்தகைக்கு எடுத்தவளே...
உன்னை பார்க்காத நொடி
பொழுது கண்கள்யெல்லாம்
தண்ணீரில் நனையுதம்மா...!



காலமெல்லாம்
வச்சி
காப்பேன்...
கடமையோடு
வாழ
வைப்பேன்..
கணவனாக
பல கவலையோடு....!!

**பொன்.கருணா**
நவி மும்பை



### இரும்புப் பெண்மணி இந்திரா காந்தி!

அறுசீர் மண்டிலம்.

இந்தியாவே இந்திராவாம்
ஒருகாலம் இந்திராவே
இந்தியாவாம் மறுகாலம்!
வியப்பான இரும்பான
பெண்மணியாம்
வீறுகொண்ட தலைமையுறு
அமைச்சர்தான்!
சிந்தனையில் தேர்ந்தநல்ல
பெண்மணியே சீர்திருத்தம்
பலகண்ட இந்திராவாம்!
முந்திபல நன்மைசெய்தார்
இந்திராவே மேன்மைமிகு
வழிகண்ட இந்திராவே!

அசைத்திடவே முடியாத
தைரியமே அன்னையவர்
இந்திராவே பெற்றாரே!
வசைபாடி நின்றாலும்
இந்திராவே வளம்செய்ய
மறக்கவில்லை
இந்திராவே!
இசையோடு இந்திராவே
வாழ்ந்தாரே இன்னல்கள்
பலருக்கும் துடைத்தாரே!
திசையெலாமும்
புகழ்ந்திடவே செய்தாரே
தேர்ந்தநல்ல பெண்மணியாம்
இந்திராவே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

### வெள்ளி முளைத்தது

விடியலை பறைசாற்ற
வெள்ளி ஒளி பிறந்தது,
முகில்களின் மடியில்
தவழும் ஆதவன்
அகிலத்திற்கு வெளிச்சம்
கொடுக்க வெள்ளி
முளைத்தது
இரவு உறக்கம் தழுவிய
விழிகள் வெள்ளி
முளைத்ததில் விழித்தன
மெலிதாகத் தென்றல்
வீச அங்கே பரவசமாக
வெள்ளி முளைத்தது
புள்ளினங்கள் மெல்லிய
குரலில் கானம் இசைக்க
வெள்ளி முளைத்தது
அமைதியான விடியலை
விரும்புவதற்காக வெள்ளி
முளைத்தது
பூமித்தாய் கொஞ்ச
ஆதவன் விழித்துப் பார்க்க
வெள்ளி முளைத்தது
மனதில் இருக்கும்
கவலைகள் கரைய வெள்ளி
முளைத்தது ஒவ்வொரு
வினாடியையும் அனுபவிக்க
வெள்ளி முளைத்தது
முளைத்த வெள்ளியில்



உற்சாகம்
பெற்று
தள்ளிப்
போன
வெற்றிகளை
சொல்லி
முடிப்போம்...

**உஷா முத்து ராமன்**

பற்றிக் கொண்ட
என் விரல்களிலும்
உன் நடுக்கம்.

தரையிறங்குமுன்
தாங்கிக் கொள்ள வேண்டும்




அப்பூவை..
ஓர்
முறையாவது.

உன் பார்வை
நதியில்

இலையாகிவிடுகிறது
இந்த மனது.

**ரிஷபன்**



### இந்தியாவின் இரும்பு மனிதர் சர்தார் வல்லப பாய் படேல்!

நேரிசை வெண்பா!

இந்தியாவின் நல்லிரும்பு
ஈடில் மனிதரே!

விந்தையாம் வல்லபரே!
வீறுடைச்... சிந்தையே

கொண்டவர் சீர்மையும்
கொண்ட வழக்கறிஞர்

கண்டார்
ஒருங்கிணைப்பைக்காண்!

விடுதலைப்போராட்ட
வீரரே பட்டேல்

கெடுதலை நீக்கியே
கேண்மைப்.... படுதலை

உள்ளிலே கொண்டாரே
உன்னத மாகத்தான்

கள்ளமிலா வல்லபரே காண்!

ஒற்றுமைக்கானநல்
ஒண்மைச்சிலைதனைப்

பற்றுடன் கண்டாரே
பாரிலே.. முற்றுமுயர்

நற்சிலை வல்லப
பாய் தன்னின்
நாடுபோற்றும்

பொற்சிலையே என்றும்
பொலிந்து!

நவஇந்தியாவின்
நலச்சிற்பி பட்டேல்!

உவகை தரு(ம்)வகையில்
ஊரில்.. தவித்திடும்

மக்களுக்கே மாண்பாக
நல்லுதவி செய்தாரே

தக்கநல்வல்லபரே தான்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



கொஞ்ச நேரத்திற்காவது
மூடிக்கொள் Please
நான் உறங்க வேண்டும்!

வானம் மும்மாரி
பொழிவதில்லை–உன்
முன்னழகை கண்டு
மொள்ளமாரி ஆனது தான்
மிச்சம் நீ திரும்பி நிற்பதால்
திருட்டுப் பய மனசு
திருந்தப் போவதில்லை
நீ இப்பிரபஞ்சத்தில்
ஏஞ்சலாய் வலம் வரும் வரை–
நானும் காதலிக்கப் போவதை
நிறுத்தப் போவதில்லை–அந்த
தென்றல் வீசும்
மரங்களை போல!

மன நிறைவாய் வரும்
கனவுகளில் கூட
அரை குறையாய் தான்
வருகிறாய் கற்புடன் வாழ
ஆசைப்படுகிறேன்
கல்யாணம் ஆகும்
வரையாவது
கட்டப்பிரம்மச்சாரியாக
இருக்க விடு Please
இனிவரும் இரவுகளில்
உறக்கத்தில்
உறங்க விடாத படி வராதே!

பிளாக் அண்ட் ஒயிட்
கனவுகளில் கூட
வானவில்லாய் தான்
வருகிறாய்!
நிலவில் பள்ள மேடு
உள்ளதாம்–இனி
கவிதைகளில்
நிலவொடு உன்னை
ஒப்பிட்டு பேசப்போவதில்லை–
ஏனெனில் நீதான் என்
வாழ்வின் காப்பீடு!

நைல் நதியை
பார்க்கயொன்றும்
ஆசையில்லை மயில் நதியே
உன்னில் நனைந்து
குளிக்க பேராசையடி!

கற்கால மனிதா காதலில்
தற்காலிக பிரிவு இயல்பு தான்
முறிவு தான் உறவுக்குள் வரக்
கூடாது ஈகோ கலைந்து
இதயம் விட்டுப் பேசு
இரு உடல் ஒருயிராவதை
கண்கூடாய் காண்பாய்!


உன்னை அணைத்து
கொண்டேஅடங்கிப் போவது
தான்–என்
பிரபஞ்சத்தின்
உச்சம்!

உன் கண் என்னும்
கள்ளச்சாராய
தொழிற்சாலையை



இரவென்றால் நிலவு வர
வேண்டும் நல்ல கனவு வர
வேண்டும்இரண்டுமின்றி
இதயமின்றி தவிக்கிறேன்?
உன் இம்சை தரும்
நினைவுகளால்!

**லி.நௌஷாத் கான்**







## நூல் விமர்சனம்:

நூலின் பெயர்: நாவல் வடிவில் நால்வர் சரித்திரம் தோழர் சுந்தரமூர்த்தி நாயனாரின் சரிதம்.
நூல் ஆசிரியர்: சத்தியப்பிரியன்
வெளியீடு: சுவாசம் பதிப்பகம்.
விலை : ₹190
தொடர்புக்கு : 8148066645

"அவனருளாலே அவன் தாள் பணிந்து " எழுத்தாளர் சத்தியப்பிரியன் , "சத்ய வாக்கு " அந்த ஈசனால் கிடைக்கப்பெற்று "சுந்தரமூர்த்தி" நாயனாரின் சரிதத்தை 23 அத்தியாயங்களில் " "நமசிவாய" எனும் ஐந்தெழுத்தை குறிக்கும் "5" எனும் கூட்டு எண் வருமாறு இப்புதினத்தை படைத்துள்ளார். "படித்தால் இனித்திடும் புதினம், உனை (இறை) நான் மறப்பது கடினம்" எனச் சொல்வீர்கள்.

சிவபெருமான் நிலைக் கண்ணாடி முன் தெரிந்த , தன் பிம்பத்தின் மீது ஒரேவொரு நொடி காதல் கொண்டு அன்பு வெளிப்படுமாறு , தோழமை உணர்வுடன் " ஆலால சுந்தரா வா!" என அழைத்தார். இதை பதின்ம வயதில் என் அம்மா எனக்கு சொன்னதும் நினைவு வந்தது.

சடங்கவியர் மகளுடன் நடைபெறவிருந்த சுந்தரர் திருமணத்தை தடுத்து "சுந்தரன்" என் அடிமை என பஞ்சாயத்தில் நிறுத்துவதை "திருவருட் செல்வர் " படத்தில் சிவாஜி - ஜெமினி நடிப்பில் பார்த்திருப்போம்.

கயிலையில் நந்தவனத்தில் பூக்குடலையுடன் மலர்களை கொய்து இறைப்பணி செய்த, சுந்தரனின் மனம் உமையம்மையின் தோழிகளான கமலினி, அநிந்திகையால் சலனப்பட,

"உனது மனம் என்னையும் மீறி மங்கையர்பால் சென்றதால், தென்னகத்தில் ஒரு வேதிய தம்பதியருக்கு மகனாகப் பிறந்து , ராஜ போகங்களை அனுபவித்து, இவ்விரு மங்கைகளும் அழகிய பெண்களாக வளர்ந்து வரும் போது , அவர்களை மணந்து, உலக இன்பங்களைத் துய்த்து மீண்டும் என்னிடம் வந்து சேர்!" என்கிறார் ஈசன்.

பரவை நாச்சியார் இல்லத்திற்கு சுந்தரர் பால் கொண்ட அன்பால், தினமும் தேவையான நெல், பருப்பு, சர்க்கரை பொருட்களை கொண்டு சேர்ப்பேன் என்ற குண்டையூர்க் கிழாருக்கும் ஊரெங்கும் ஏற்பட்ட பஞ்சத்தால் விளைச்சல் சரியில்லாத நிலையில் , ஈசனிடம் அவர் முறையிட, தம்பிரான் தோழருக்குத் தேவையான நெல்லை நாளை நாம் உமக்கு அளிப்போம் என ஈசன் கனவில் தோன்றி சமாதானம் செய்கிறார். அதன்படி ஊரெங்கும் நெற்குன்றமாக பரவிக் கிடந்தது.

இதை எப்படி பரவை மாளிகையில் கொண்டு சேர்ப்பேன் என சுந்தரர் ஈசன் மீது பதிகம் ஒன்று பாடினார். சிவன் மறுகணமே பூத கணங்களை ஏவி வண்டிகள் மூலம் நெல்லை கொண்டு சேர்த்தார்.

இன்றும் ஒரு காரியம் சித்தி ஆக வேண்டும் என்றால் சுந்தரரின் , "நீள நினைந்தடியேன் உன்னை நித்தமும் கைதொழுவேன்" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினால், எல்லாக் காரியங்களும் எளிதில் நடந்து முடிந்து விடும் என நம்புகின்றனர்.

**ஸ்ரீகாந்த் திருச்சி.**

### பரிதவிப்பு...

நீண்ட தேடல்களும்..

காணாத ஏக்கப்
பெருமூச்சும்..

கண்டு விட வேண்டும்..
பேராவலும்....

அடைய முடியாத
இலக்குகள்...

ஆற்றாமையுடன் கூடிய...
பெருங்கோபமாதல் ...
போல...



அத்தனை
வலி.... என்
கண்களில்...

உன்னைக்
காணாமல்..

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



சித்தம் போக்கே சிவன்
போக்கு சிறந்த உலகை நீ
உருவாக்கு! அன்னையின்
வாக்கே நல்வாக்கு– இதை
அறிந்தால் பெறுவாய்
செல்வாக்கு! நல்லதையே
பேசவேண்டும் உன் நாக்கு
நன்மை ஒன்றே உன் மனப்
போக்கு! உண்மை என்பதே
ஒளி விளக்கு உழைப்பையே
தெய்வமாய் நீ வணங்கு!
வறுமையிலா உலகை
வரவாக்கு எளியவர் துயரை
நீ போக்கு! அன்பு ஒன்றையே
செலவாக்கு அறவழி ஒன்றே
உன் போக்கு.

### அருங்கனி

விரல்கள் இருப்பது
தனித்தனி சேர்ந்தால்
செய்திடும் பலபணி! மழைநீர்
விழுவது துளித்துளி
சேர்ந்தால் செழித்திடும்
சமவெளி! நல்லவர்கள்
பிரிந்தால் தனித்தனி
தீமைகள் சேர்ந்திடும்
ஓர் அணி! உழைப்பவர்
சேர்ந்தால் ஓர் அணி
ஊருக்குச் செய்யலாம்
பல பணி! ஏழ்மை என்பது
கொடிய பிணி அதை
ஒழிப்பது ஒன்றே நமது
பணி! ஒற்றுமை என்பது
அருங்கனி அதை உண்டால்
வராது சாதிப் பிணி!
பசியைப் போக்குவது நெல்




மணி மானம்
காப்பதே நல்ல
துணிமணி!
எல்லோருக்கும்
வேண்டும்
ஒரு காணி
இதையே
எப்போதும் யோசி–நீ.

**எஸ் .சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை

வாழ்க்கை வாழ்வதற்கே
நம் வாழ்க்கை
நாம் வாழ்வதற்கே
வாழவேண்டும் வாழ்ந்தாக
வேண்டும் எளிதா ?
நான் , நீ, நாம்
வாழ நினைக்கும் .
வாழ்க்கை எளிது எளிதா ?
நினைத்தாலே ஒரு நடுக்கம்


விதை விதைக்கையிலே ,
நாற்று நடுகையிலே
உழவன் மனம்...,,,,,,,?
உழுது வைத்த நிலம் போலும்
நட்டு வைத்த நாற்று வளர
தினம் நீர் பாய்ச்சி,
வேருக்கு உரமிட்டு,
மேற்பரப்பில் பூச்சிக்கொல்லி
குழந்தை போலும் தினம்
காத்து அறுவடையை
எதிர்பார்த்து
தை மகளே வருக?
என் அத்தை மகளுடன் வருக
என அந்நாளை
எதிர்பார்க்கையில்
சொல்லாமல் வரும்
பெரு மழையோ புயல்
காற்றோ விலை போகா
விளைச்சலும்
புரட்டிப்போடும் உழவன்
மனதை சென்றுவிடும்
ஒரு பருவம், வீணாக
பேர் கால பெண்ணின்
மனதும்
உழைக்க சலிக்காத
உழவன் மனதும் ஒன்று
போலும்
வலியிலே துடிக்கையில்
சொன்னதெல்லாம்
வாய் வார்த்தைகள் எல்லாம்
காற்றிலே கரைந்த கற்பூரம்
ஆகிடுதே,. மீண்டும்
தொடங்கிடும் ஒரு பருவம்
உழத்தொடங்கிடுவான்
உழவன் நாம் உண்ணும் ஒரு
கை அரிசிக்கு ஒரு பருவம்
உழைக்கின்றான் – அதில்
அவன் உண்பது
எத்தனையோ நாளோ ?
ஓடாய் உழைப்பவனுக்கு
ஒன்றுமில்லை
ஒன்றுமில்லாதவனுக்கு
இல்லாதது ஒன்றுமில்லை
காலங்கள் மாறட்டும்
மாற்றங்கள் வர வேண்டும்
மாற்றங்கள் வந்தாக
வேண்டும் மனதில்
மாற்றங்கள் வேண்டும்
மாறாது போனால்
அந்த நாளும் வந்திடலாம்
முண்டாசு கவிஞனவன்
சொல்லிவைத்த
வார்த்தையன்றோ



தனி ஒரு மனிதனுக்கு
உணவு
இல்லையெனில்
ஜகத்தினை
அழித்திடுவான்

**ஓம் குமார் P N**
மதுரை



### தானங்கள்:

இமை விழித்து
இதயம் திறந்து
இயன்றதைத் தரும்

குருதி தானம் குலம் காக்கும்
உறுப்பு தானம் உடலைக்
காக்கும் பொருள்தானம்
வாழ்வின் பொருள் சேர்க்கும்

தா, ஈ ,கொடு என்று
சொல்லும் சொல்லில்
வேறுபாடு கண்டு
பெறுவோரை வேறுபடுத்தும்

எண்ணங்களை
எடுத்துரைக்கும்
ஏற்றத்திற்கு வழிகாட்டும்

பிறர் துயரைத் தனதாக்கி
பிடித்ததைச் செய்ய
வைக்கும்

இருந்தும் பேர் வாங்கும்
இறந்தும் வாழ வைக்கும்

இனமொழி பாராது
சாதி வேற்றுமை அறியாது
சமாதானம் மட்டுமே
சாட்சியாகும்
வேண்டுவோரை விட
கொடுப்போரின் குணம்
குவலயத்தில் உயரும்

கேட்டுத் தருவதினும்
உணர்ந்து தருவதே
உயர்ந்த தானம்

உணர்வுக்குப் பலம்
உறவுக்குப் பாலம்

தானத்தில் வகை பலவுண்டு
தர்மம் காக்கும்
குணம் கண்டு
தானத்தின் மூலம்
நிதானம் அதுவே
வாழ்வின்
பிரதானம்.



**தமிழ்நிலா**

---

கட்டிலின் முனையில்
தொங்கிக்கொண்டிருந்த
சேலை
மனங்கொண்டவளின்
அமர்வாய்ப்படுகிறது.

அருகில் சென்று
பார்க்கிறேன்.
துவைத்துப்போட்ட
துணிகளின் மடிக்கப்படா
கலைவு.

அள்ளிப்போடப்பட்டிருந்த
துணிகள் அணிந்து
கொண்டிருந்த
குடும்பத்தின்
அடையாளம்.

தொட்டுப்பார்க்கிறேன்.
சிணுங்குகிறது.
கலைத்துப்போடுகிறேன்.
நாணம் கொள்கிறது.

மடித்து வைக்கிறேன்.
மகிழ்ச்சி கொள்கிறது.


பீரோவில் வைத்துத்
திரும்புகிறேன்.

ஏனோ மடிக்கமறந்ததாய்
இன்னும் கட்டிலோரம்
தொங்கிக்கொண்டிருக்கிற
சேலை.

என் நிழலில் மனைவி.
முதுமையின் ஆதுரம்.

தேம்பி ததும்புகிற மனது.
சொல்கிறேன் அவளிடம்.

அவசரமில்லாது
அழைத்துப்போய்
சேலையின் மடியில் அமர
வைக்கிறாள் என்னை!



**விமலன்.**

---



### பச்சைக் கிளிகள் பாடட்டும்.!

பச்சைக் கிளிகள்..
பச்சைக் கிளிகள்..
பாட்டுப் பாடுது.!
பசுமைக் காடு
ஆற்றங் கரையில்
கூட்டம் போடுது!
அச்சமில்லை..
அச்சமில்லை..
என்றே பேசுது.!
ஆடிப் பாடி.. ஆடிப் பாடி..
அன்பில் வாழுது!
வண்ண வண்ணப்
பூக்கள் நடுவே..
மேடை போடுது!
சின்ன சின்னப்
பறவைகள் கூடி..
செந்தமிழ்ப் பாடுது!
கூண்டுக் கிளிகள்
கூண்டுக் கிளிகள்..
சிறகு விரிக்கவே..
வேண்டும் வேண்டும்
விடுதலைக் காக....
ஒன்றாய் கூடுது!
வானம் மேலே.. பூமி கீழே..
யாவும் பொதுவாக..
கானம் பாடும்..
கானகம் எங்கும்.
மாறனும் பொதுவாக!
நாடும் வீடும்..
காடும் கழனியும்..
பசுமை நிலமாக..
நாளும் பொழுதும்
பச்சைக் கிளிகள்
பாட்டுப் பாடுது!

**வே.கல்யாண்குமார்.**

---

### சிதையா நெஞ்சுறுதி கொள்!

உதயத்தை எழுப்புக.!
உள்ளத்தை உறுதிசெய்!
இதயத்தை இனியேனும்
இரும்பு உலை யாக்குக..
சிதையாத நெஞ்சுனக்குத்
தம்பி.! இதை சிந்தித்துச்
செயலாற்று தம்பி.!

தடைகளைப் படியாக்கு!
உடைக்கிற உளியாக்கு!
கடைநிலை இருப்பவர்
நிலையினை சீர்தூக்கு!
விடைபெற துடிக்கட்டும்
நெஞ்சு தம்பி! அது..
வெகுணாடெழுமோ என்று
கூறு தம்பி!

முட்களை உடைத்தெறி!
களைகளை களைந்தெறி!
புட்களாய் நினைத்தனர்
புயலென புறப்படு.!
முடியாது என்பதே கிடையாது
தம்பி! இங்கு அடையாதக்
கதவுகள் உழைப்பென நம்பி!

நதியென்றால் படகாகு!
நாடென்றால் கொடியாகு!
பொதுவாகும் நாள்வரை
சிதையாத நெஞ்சுகொள்!
"நான்" என்றால் உதடுகளும்
ஒட்டாதே தம்பி! இனி..
"நாம்" என்றே சொல்லிடுக
நலமாகும் தம்பி!

பொட்டா நீ? பூச்சியா..
மனிதனென்று நின்று கூவு!
கட்டாக இருந்துவிடு..
சிதையாத நெஞ்சு கொள்!
தட்டாதே! உடைத்தெறி!
தவறல்ல தம்பி!
எட்டாத ஏழைகளை
நினைத்துக்கொள் தம்பி!

பாட்டன் பாரதியின்
கனல்வரியை உள்வாங்கு.!
ஒட்டை.. உடசல்களை
உடைத்தெறியப் பாட்டெழுது.!
நாட்டுக்கும்
மொழிக்குமே
நமது உயிர்த்
தம்பி.! அதற்கு
நாளெல்லாம்
நெஞ்சத்தை
உறுதிசெய்
தம்பி.!



**வே.கல்யாணகுமார்**

---

ஏக்கத்துடன் கண்கள்
கலங்கினாலும்....



அன்பின்
அடைமழை
யில்...

நனைந்து

திளைக்கின்றன...செவிகள்...
உன் உரையாடலில்....

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

---

### சேமிப்பே ஆதாரம்

" தினமும் சேமி வீணாக்காத
காலை மதியம் இரவு
உணவு ....."

பணம் பழம் காய்கறி
பெட்ரோல்
டீசல் எண்ணெய் .... "

கைசெலவு வீண் செலவு
மருந்து மாத்திரை..."

இன்பச் சுற்றுலா வெளியில்
உணவு பாட்டில் தண்ணீர் ..."

ஒன்று இருக்கும்
இன்னொன்று என தேவை
இல்லாத செலவு ... "

இளமையில்
சேமிக்க கற்றுக்கொள்
முதுமை இனிக்கும் ..."

சிக்கனம் என்ற
மந்திரச் சொல்லை
கையில் எடு சேமிப்பு என்ற
உண்டியல் நிறையும் ..."

அன்பை சேமி உறவை கூட்டு
நட்பை சேர் கூடி வாழ் ..."

வீடும் நாடும்
செழிக்க
சேமிப்பு
தான் மருந்து
சிறுதுளி
பெருவெள்ளம்..."



**ஆர். சீதாராமன்**
சீர்காழி

---



### வெட்கம்

என்னை நேரில்
காணும் போதெல்லாம்
வெட்கம் பூசிக் கொள்கிறாய்
நீ!
நம் கா த லு க் கு
விடுமுறை விடுவதற்காகவா
உன்னைத் தேடி வந்தேன்
நான்!

### வேண்டும்

என் உறக்கத்தை
எடுத்துச் சென்று எங்கோ
ஒளித்து வைத்திருக்கிறது
உன் கா த ல்!
நீதான் அதைக்
கண்டுபிடித்துத் தர
வேண்டும்!

### வலை

என்ன ஒரு வியப்பு!
கயல் விழிகள் உனக்கு!
ஆனால் நீயோ நான் விழ
வலை விரித்தாய்!

### உலா

நீ என்னை
முறைத்துப் பார்க்கும்
போது(ம்) கூட எனக்குள்
என்னமாய்
உலா வருகின்றன
இந்தக் கவிதைகள்!

### கும்மி

உன் கண்களின்
தேடுதல் வேட்டையில்
சிக்குவேன் என்று
சிறிதும் எதிர்பார்க்கவில்லை
நான்! என்ன அதிசயம் பார்!
கும்மியடித்து மகிழ்கிறது
என் கா த ல்!

### திட்டம்

நீ வந்து என்
எதிரே நின்ற வினாடியில்
பார்வையால் என்னை
விழுங்குகிறாய் நீ!
உன்னைப்பெண்
கர்ணனாக
மாற்றத் திட்டம்
தீட்டுகிறது
என் காதல்!

### நலம்

அள்ளி அணைத்து
நலம் விசாரிக்கிறாய்!
என்னை வாடாமல்
வைத்திருப்பது உன்
அன்பு ஒன்றுதான்
என்று தெரிந்து
வைத்திருக்கும் நீ!

### விதி விலக்கு

பூக்களைப் பறிப்பது
எனக்குப்பிடிக்காதுதான்!
ஆனால் நீ மட்டும்
எனக்கு அதில் விதி
விலக்கடி!

### கோலம்

வாசலைச்சுத்தம் செய்து
தண்ணீர் தெளிக்கிறாய்!
உன் அழகில் கோலம்
போட்டுக் கொண்டது
என் மனசு!

### அதிசயம்

நீ ரோசாப்பூ நிற
அழகி என்றாலும் உனக்கு
மல்லிகை மனசு!
இப்பொழுது சொல்!
பூக்களுக்கு நான்
மயங்குவதில்
என்ன அதிசயம் இருக்கிறது?!

### யார்?

உன்னை நான்
வைத்திருப்பதாக
எவர் எவரோ
சொல்கிறார்கள்!
யாருக்கும் தெரியாமல்
உன்னை நான் என்
இ த ய த் தி ல்
அமர வைத்ததை
எப்பொழுது எப்படி யார்
கண்டுபிடித்திருப்பார்கள்?!

### கடமை

நீ ஒவ்வொரு முறை
என்னைக்கடந்து செல்லும்
போதும்முறைத்துக்
கொண்டேதான் செல்கிறாய்!
ஆனால் அப்பொழுதும் கூடக்
கா த ல் எழுதும்
கடமையிலிருந்து
தவறுவதேயில்லை
உன் கண்கள்!



**முத்து ஆனந்த்** வேலூர்

---

### வாழ்க்கை ஒளி

தேனொளி சிந்தும் தேயா
நிலவை தேடித் தேடிப்
பார்க்கின்றேன்!
தென்படு ம் அழகை கண்பட
நோக்கி தெவிட்டாப்
பாடலை வார்க்கின்றேன்!

நாநில மெங்கும் நல்லொளி
சிந்தும் நற்குண
பொற்பினை
ஏற்கின்றேன் !
நானும் அது போல்
நன்மை செய்திட
நாளும் முயன்று
தோற்கின்றேன்!

வானொளி சிந்தும் வரமதை
தந்த இயற்கையை எண்ணி
வியக்கின்றேன்!
வாட்டும் துயரிலும் வாழ்க்கை
ஒளிபெற வழியால் நன்மை
பயக்கின்றேன்!

தானொளி சிந்தித் தணியா
புகழை தரணியில் உன்போல்
தாவெண்பேன்!
தனக்கும் நிகராய் எவரும்
வேண்டாம் என்றால்
சரிதான் போவென் பேன்!



**வெ. தமிழழகன்**
எம்ஏ பிஎட்
சேலம்.

---

## 1000 பேருக்கு காலை உணவு



முதல்வர் ஸ்டாலின் பிறந்த நாளை யொட்டி எழும்பூர் பகுதியில் 1000 பேருக்கு அமைச்சர் சேகர் பாபு காலை உணவு வழங்கினார்.

## வெற்றி 93 மாணவ, மாணவியருக்கு சான்றிதழ்கள்



ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற கலைத்திருவிழாவில் வெற்றி 93 மாணவ, மாணவியருக்கு கலெக்டர் கந்தசாமி சான்றிதழ்களை வழங்கினார்.

---

## திருப்புல்லாணி சேர்த்தி சேவை



திருப்புல்லாணி சேர்த்தி சேவை

## "சர்தார் 150 பாதயாத்திரை"




சர்தார் வல்லபாய்படேலின் 150-வது பிறந்தநாளை முன்னிட்டு, மை பாரத்-காரைக்கால் மற்றும் காரைக்கால் மாவட்ட நிர்வாகம் இணைந்து "சர்தார் 150 பாதயாத்திரை" என்ற நிகழ்ச்சியை நேற்று நடத்தின.

## மாநில கோகோ போட்டியில் விளையாட தகுதி




விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மாவட்ட அளவிலான கோகோ போட்டியில் முதலிடம் பெற்று ராணிப்பேட்டையில் நடக்க உள்ள மாநில கோகோ போட்டியில் விளையாட தகுதி பெற்றதை அடுத்து இப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயசீலன் தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது

## மாநில அளவில் நடக்கும் போட்டிக்கு தேர்வு



திண்டிவனம் அடுத்த சலவாதி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவியான பத்மஶ்ரீமாவட்ட அளவில் நடந்த இலக்கிய மன்ற போட்டியில் கவிதை எழுதுதல் பிரிவில் முதலிடம் பெற்று மாநில அளவில் நடக்கும் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த மாணவியை பள்ளி மேலாண்மை குழு மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்

## சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன்



உடுமலைப்பேட்டை அக்டோபர் -31 ஶ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் சுக்கிரவார நன்னாளில் வண்ணமலர் மாலைகளுடன் சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன் அருள்பாலிக்கும் காட்சி.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஶ்ரீதர் திருவண்ணாமலை

## ராஜராஜசோழன் 1040 வது பிறந்த நாளையொட்டி கிராமிய கலைநிகழ்ச்சிகள் நடந்தன



தஞ்சாவூர் பெரிய கோவிலில் ராஜராஜசோழன் 1040 வது பிறந்த நாளையொட்டி கிராமிய கலைநிகழ்ச்சிகள் நடந்தன.

# வாசகர் கடிதம்

முகில் தினகரன் எழுதிய " மச்சம்" குமாரின் காதலை அண்ணன் கோபியுடன் சோதிக்க நினைத்த, மஞ்சுவிற்கே விலையானது. அவள் அண்ணனுக்கும், அவளைப் போல உள்ள மச்சத்தால் அது முறிந்து போனது.

ஜனனி அந்தோணி ராஜ் எழுதிய " அன்பு மட்டும் பழுதாகாது" - அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்ற குறளை நினைவூட்டியது.



**-ஸ்ரீகாந்த்**
திருச்சி

தமிழக வாக்காளர்களிடம் வீடு வீடாக ஆய்வு நடத்த தேர்தல் ஆணையம் உத்தரவு. திருச்செந்தூரில் சூரசம்ஹாரம் கோலாகலமாக நடந்தது கரூரில் உயிரிழந்த குடும்பத்தினரை வரவழைத்து விஜய் ஆறுதல் கூறினார் தனியார் பல்கலைக்கழக சட்ட திருத்த மசோதா வாபஸ் பெறப்படும் என அறிவிப்பு. ஆப்பிளை விட அதிக சத்து கொடுக்காப்புளியில் உள்ளது. ஆர் டி இ மாணவர் சேர்க்கை விண்ணப்ப படிவம் 82 ஆயிரத்தை தாண்டியது. திருப்பூரில் மழையால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு 52 முகாம்கள் அமைக்கப்பட்டது. சமையலறை டிப்ஸ் அனைத்தும் அருமையாக உள்ளது. உடுப்பி சென்ட் மேரிஸ் தீவு பற்றிய கட்டுரை மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. பக்கி ஹாம்கால்வாய் தூர்வாரும் பணி தொடங்கியது. பூண்டி ஏரியில் 7 ஆயிரம் கன அடி நீர் அதிகரிப்பு. உத்தரகாண்ட் திருமண நிகழ்ச்சியில் பெண்கள் தங்க நகைகள் அணிய தடை விதிக்கப்பட்டுள்ளது.

குடும்பக் கட்சி அரசியல் இனி எடுபடாது என அமித்ஷா அறிக்கை 21 மாவோயிஸ்டுகள் சரணடைந்தனர் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக சூரியகாந்தை நியமிக்க சிபாரிசு. அமெரிக்காவில் நாலு கோடி மக்களுக்கும் உணவு கொஞ்சம் ஏற்படும் என எச்சரிக்கை. வங்கதேச வரைபடத்தில் இந்திய மாநிலங்கள் இணைக்கப்பட்டுள்ளது மனித உரிமை மீறல்களை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும். நாளுக்கு நாள் வாசகர்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டு செல்வது மகிழ்ச்சியாக உள்ளது. மேலும் தெய்வம் இதழுக்கு அனைவரும் சந்தா கட்டி அதனை ஆதரிக்க வேண்டும். ஆன்மீகத்தை ஆதரிக்க வேண்டியது நமது கடமை ஆகும். இதற்காக அயராவது பாடுபடும் தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்திற்கு வாழ்த்துக்கள்.



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

தேசியத் தலைவர்கள் விழாவை எல்லா சமூகத்தினரும் கொண்டாட வேண்டும்#துணை ஜனாதிபதி சீனா மீதான வரி பத்து சதவீதம் குறைப்பு#சீன அதிபர் ஜின்பிங்குடன் சந்திப்புக்குப் பி அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பு
சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி#அனைத்துக் கட்சியினருடன் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி ஆலோசனை
நிறைந்தது மனம் திட்டத்தின் மூலம் 16747 விவசாயிகள் பயன்#கடலூர் கலெக்டர் சிபி ஆதித்யா தகவல்
பணி நியமனங்களுக்கு தலா ரூ.35 லட்சம் வசூலித்ததாக புகார்#தமிழக டிஜிபிக்கு அமலாக்கத்துறை கடிதம்=முன்பு செந்தில் பாலாஜி மீதும் இதே போன்ற குற்றச் சாட்டு எழுந்தது
ஓபிஎஸ், தினகரன், செங்கோட்டையன் திமுகவின் B டீம்#எடப்பாடி பழனிச்சாமி கூறினார்
இலங்கையில் நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகள் உடைக்கும் அவலம்
கோல் இந்தியா விற்பனை சென்ற காலாண்டில் 26909 கோடியாகச் சரிவு
புதுக் கவிதைகள் அமர்க்களம் நூல் விமர்சனம் அருமை வாசகர் கடிதங்கள் சிறப்பு
பதற்றத்தை உண்டாக்க இதுவரை 229 வெடிகுண்டு மிரட்டல் கடிதங்கள்#மர்ம ஆசாமிகளைக் கைது செய்ய போலிசார் தீவிரம்
குடிபோதையில் வாகனம் ஓட்டியவர்களுக்கு நூதன தண்டனை#1000 துண்டுப் பிரசுரங்கள் வழங்க உத்தரவு
உலகின் கடல்சார் மையமாக இந்தியாவை மாற்றுவதில் தமிழகம் உறுதுணையாக நிற்கிறது#அமைச்சர் எவ வேலு பேச்சு
ஆந்திராவைப் புரட்டிப் போட்ட மோந்தா புயல்#ஹெலிகாப்டரில் ஆய்வு செய்த முதல்வர் சந்திரபாபு நாயுடு
சென்னை அரும்பாக்கத்தில் நிதி நிறுவனம் நடத்தி 2.4 கோடி மோசடி#இருவர் கைது
ஆர்டிஐயில் கேட்கப்படும் கேள்விகளுக்கு துரிதமாய் பதில் வழங்க பள்ளிக்கல்வித் துறை நடவடிக்கை
மதுரை விமான நிலையத்தில் 8 கோடி போதைப் பொருள் பறிமுதல்#இருவர் கைது=உடனே மரண தண்டனை வழங்கினால் வேறு குற்றங்கள் எழாது
இந்திராகாந்திக்கு தைரியம் அதிகம்#ராகுல் காந்தி
பாகிஸ்தானுக்காக உளவு பார்த்தவர் டெல்லியில் கைது
ரஷிய எண்ணெய் மீதான தடை குறித்து இந்தியா ஆய்வு#வெளியுறவு அமைச்சகம்
வெளிநாட்டவர்க்கு வேலை வழங்குவதை அமெரிக்கா நிறுத்தியது#இந்தியர்கள் பாதிப்பு
இரண்டாவது அணு ஆயுத சோதனை வெற்றி#ரஷ்ய அதிபர் புடின் அறிவிப்பு
லேசர் கதிர்வீச்சு மூலம் மழைப்பொழிவு சாத்தியமா#அபுதாபி தொழில்நுட்ப மைய ஆராய்ச்சியாளர்கள் விளக்கம்



**-பி.சுரேகா**
சென்னை

வணக்கம். 31 10 25 அன்றைய தமிழ்நாடு இ பேப்பரின் முதல் பக்கத்தில் தேசியத் தலைவர்கள் விழாவினை எல்லா சமூகத்தினரும் கொண்டாட வேண்டும் என்ற ஒரு மனதான முடிவு மிகவும் அருமை.. பாராட்டுக்கள். இன்றைய பஞ்சாங்கம் இன்றைய நாளை நல்லதாக அமைய எனக்கு உதவியது. மனம் நிறைந்த பாராட்டுக்கள் .

பசும்பொன் தேவர் நினைவிடத்தில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் மரியாதை செலுத்திய படங்களும் திருக்குறளும் மகிழ்வுடன் அந்த பக்கத்தை படிக்க வைத்தன .

மழைக்காலம் குளிர்காலம் என்றாலே எல்லோருக்கும் சளி இருமல் காய்ச்சல் வருவது இயற்கை. அந்த மாதிரி நெஞ்சில் சளி கட்டிக் கொண்டால் எப்படி நாம் வீட்டு வைத்தியம் செய்து நம்மை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம் என்று நலம் தரும் மருத்துவம் பகுதியில் 8 வீட்டு வைத்தியம் சொல்லிக் கொடுத்தது பாட்டியிடம் பேசியது போல மிகவும் அருமையாக இருந்தது மனமார்ந்த பாராட்டுக்கள்.

முத்துராமலிங்க தேவருக்கு நடிகர் விஜய் அவர்களின் புகழாரம் என்ற செய்தி ஆர்வமுடன் படிக்க வைத்தது

தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் சர் சேத்தூர் சங்கரன் நாயர் அவர்களின் வரலாறும் அவரைப் பற்றிய தகவலும் புகைப்படம் மிகவும் அருமை மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

பல் சுவை களஞ்சியம் பகுதி வழக்கம்போல் கிறுகிறுப்புடன் இருந்தது.. அதில் வந்த ஜோக்ஸ் விடுகதையும் என்னை மிகவும் கவர்ந்து ஆவலுடன் படிக்க வைத்தது..

தெய்வீக அருள் தரும் ஆன்மீகம் என்று தீராத வழக்கை தீர்க்க வைக்கும் வராகி அம்மன் வழிபாடு என்ற செய்தி மிகவும் அருமை. மனம் நிறைந்த பாராட்டுக்கள்.



**-உஷா முத்துராமன்**

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
Public Notice | Loss of Share
Legal Notice | Merger
Tender Notice | Acquisition
Society Notice | AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

Happy BIRTHDAY son



பேசாத வார்த்தைகள்
நம்மிடையே பரவி இருக்கின்றன!
அந்த வார்த்தைகளின் அர்த்தம் அடர்த்தியாக இருக்கின்றன.
அவற்றின் கனத்தாலேயே நம் உறவு
பிசிறற்று ஊடாடும் பாவு போல் சீராக உள்ளது.
அவைகள் என்ன சொல்கிறன;
என்று நாம் அறிந்திருந்தே இருப்பதால்
நான்.அவைகளை சொல்வற்கும்
நீ அதை கேட்பதற்கும்
அவசியம் என்ன உள்ளது?
ஆயினும்:
உன்னை முதலில் முத்தமிட்ட நினைவில்
என் உதடு இன்னும் ஈரம் காயாமல் ....
உன் அகவை நாளை நினைப்பூட்டுகிறது.
(01-11-1980)

(அன்புடன் அம்மா)
சசிகலா விஸ்வநாதன்

SEND AN EMAIL WITH Hi TO tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY NEWSPAPERS & MAGAZINES

WANTED
43 years Pharma Company
❖ ACCOUNTANT
❖ CLERK
For Kodambakkam,Chennai
Mail id: drgrpharma@gmail.com
93616 42440

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 - Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

**திருச்சி காமதேனு நகர், போலீஸ் காலனி IT Park அருகில்**
சகல வசதிகளுடன் **புதிய வீடு விற்பனைக்கு உள்ளது.**
விலை ரூ.41,00,000/-
பத்திரப்பதிவு இலவசம்
தொடர்புக்கு:
83000-11186
94439-05278

---

**COMMERCIAL BUILDING FOR RENT**
800 Square Feet Second Floor building in Abees Tower at the entrance of Carmel Mount Road, Ponnappa Nadar Colony in available for Monthly rent. It is Suitable for I.T.Company
Rent: Rs.15,000 P.M
Contact: 9442214477

---

**K. R. PROPERTY**
தீபாவளி வாழ்த்துக்கள்!
கோவை
**திருச்சி ரோடு, இராமநாதபுரம், சிங்காநல்லூர்** பகுதிகளில்
2.5 / 5.5 / 7 / 10 செண்ட் சைட்டுகள் வாங்க / விற்க
8122330572

---




---

**வீடு வாடகைக்கு**

திருச்சி குண்டூர் MIET கல்லூரி அருகில் 1BHK 2BHK வீடு வடகைக்கு
Contact Whatsapp
9952827579

---

**வாடகைக்கு**
நாகர்கோவில் மணிமேடை அருகில் 2000 ச.அடி Bldg, கார் பார்க்கிங் உடன் Bank, Finance, Software Company & Training Centre-க்கு ஏற்றது.
Cont: 9994811609
8608864937

---

**BUILDING FOR RENT**
in Arasur, Coimbatore
**66758 sq.ft**
Equal partition available
(Ready to Occupy in 30 Days)
Building width : 70 mtr.
Building Length : 88.6 mtr.
Power : 350 KVA and above
✆ 90954-30303
peninsulamarimuthu@gmail.com

---




---

**வணிக வளாகம் வாடகைக்கு**
**அரியலூர்**
பஸ் நிலையம் அருகில், ஜெயங்கொண்டம் ரோட்டில் சுமார் 800 ச.அடி கொண்ட தரைத்தளம் வாடகைக்கு உள்ளது.
Showroom / நிதி நிறுவனத்திற்கு ஏற்றது.
தொடர்புக்கு:
9445659427

---

**வள்ளியூர்** அருகில்
DTCP APPROVED PLOTS
வீட்டுமனை 3 செண்ட் ரூ. 6 லட்சம்
கமர்சியல் மனை 16 செண்ட் ரூ. 48 லட்சம்
9940 20 7778

---

**இடம் விற்பனைக்கு**
**3.5 சென்ட்,**
சிங்காநல்லூர் to ஹோப்ஸ் மெயின் ரோடு, ராமானுஜ நகர்,
93443 65645
99443 03030

---

**வள்ளியூர்** அருகில்
DTCP APPROVED PLOTS
வீட்டுமனை 3 செண்ட் ரூ. 6 லட்சம்
கமர்சியல் மனை 16 செண்ட் ரூ. 48 லட்சம்
9940 20 7778

---

**OFFICE**
SPACE FOR RENT @ GUINDY
+ 1st Floor 1300-sft
+ 2nd Floor 1300-sft
+ 3rd Floor 1300-sft
9841329316

---

**திருச்சி கே.கே.நகர் ஐயப்பா நகரில்**
2,100 சதுரடி நிலத்தில் 1000 சதுரஅடி பில்டிங்கில் வீடு விற்பனைக்கு உள்ளது
Rs.90 Lakhs
Cell: 9585400555

---

**வள்ளியூர் NH** அருகில்
வீட்டுமனை 4 செண்ட் ரூ. 4 லட்சம்
வீட்டுமனை 5 செண்ட் ரூ. 2 லட்சம்
9940 20 7778

---

**குடோன் வாடகைக்கு**
சத்திரோடு, கரட்டுமேடு காப்பிக்கடை அருகில்
3800 சதுரஅடி
குடோன் வாடகைக்கு.
98940 83747

---

மனை பிரிவுக்கு நல்ல இடம்
**59½ சென்ட்**
தென்னந்தோப்பு
இரணியல்
ரயில் நிலையம் அருகில்.
9952982749

---

**TYRE கம்பெனி STAFF 50 நபர் தங்குவதற்கு**
மாதவரம் மற்றும் திருவொற்றியூர் சுற்றுவட்டாரத்தில் ROOM வாடகைக்கு தேவை
91765 21641, 97899 74898

---

**FLAT URGENT SALE**
திருச்சி பஞ்சப்பூர் புதிய பஸ் ஸ்டாண்ட் அருகில்
**2BHK FLAT**
**Best Price Deal**
குறைந்த விலை!
சிறந்த லொக்கேஷன்!
சிறந்த முதலீடு!
89031 05956

---

**இடம் விற்பனைக்கு**
இராமன்புதூர் மீன் சந்தை அருகில் 6 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
ஆரல்வாய்மொழி to முப்பந்தல் மெயின்ரோட்டில் 15 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புக்கு:
8300134494
9360378520

---

**COMMERCIAL SPACE FOR RENT**
@ Ganapathy Sathy main road
(Opp Kannan Departmental Store)
**2000 Sqft**
Ist floor suitable for
**OFFICE & COMMERCIAL PURPOSES**
98422 25310

---

VILAMBARAM
**WANTED**
10 SMART FEMALE
**Telecallers**
Job Type: Full-time
Education : Bachelor's degree
Freshers And Experience
Both can apply.
SEO & DIGITAL MARKETING COMPANY SINCE 2020
Don't miss this opportunity
INTERESTED CANDIDATES CAN APPLY
+91 9337501889
+91 7789941009

Job @ Chennai
www.vilambaram.com

## YESEM GROUP
INVITES
AGENT
DEVELOPMENT OFFICER
BUSINESS DEVELOPMENT MANAGER
CONTACT:
YESEM CHITS PRIVATE LTD (Regd.)
No.159, First Floor, Madhavaram High Road, Perambur, Chennai - 600 011.
(Near Canara Bank, Adj.to Appollo Computer Lab )
Cell No. 98402 78805 / 99447 88056
Land Line : 044 - 45938805 / 044 - 46148805
A NEW WAY TO BORROW, SAVE AND GROW

## WANTED
✦MARKETING / SALES EXECUTIVE &
✦MACHINE OPERATOR
Offer: Salary Higher Than Current + Good Growth Opportunity .
fresher & experienced can apply .
GLASSTERR WINDOW SYSTEMS
Thudiyalur
(UPVC WINDOW INDUSTRY )
89254 54433

## WANTED
வெல்டர்
பிட்டர்
ஹெல்பர்
வார சம்பளம் வழங்கப்படும்
PERFECT ENGINEERINGS
No.36, 9th Street,Subramaniyam palayam, G.N.Mills, Cbe - 29
63745 20793
73730 10107
SAA

## Make Money Without Investment Through Mobile
Call : 9337501889




## WANTED
CHENNAI PROJECT
PIPING
- FABRICATORS
- TIG / ARC WELDERS
- SUPERVISORS
- GRINDERS

90920 08000 / 99421 71692
prateeshengineering@yahoo.co.in

## PERMANENT JOB
- Plumbers ( பிளம்பர்கள் )
- Water Purification Service Technicians

MNC COMPANY.
9003101308

## WANTED
Campus Manger
Store Manager
Assistant Librarian (B.LS & M.LS)
ITI Electrical (Electrician / Wireman) ( 0-5 yrs Exp)
Drivers for school & college
8925803086
recruitmenthospital.tn@gmail.com

## KEN Guarding & Facility Services
அண்ணா நகர், பூந்தமல்லி, இருங்காட்டுக்கோட்டை,புழல், பொத்தேரி,மணலி ஆகிய பகுதிகளுக்கு
- ★ S/M -Rs.24,000 - 4 Off.
- ★ Bouncers-Rs.22,000 - 4 Off.
- ★ ASO -Rs.21,000 - 4 Off.
- ★ SG & LG -Rs.18,000 - 4 Off.

மற்றும் Operation Manager & Field Officers தேவை
Salary: Rs.25,000 to Rs.35,000
11,Sippoy lane,Karayanchavadi,Ch-56
8939829153/54/56
8939070473

## தேவை
டீசல் மெக்கானிக் & மார்க்கெட்டிங் எக்சிகியூட்டிவ்
முழு கேரளா / சிறந்த சம்பளம் + ஊக்கத் தொகை
தொடர்புக்கு:
95447 71700
94007 11808

## CHENNAI SAKTHI STEEL PRODUCTS (P) LTD
WANTED
- POWER PRESS OPERATORS
- TURNER
- POLISHERS

278, SIDCO Industrial Estate, Thirumudivakkam, Chennai-44
7558111031

5 வருட அனுபவமுள்ள
## கார் டிரைவர்கள்
சம்பளம் Rs. 22,000 to 25,000.
வேலை நேரம் 12 hrs.
& எலக்ட்ரீஷியன் தேவை.
நேரில் அணுகவும்,
43,கண்ணதா சன் சாலை, தி.நகர், செ-17
Ct: 94454 32752

MITSUBISHI ELECTRIC
AIR CONDITIONERS
WANTED EXPERIENCED
## Sales Engineers
for Ventilation Products
THE AC ZONE PVT LTD CHETPET
CONTACT@THEACZONE.COM
WHATSAPP 9841068380

## டிரைவர் தேவை
Chairmanக்கு Automatic கார் ஓட்ட அனுபவமுள்ள டிரைவர் தேவை
98414 41844
93455 31270

## AMBAL TECH
JUNIOR MAINTENANCE
Support Job for Automobile dealer in COIMBATORE. 1-2 yrs Preferably in Electrical Field ITI / Polytechnic
Ph:99430 26294
SAA
hr.ambaltech@gmail.com

## செக்யூரிட்டி வேலைக்கு ஆண்/பெண் தேவை
சம்பளம் : 12000 - 16000
தங்கும் இடம் + உணவு இலவசம்
இடம் : கோவை, திருப்பூர்
படிப்பு : 10-ம் வகுப்பு
வயது : 21 முதல் 55 வரை
சாய் பாபா செக்யூரிட்டி சர்வீஸ்
பல்லடம்
திருப்பூர் - 641664
91598 90598

## டிரைவர் தேவை
HIGH -END ஆட்டோமேடிக் கார் ஓட்டுவதற்கு அனுபவமுள்ள டிரைவர் தேவை
சம்பளம்: 25,000 + அல்லவன்ஸ்
Age 25 to 45 | 2 Wheeler Must.
அண்ணாநகர், அம்பத்தூர், வில்லிவாக்கம், கொளத்தூர், ரெட்டேரி அருகில் உள்ளவர்கள் மட்டும் அணுகவும்.
A52, Ankur Palm Springs No. 4 CTH Rd, Padi, Ch-50 Next to Padi Saravana Store
More Details: 9841 00 2005

## PERSONAL
கார் டிரைவர் தேவை
Qualified Car Driver
VM Garden Outer Ring Road, West Tambaram
Age Below 40
Mail : vmgarden9@gmail.com
WhatsApp: 88700 02462

## WANTED IN CIVIL
- Senior Engg (6-10 Yrs)
- Junior Engg (3-5 Yrs)
- Site supervisor (1-2 Yrs)
- Asst. Stores Manager (3-5 Yrs)
- Quantity Surveyor (7-10 yrs)

75300 69901
work@masterlinestructures.com

கோவை காந்திபுரத்தில் உள்ள Non-Veg. ஹோட்டலுக்கு
## ஹவுஸ்கீப்பிங் & சப்ளையர்கள்
வேலைக்கு தேவை
72000-10550
CKNB

## பள்ளி வாகனத்தில் சென்று வர, குழந்தைகளை கவனிக்க பெண் பணியாளர்கள் தேவை
விண்மீன் ஐசிஎஸ்இ பள்ளி
பார்வதிபுரம், நாகர்கோவில்
செல் : 9080206589

## PEST CONTROL OPERATOR
பூச்சி மருந்து அடிக்க ஆட்கள் தேவை
Cell : 99948 43057
93847 25836


## ADVERTISE WITH US
CONTACT US
9438610756

## LE RAJ COURTYARD
GUMMIDIPOONDI
Wanted
HOTEL RECEPTIONIST
GOOD COMPUTER SKILL,
ENGLISH SPEAKING.
SALARY 15K - 20K
WITH FOOD AND ACCOMMODATION
Contact:
9940763333

## சமையல் மாஸ்டர் தேவை
கோவை இருகூர் L&T பைபாஸில் உள்ள பிரபல மருத்துவமனை கேன்டீனுக்கு அனுபவமுள்ள சமையல் மாஸ்டர் தேவை
94887 80957
99522 17606


## வீட்டு வேலைக்கு ஆள் தேவை
வீட்டில் தங்கி இருந்து வீட்டு வேலைகளை செய்யத்தக்க நல்ல ஆரோக்கியமாக உள்ள பெண் தேவை தகுதிக்கேற்ற சம்பளம் தரப்படும்.
புரோக்கர்கள் தவிர்க்கவும்.
தொடர்பு கொள்ள:
94888 88223

URGENTLY REQUIRED
- AC DUCTMAN
- AC TECHNICIAN
- CHILLER ELECTRICIAN
- COPPER PIPE BRAZING
- PIPE FITTER
- PIPE WELDER
- MECHNICAL FITTER
- HVAC PROJECT MANAGER
- MEP HELPER

Last drawn Salary 20% hike
RAPID HVAC SOLUTIONS PVT LTD
Poonamalle, Chennai 600123
enquiry@rapidhvac.co
vivekpandian@rapidhvac.co
90439 49587,78458 29587



# பல்சுவை களஞ்சியம்




## போதுஅறிவு பூங்கா....

1: 1857ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் கழகம் ஆரம்பிக்கப் பட்டது.

2:நாண யங்களைப் பற்றிய படிப்பு நூமிஸ் மாடிக்ஸ்என்பதாகும்.


3: மனித உடலிலுள்ள சின்னஞ் சிறு எலும்பு நடுச் செவி எலும்பு.

4: தேசிய கீதத்திற்கு இசைமைத்தவர் கேப்டன் ராம்சிங் தாக்கூர்.

5: 19.4.1975 அன்று ஆரியப்பட்டா செயற்கைக் கோளை இந்தியா விண்ணில் ஏவியது.

6: "லிவிங் ஹிஸ்டரி" என்னும் சுயசரிதை நூலை எழுதியவர் ஹிலாரி கிலிங்டன்.

# ...ஸ்ரீ ரமணவழி...



எல்லாத்தையும் ஒரு சக்தி நடத்தறது அதாலேயே எப்போதும் நடத்தப்படறது அதுக்குத் தெரியும் என்ன செய்யணும் எப்படிச் செய்யணும்னு அதை நம்புங்கோ ... ஸ்ரீ ரமணவழி ... ஸ்ரீ பகவான் ... வாழ்கையின் முதல் படி துறவு பகவான் ரமணமகரிஷி. ஒரு சமயம் பகவான் ரமணர் முன்னிலையில் துறவு வாழ்க்கையின் முதல்படி எது என்று பலரும் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைச் சொல்லி, அதுதான் சரி என்று சொல்லிக் கொண்டிருந்தனர். அப்போது பகவான், அவர்களைப் பார்த்துப் பேசத் தொடங்கினார். நான் விருபாட்சா குகையில் தங்கி இருந்தபோது ஊருக்குள் சென்று பிட்சை எடுத்து வருவதே எங்களுக்கு உணவு! பெரும்பாலும் வெறும் அன்னம்தான் கிடைக்கும். அதுவும் எல்லோருக்கும் போதாது. எனவே நிறைய நீர் விட்டுக் கரைத்து, கஞ்சியாக ஆக்கி அனைவரும் பகிர்ந்து கொள்வோம்! அதில் சிறிது உப்புச் சேர்த்தால் சுவையாக இருக்குமே என்று தோன்றும். ஆனால், அதன் விருப்பத்தை ஒருபோதும் சட்டை செய்தது கிடையாது. ஏனென்றால் நாக்கு, கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடையாது. இன்றைக்கு உப்பு வேண்டும் என்று கேட்டுக் கிடைத்துவிட்டால், நாளைக்கு பருப்பு, காய்கறி என்று கேட்கவைக்கும். இப்படியாகத்தான் ஆசை ஆரம்பிக்கும். பிறகு மனதை ஆட்டிவைக்கும், நமது தேவைகளுக்கும் ஆசைகளுக்கும் ஒரு முடிவே இல்லாமல் போய் விடும். அதனை உணர்ந்து ஆசைகளுக்கு உடனுக்குடன் முடிவு கட்டிவிட வேண்டும். அலைவதும் நிலையற்றதுமான இம்மனது எதன் வசம் திரிகிறதோ அதனிடமிருந்து மனதை மீட்டு ஆன்மாவின் கட்டிற்குள் கொண்டு வரவேண்டும். மனம் அடக்குதல் தான், துறவு வாழ்க்கைக்கு முதற்படி! என்றார்.

# மீம்ஸ்







# வாக்கு மறதி..



கடுங் குளிர் நிறைந்த ஒரு இரவில் ஒரு மன்னன் தன் அரண்மனைக்கு வந்தான்.. அரண்மனைவாசலில் மெல்லிய ஆடையுடன் வயது முதிர்ந்த காவலாளியைப் பார்த்தான்.. குளிர் கடுமையாக இருக்கிறதே.. அதை நீ உணரவில்லையா..? என்று கேட்டான்.. ஆம்.. உணர்கிறேன் மன்னா.. ஆனால், குளிரை தடுக்கும் ஆடை என்னிடம் இல்லையே..! என்றான் காவலாளி..

அதற்கு மன்னன், கவலைப்படாதே, நான் அரண்மனை சென்று குளிரை தாங்கும் கம்பளி ஆடையை உனக்கு அனுப்புகிறேன்.. என்று கூறி அரண்மனைக்குள் சென்றான்..

மன்னரின் வார்த்தையை கேட்டு அந்த காவலாளி அகமகிழ்ந்தான்..

அரண்மனைக்கு சென்ற மன்னன் தான் வாக்களித்தை மறந்தே போனான்..

மனிதனின் எத்தனையோ பலவீனங்களில் பாழாய்ப்போன மறதியும் மிக மோசமான ஒன்று.. காலையில் பார்த்தால் அந்த காவலாளி இறந்து கிடந்தான்.. அவனருகே ஒரு கடிதம் இருந்தது.. அந்த கடிதத்தில் இவ்வாறு எழுதப் பட்டிருந்தது.. மன்னா..!! இவ்வளவு நாட்களாக கடும் குளிரை தாங்கி கொண்டிருந்தேன்.. ஆனால், குளிரை தாங்கும் ஆடை கிடைக்கும் என்ற என் எதிர்பார்ப்பு இதுவரை இருந்த என்னுடைய மன உறுதியை குலைத்து என்னை கொன்று கொண்டிருக்கிறது.. வாக்குறுதிய கொடுத்தால் அதனை எப்பாடுபட்டேனும் உறுதியாக காப்பாற்றிட வேண்டும்.. அது வெறும் வெற்று வார்த்தைகளில்லை..



காற்றில் கரையும் வார்த்தை என்றாலும் மற்றவருகளுக்கோ அது 'உயிராகக்கூட' இருக்கலாம்..

*ஆம்..! நீங்கள் கொடுக்கும் வாக்குறுதி, மற்றவரிடம் நீங்கள் எண்ணி பார்க்காத அளவு நம்பிக்கையை ஏற்படுத்தலாம்.. எனவே, அந்த வாக்குறுதிக்கு முன் சற்று யோசியுங்கள்..

வணக்கம்
வாழ்க வளமுடன்.



## விடுகதை

| | |
|---|---|
| பறவைகள் எங்கிருந்து வருகின்றன? | முட்டையிலிருந்து. |
| எல்லா பிரியாணிக்கும் டெஸ்ட் வச்சா எந்த பிரியாணி பெயில் ஆகும்? | முட்டை பிரியாணி. |
| அண்ணனுக்கும் தம்பிக்கும் என்ன வித்தியாசம்? | வயசு வித்தியாசம். |
| ஒருத்தர் கல்யாணம் பண்றது விவசாய கடன் கேட்டார் ஏன்? | ஏன்னா அது ஆயிரம் காலத்துப் பயிர்ல. |
| எறும்பு பெருசா யானை பெருசா? | அப்படியெல்லாம் சொல்ல முடியாது மேடம் பிறந்த தேதி வேணும். |
| டாக்டர் என்ன நாய் கடித்து விட்டது எந்த இடத்தில? | பெருமாள் கோவில் சந்துல. |



# ஜோக்ஸ்


No - 2 வீட்டில்நடந்தது.. எங்கள் பையன் சிறுவயதில் சாப்பிட்டு கொண்டு இருந்தான்.
அப்போது சாப்பாட்டு தட்டில் அவர்கள் அப்பா முடி எடுக்க யார் முடி என்று கேட்க எல்லாரும் ஒவ்வொருத்தரைச் சொல்ல அவன் முடிவெள்ளையாக இருப்பதைப் பார்த்து வயசான முடி என்று சொல்ல அவன் சொல்லிய விதம் அனைவருக்கும் சிரிப்பு. என் அத்தையும் (மாமியார்) சேர்ந்து சிரித்தார்கள்.

*********************

ஆசிரியர்: தைக்கும் சித்திரைக்கும் என்ன வித்தியாசம்?
மாணவன்: தை மாசம் நாம சூரியனுக்கு பொங்கல் வைப்போம்.. சித்திரை மாசம் சூரியன் நம்மள பொங்கல் வைக்கும்
ஆசிரியர்: ???
கணவன் மனைவி
கடி ஜோக்ஸ்: எப்படி மாட்டியிருக்கேன் பார்த்தியாப்பா?

*********************

ஒருத்தன் இந்தாடா.. பொங்கல் சாப்பிடுனு ஒரு பாக்ஸை கொடுத்தான்.
திறந்து பார்த்தா பாக்ஸ் காலியா இருந்துச்சு.. என்னடா பொங்கலை காணோம்னு கேட்டேன்..
அதுக்கு அவன் சொல்றான்.. இதுதான் டா காணும் பொங்கல்னு சொல்லிட்டு போறான்..



**************

கணவன்: பக்கத்து வீட்டுக்காரன் சரியான பைத்தியமா இருப்பான் போல!

மனைவி: ஏன் என்னாச்சு?

கணவன்: நான் ஹேப்பி பொங்கல்னு சொல்றேன்.. அவன் ஹேப்பி இட்லினுட்டு போறான்.

***********

பேனை தொடைச்சி பரண்ல இருந்த சாமானை எல்லாம் இறக்கி, ஏத்தி, சுண்ணாம்பு அடிச்சு.. வீட்டைக் கழுவி.. ஒரு வாய் பொங்கல் சாப்பிடுறதுக்கு இந்த வீட்ல என்னவெல்லாம் பண்ண வேண்டியிருக்கு?
நல்ல இடமா பார்த்து கட்டி வைக்கணும் - அந்த ஒரு வார்த்தையை நம்பி ஏமாந்த 90ஸ் கிட்!

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## யாருக்கு பொதுவாக ரத்த குறைவு ஏற்படும்?



சரியான உணவு உண்ணாமல் இருப்பவர்கள், கர்ப்பிணிகள், தைராய்டு குறைபாடு உள்ளவர்கள், சிறுநீரக குறைபாடு உள்ளவர்கள், எதிர்ப்பு சக்தி குறைபாட்டினர்,

நாட்பட்ட நோயாளர்கள், வயதானவர்கள், குழந்தைகள் ரத்தம் அதிகரிக்க என்ன சாப்பிடலாம். ஆரோக்கியமான சரிவிகித உணவு மிக அவசியம். எல்லாவிதமான கீரைகளிலும் இரும்புச்சத்தும் மற்ற விட்டமின்களும் நிறைந்திருக்கிறது. அத்துடன் பருப்பு, பால் மீன் முட்டை போன்றவை புரோட்டின் சத்தை கொடுக்கும்.

ஒரு சில காய்கறிகள் பழங்களில் இரும்புச் சத்து அதிகமாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக பேரிச்சை, முருங்கை புளிச்சக்கீரை.

## தண்ணீர் ஒவ்வாமை...



குளியல் என்பது உடலை தூய்மையாக வைத்திருக்க அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு பழக்கமாக இருக்கிறது. ஆனால், குளியல் என்றாலே சிலருக்கு பயம் ஏற்படும் நிலையும் உள்ளது. ஏனென்றால் உடலில் தண்ணீர் படும்போது தோல் அரிப்பு தாங்க முடியாது. இந்த நிலைக்கு அக்வாஜெனிக் புரூரிட்டஸ் அல்லது தோல் தினவு என்று பெயர். இது ஒரு சிலருக்கு ஏற்படும் அரிதான தோல் பாதிப்பு ஆகும். இந்த பாதிப்பு உள்ளவர்கள் தோலில் தடிப்பு அல்லது நிற மாற்றம் எதுவும் ஏற்படுவது இல்லை. குளித்த உடன் உடலை அரிப்பில் இருந்து மீட்க துணியை கொண்டு நீண்ட நேரம் தேய்த்துக்கொண்டே இருக்கும் நிலைமை காணப்படும்.

இந்நோய் காரணம் குறித்து இதுவரை மருத்துவ உலகத்தால் முழுமையாக புரிந்து கொள்ள முடியவில்லை. உடலில் தண்ணீர் பட்டதும், நரம்புகள் ஏன் இது போன்ற ஒவ்வாமை அறிகுறிகளை ஏற்படுத்துகின்றன என்பதற்கு சில காரணங்கள் இருக்கலாம் என்று மட்டும் சொல்லப்படுகிறது. ஒரு சிலருக்கு ரத்தத்தில் ஹீமோகுளோபின் கூடுதலாக அதிகரித்து இருந்தால், இதுபோன்ற பாதிப்பு ஏற்படும்.

ஹெபடிடிஸ்-சி மற்றும் சில மூட்டு நோய்கள் இருந்தால் இந்த நிலை ஏற்படலாம் என டாக்டர்கள் கூறுகின்றனர். அதே போல், மன அழுத்தம், தோல் கசிவு, சில மருந்துகள் காரணமாகவும் அரிப்பு அதிகரிக்கலாம். சில வேளைகளில், தண்ணீர் தோலின் மேல்புறத்தை தொட்டதும், 'மாஸ்ட் செல்கள்' எனப்படும் நோய் எதிர்ப்பு செல்களில் உள்ள ஹிஸ்டமின் போன்ற வேதிப்பொருட்கள் வெளியே வந்து அரிப்பு ஏற்படுத்தும் என்றும் தெரியவந்துள்ளது. இயற்கையின் பல சிக்கலான கேள்விகளுக்கு விடை தெரிவதில்லை. அதில் இதுவும் ஒன்று என மருத்துவ உலகம் கூறுகிறது.

## நடனமாடுபவர்கள் திடீர் மரணம்: DJ சத்தத்தால் மாரடைப்பு



திருமண நிகழ்ச்சிகள், விழாக்களில் தற்போது டி.ஜே. சத்தத்துடன் நடனமாடுவது புதிய கலாச்சாரமாக மாறிவிட்டது.

இதே போன்ற அதிக சத்தத்துடன் பாடல்களை ஒலிபரப்பி நடனம் ஆடும் போது திடீரென சிலர் இறக்கும் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு மாமல்லபுரத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் நடனமாடிக் கொண்டிருந்த பெண் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து இறந்தார்.

இதேபோல நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் திருமணம் மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளில் நடனம் ஆடுபவர்கள் திடீர் திடீரென இறக்கும் சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் டி.ஜே. சத்தத்தால் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்பது சமீபத்திய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

ஜெர்மனியில் உள்ள மெய்ன்ஸ் பல்கலைக்கழக மருத்துவ மையம், டி.ஜே. ஒலிகளின் விளைவுகள் குறித்து இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை 15,000 பேரிடம் ஒரு ஆய்வை நடத்தியது.

ஒலிபெருக்கிகள் மற்றும் டி.ஜே. ஒலிகள் போன்ற எந்தவொரு இசையும் ஒரு குறிப்பிட்ட வரம்பை மீறினால், இதயத் துடிப்பு மாறுவது கண்டறியப்பட்டது.

மக்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள் என்பதும் கண்டறியப்பட்டது. டி.ஜே.க்கள் போன்ற உரத்த ஒலிகளால், மன அழுத்தம், ரத்த அழுத்தம் மற்றும் இதயத் துடிப்பு வியத்தகு அளவில் அதிகரிக்கிறது.

ரத்த அழுத்தம் அதிகரிக்கிறது. மாரடைப்பு மற்றும் மூளை பக்கவாதத்தால் இறக்கும் அபாயம் உள்ளது.

பைபாஸ் அறுவை சிகிச்சை செய்தவர்களுக்கு மாரடைப்பு ஏற்படலாம். 100 டெசிபலுக்கு மேல் ஒலிகளை நீண்ட நேரம்கேட்டால் காது கேட்கும் பிரச்சனைகள் ஏற்படும். சிறு குழந்தைகளுக்கு மெல்லிய உள் அடுக்குகள் சேதமடைந்து நிரந்தர காது கேளாமை ஏற்படுகிறது.

டி.ஜே. சத்தங்கள் கர்ப்பிணி பெண்களைப் பாதிக்கின்றன என்பதை இந்த ஆய்வுகள் காட்டுகின்றன. ஒலி மாசுபாட்டால் கருச்சிதைவு ஏற்படுவதற்கான வாய்ப்பும் அதிகம்.

நமக்கு இதயத் துடிப்பு ஏற்படுவது போல, கருப்பையில் உள்ள குழந்தைகளும் அவற்றை அனுபவிக்கலாம். கர்ப்பத்தின் 4-வது மாதத்திலிருந்து கர்ப்பிணிப் பெண்கள் சத்தங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறு கிறார்கள்.

டி.ஜே. சத்தம் சுற்றுச்சூழல் மற்றும் விலங்குகள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

நாய்கள், கால்நடைகள், ஆடுகள் மற்றும் கோழிகள் தங்கள் நடத்தையை மாற்றிக் கொள்கின்றன.

சமீபத்தில் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம், தெலுங்கானா மாநிலம் மொய்னாபாத்தில் உள்ள ஒரு ரிசார்ட்டில் டிஜே சத்தம் காரணமா அருகிலுள்ள கோழிப் பண்ணையில் 100-க்கும் மேற்பட்ட கோழிகள் இறந்ததாக புகார் வந்தது.

பலவீனமான கட்டிடங்கள் இடிந்து விழுகின்றன.

அதிர்வு விளைவு காரணமாக கட்டிடங்களும் அதிர்வுறும். இதன் விளைவாக, பலவீனமான கட்டமைப்புகள் இடிந்து விழும் வாய்ப்பு உள்ளது.

டி.ஜே. பயன்படுத்தும் இடங்களில் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

ஹெட்போன் அல்லது நுரையால் ஆனவற்றை பயன்படுத்தலாம். அவை உரத்த ஒலிகளைத் தடுக்கின்றன. அவை 30 டெசிபல் சத்தத்தைக் குறைக்கின்றன.

காது செருகிகளை பயன்படுத்தி முழு காதையும் மறைக்காத ஹெட்போன் சந்தையில் வந்துள்ளன. அவை சத்தத்தை முழுமையாகத் தடுக்காமல் தெளிவான ஒலியை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

டி.ஜே. ஒலிபரப்பும் இடங்களில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

## வாயு தொல்லைக்கு மருந்தாகும் பெருஞ்சீரகம்



ஓட்டல்களில் சாப்பாடோ, பிரியாணியோ சாப்பிட்டு முடித்ததும் பில் தொகை செலுத்தும் இடத்தில் ஒரு கிண்ணத்தில் பெருஞ்சீரகம் வைக்கப்பட்டிருக்கும். அது இனிப்பு கலந்து வெள்ளை நிறத்திலோ அல்லது எதுவும் சேர்க்கப்படாமல் பச்சை நிறத்திலோ காட்சியளிக்கும். அதனை சிறிது எடுத்து மெல்லும் வழக்கத்தை பலரும் பின்பற்றுவார்கள். அவை என்னென்ன நன்மைகளை ஏற்படுத்தும் என்று பார்ப்போம்.

### வாய்க்கு புத்துணர்ச்சி அளிக்கும்

பெருஞ்சீரகம் இயற்கையாகவே இனிமையான, புத்துணர்ச்சியூட்டும் சுவையை கொண்டது. வாய் துர்நாற்றத்தை எதிர்த்து போராடக்கூடியது. ரசாயன அடிப்படையிலான வாய் புத்துணர்ச்சியூட்டும் பொருட்களை போல் அல்லாமல், பெருஞ்சீரகம் சுவாசத்திற்கு புத்துணர்ச்சியூட்டுவதோடு செரிமானத்திற்கும் உதவும்.

### ஹார்மோன் சம நிலைக்கு உதவும்

பெருஞ்சீரகத்தில் பைட்டோ ஈஸ்ட்ரோஜன்கள் உள்ளன. அவை ஈஸ்ட்ரோஜனை பிரதிபலிக்கும் தாவர அடிப்படையிலான சேர்மங்கள். குறிப்பாக மாதவிடாய் கோளாறுகள், வயிறு வீக்கம் மற்றும் மனக்குழப்பத்தை கையாளும் பெண்களுக்கு இது உதவியாக இருக்கும்.

### உடல் எடையை நிர்வகிக்கும்

பெருஞ்சீரகத்தில் நார்ச்சத்து அதிகமாக உள்ளது. இது பசி உணர்வை போக்கி முழுதாகவும், திருப்தியாகவும் உணர வைக்கும். உணவு உட்கொண்ட பிறகு பெருஞ்சீரகத்தை மென்று சாப்பிடுவது தேவையற்ற நொறுக்குத்தீனிகளை சாப்பிடுவதை குறைத்து காலப்போக்கில் உடல் எடையை நிர்வகிக்க உதவும்.

### செரிமானத்தை மேம்படுத்தும்

அனெத்தோல், பென்சோன் மற்றும் எஸ்ட்ராகோல் போன்ற ஆவியாகும் எண்ணெய்கள் பெருஞ்சீரகத்தில் உள்ளன. அவை செரிமான நொதிகளை தூண்டி, ஊட்டச்சத்துக்களை சிறப்பாக உறிஞ்சுவதற்கும், செரிமானத்தை விரைவுபடுத்துவதற்கும் உதவும். குறிப்பாக அதிகமாக சாப்பிட்டாலோ அல்லது எண்ணெய் நிறைந்த உணவுகளை உட்கொண்டாலோ பெருஞ்சீரகம் மெல்வது நல்ல பலனை தரும்.

### வீக்கம் மற்றும் வாயு தொல்லையை குறைக்கும்

வயிறு வீக்கம், வாயு தொல்லையை குறைப்பதற்கு பெருஞ்சீரகம் உதவும். அதிலிருக்கும் ஆன்டி-ஸ்பாஸ்மோடிக் பண்புகள் குடலில் உள்ள தசைகளை தளர்த்தவும், பிடிப்புகள் மற்றும் வாயு தொந்தரவை குறைக்கவும் உதவும். உணவு உட்கொண்ட பிறகு பெருஞ்சீரகத்தை மென்று சாப்பிடுவதன் மூலம் அந்த சங்கடமான நிலைமையை தவிர்க்க முடியும்.

### எவ்வளவு உட்கொள்ள வேண்டும்?

உணவு உட்கொண்ட பிறகு அரை டீஸ்பூன் பெருஞ்சீரகத்தை மென்று சாப்பிடலாம். பெருஞ்சீரகம் ஆரோக்கியத்திற்கு உகந்ததுதான் என்றாலும் ஏதேனும் உடல்நல பிரச்சினைகளை கொண்டிருந்தாலோ, மருந்து, மாத்திரைகள் உட்கொண்டிருந்தாலோ மருத்துவரிடம் ஆலோசனை பெற்றே பெருஞ்சீரகத்தை உணவுக்கு பிறகு மெல்லும் வழக்கத்தை பின்பற்ற வேண்டும்.

### எது நல்லது?


பச்சை நிறத்தில் காட்சியளிக்கும் பெருஞ்சீரகத்தை உட்கொள்வதே சிறந்தது. சர்க்கரை பாகு கலந்து வெண்மை நிறத்தில் காட்சியளிக்கும் பெருஞ்சீரகமும் செரிமானத்திற்கும், வாய் புத்துணர்ச்சிக்கும் உதவும் என்றாலும் அதிலிருக்கும் இனிப்பு கலோரிகளை அதிகரிக்க செய்யும்.

ரத்தத்தில் சர்க்கரை அளவை அதிகரிக்க வழிவகுக்கும். ஊட்டச்சத்துக்களின் செறிவை நீர்த்து போகச்செய்யும். உடல் பருமன், ரத்த அழுத்தம் உள்ளிட்ட பிரச்சினை இருப்பவர்கள் இனிப்பு பெருஞ்சீரகத்தை தவிர்க்க வேண்டும்.

## உப்பு உடலுக்கு ஆபத்தா?

இயற்கையில் பல்வேறு தனிமங்கள் காணப்படுகின்றன. இவற்றில் சோடியம் என்ற தனிமத்தின் அணுக்கள் இணைந்து சோடியம் என்ற தனிமத்தை உருவாக்குகின்றன, இது ஒரு மென்மையான, வெள்ளை நிற உலோக வகை தனிமம் ஆகும். இது காற்றில் தீவிரமாக எரியும் இயல்பு கொண்டது. அத்துடன் தண்ணீருடன் கலக்கும் போது வெடிக்கும் தன்மை கொண்டது.

குளோரின் அணுக்கள் இணைந்து குளோரின் வாயுவை உருவாக்குகின்றன. இது மஞ்சள்-பச்சை நிறத்தில் காணப்படும் ஒரு வாயு, உலோகங்களை அரிக்கும் தன்மை கொண்டது. மேலும், விலங்குகள், தாவரங்கள் இதனை நுகர்ந்தால் நஞ்சாக மாறும், மிகவும் நச்சுத் தன்மையுடையது.




இயற்கையின் விதியில், சோடியம் என்ற வெடிக்கும் தனிமம், நச்சுத்தன்மை கொண்ட குளோரின் என்ற இரண்டு தனிமங்கள் இணையும் போது, அவை இரண்டும் தங்கள் தீவிர தன்மையை இழந்து மனிதனுக்கு மிகவும் அத்தியாவசியமான ஒரு உப்பை உருவாக்குகின்றன.

அதுவே சோடியம் குளோரைடு எனப்படும் சமையல் உப்பு ஆகும். உணவு தயாரிப்பில் பெருமளவு சமையல் உப்பு பயன்படுத்தப்படுகிறது. காய்கறிகள், மீன், இறைச்சி ஆகியவற்றை பதப்படுத்த உப்பு சேர்க்கப்படுகிறது. கிருமி நாசினியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

உப்பு பல நேர்மறையான பண்புகளை கொண்டதாக இருந்த போதிலும், அதிக அளவில் சேர்க்கப்படும் உப்பு, கோழிகள், நாய்கள், பூனைகளுக்கு தீங்கு விளைவிக்கும்.

பெரியவர்களுக்கு சோடியம் உப்பு தினசரி உட்கொள்ளல் அளவு 2,300 மி.கி.க்கும் குறைவாகவும், உயர் ரத்த அழுத்தம் உள்ள நபர்களுக்கு ஒரு நாளைக்கு சுமார் 500 மி.கி. என்ற சிறிய அளவு மட்டுமே தேவைப்படுகிறது. அதிக உப்பு உடலுக்கு ஆபத்து என்கின்றனர்.



## ஆசிரியர்கள் சங்கத்தினர் 2-வது நாளாக உள்ளிருப்பு போராட்டம்




பதவி உயர்வு வழங்கக்கோரி காமராசர் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தினர் 2-வது நாளாக நேற்றும் உள்ளிருப்பு போராட்டம் செய்தனர்.

## அ திமுக கவுன்சிலர்கள், போராட்டம்



தாம்பரம் மாநகராட்சி கூட்டத்தில் வெளியேற்றப்பட்ட அ திமுக கவுன்சிலர்கள், கொசுவலை போர்த்திக்கொண்டு கையில் நாய், பன்றி, மாடு பொம்மைகளுடன் நிர்வாகத்தை கண்டித்து போராட்டம் நடத்தினர்.

## இ பட்டாவை கலெக்டர் அழகு மீனா வழங்கினார்




கல்குளம் வட்டத்தில் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இ பட்டாவை கலெக்டர் அழகு மீனா வழங்கினார்.

## ஆவடி பகுதியில் 5 கி.மீ., தூரத்துக்கு ஒற்றுமை ஓட்டம்




ஆவடி காவல் ஆணையரகம் சார்பில், தேசிய ஒற்றுமை தினத்தை முன்னிட்டு, ஆவடி பகுதியில் 5 கி.மீ., தூரத்துக்கு நேற்று ஒற்றுமை ஓட்டம் நடந்தது.

## ஊழல் தடுப்பு விழிப்புணர்வு பேரணி



காஞ்சிபுரத்தில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் கலைச்செல்வி கொடி அசைத்து துவக்கி வைத்தார். எஸ்.பி.சண்முகம் உடன் உள்ளார்.

# தெள்ளார் ஸ்ரீஆதி நாராயண பெருமாள் திருபவித்ர உற்சவம்

**வந்தவாசி, நவ 01:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் ஸ்ரீ அம்புஜவல்லி தாயார் சமேத ஸ்ரீஆதி நாராயண பெருமாள் கோவிலில் திருபவித்ர உற்சவம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

திருபவித்ர பிரதஷ்டை, கும்ப ஆராதனை, பவித்ரம் சாற்றுதல், மகா யாகசாலை பூஜைகள், திருக்கல்யாண வைபவம் உள்ளிட்டவைகள் நடந்தேறியது.

மேலும் மூல மூர்த்திகள் மற்றும் உற்சவ மூர்த்திகள் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.

இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.



பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

பா. சீனிவாசன் வந்தவாசி



## பாதுகாப்பு விதிமீறல் கண்டித்து பாஜகவினர் போராட்டம்

கோவையில் துணை ஜனாதிபதி வருகையின் போது பாதுகாப்பு விதிமீறல் கண்டித்து பாஜகவினர் போராட்டம் நடத்தினர்.

# சீர்காழியில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் குரு பூஜை விழா

**சீர்காழி , நவ , 01:**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி, தேர் கீழ வீதி கோமளவல்லி அம்மன் கோயில் அருகில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் 63-வது குரு பூஜையும் 118-வது ஜெயந்தி விழாவும் நடைபெற்றது. மூவேந்தர் முன்னேற்ற கழகத்தின் நகர இளைஞரணி செயலாளர் செழியன் தலைமை வகித்தார். பேட்டரி சங்கர் வரவேற்றார். பாலுமணி, குமரவேல், அய்யப்பன், செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக இந்து மக்கள் கட்சியின் மாநில செயலாளர் கொள்ளிடம் ஜெ.சுவாமிநாதன் கலந்து கொண்டு தேவரின் திரு உருவ படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி பேசினார். இந்து மக்கள்



கட்சியின் மாவட்ட பொது செயலாளர் வீரபாலு, பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட சுற்றுசூழல் பிரிவு தலைவர் அருணாச்சலம் , முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கடவாசல் பாலசுப்ரமணியன், கொளஞ்சி மற்றும் முத்து பாண்டி , கார்த்தி, முருகன், ராமு, சிவா, வசந்த், சுரேஷ், முத்துகுமார் உள்ளிட்ட மூமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். நகர தொழிற்சங்க செயலாளர் ரமேஷ் நன்றி கூறினார். பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், பேனா, பென்சில் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

# ஆரணி தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க வட்ட செயற்குழு கூட்டம்

**ஆரணி, நவ.01:**

ஆரணி தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க வட்ட செயற்குழு கூட்டம் நடந்தது.

தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் ஆரணி வட்டக்கிளை செயற்குழு கூட்டம் 31.10.2025 காலை 11.00 மணியளவில் சங்க அலுவலகத்தில் வட்டத் தலைவர் இரா அமிர்திலிக்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.


கடந்த கால நிகழ்வுகள் கோரிக்கை விளக்கவுரை. செயலாளர் அ.விருஷபதாஷ் மாவட்ட /மாநில மாநாடு குறித்து மாவட்ட துணைத்தலைவர் எல். திருவேங்கடம் உரையாற்றினார்.



இறுதியில் நன்றியுரை பொருளாளர் ஆ. சங்கர்.

இதில் கிளை நிர்வாகிகள் உள்ளிட்ட செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு5-வது மாநில மாநாட்டின் அறைகூவல் தீர்மானத்தின்படி நடைபெறும் 11.11.2025 வட்டத் தலைநகர் ஆர்ப்பாட்டத்தில் திரளாக பங்கேற்று வெற்றிபெறச்செய்ய முடிவு செய்யப்பட்டது.

## அண்ணாமலையார் திருக்கோயிலில் வருகிற நவம்பர் 4,5-ஆம் தேதி இரண்டு நாட்களுக்கு பௌர்ணமி



**திருவண்ணாமலை, நவ.01:**

அண்ணாமலையார் திருக்கோயிலில் வருகிற நவம்பர் 4-ஆம் தேதி மற்றும் 5-ஆம் தேதி ஆகிய இரண்டு நாட்களுக்கு பௌர்ணமி ஆகும். ஆகையால் அண்ணாமலையார் ஆலயத்தில் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6:00 மணி வரை நடை சாற்றப்படும். எனவே 3 மணி நேரம் தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் பௌர்ணமி தினத்தன்று தரிசனத்திற்கு எவ்வித முன்னுரிமை வழங்கப்படமாட்டாது என்றும் கோயில் நிர்வாகம் அறிவித்துள்ளது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## முத்துராமலிங்க தேவர் குருபூஜை விழா



உடுமலையில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் முத்துராமலிங்க தேவர் குருபூஜை விழா மற்றும் அன்னதான நிகழ்ச்சி நடந்தது.

## பனை விதைகள் நடும் பணி



கோவை வெள்ளலூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் பனை விதைகள் நடும் பணியினை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன் ஆய்வு செய்தார்.

## ஊழல் விழிப்புணர்வு வாரத்தையொட்டி பேரணி




திருநெல்வேலியில் நேஷனல் இன்சூரன்ஸ் வணிக அலுவலகம் சார்பில் ஊழல் விழிப்புணர்வு வாரத்தையொட்டி பேரணி நடந்தது.

## ரவுசு மணி

நாம் மாறிவிட்டேம் என்பதை விட சில துரோகங்கள் நம்மை மாற்றி விடுகின்றன.




ராஜகோபாலன்.J
சென்னை 18

# பால்வளத் துறை பற்றிய ஆய்வு கூட்டம்




சென்னை நந்தவனத்தில் ஆவின் பால் அலுவலகத்தில் பால்வளத் துறை பற்றிய ஆய்வு கூட்டம் நடந்தது.

## ஐப்பசி மாத பௌர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம் கோவில் நிர்வாகம் அறிவிப்பு





**திருவண்ணாமலை , நவ.01:**

அண்ணாமலையார் மலை கிரிவலம் ஐப்பசி மாத பௌர்ணமி கிரிவலம் வரும் தேதி நவம்பர் 4-ஆம் தேதி இரவு 9:37 மணிக்கு தொடங்கி, 5-ஆம் தேதி இரவு 7:20 மணிக்கு நிறைவடைகிறது. இதனால் 4-ஆம் தேதி இரவு கிரிவலம் செல்ல வேண்டிய நேரம் என்று கோவில் நிர்வாகம் அறிவிப்பு . **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பாமக பரப்புரை கூட்டத்தில் தலைவர் அன்புமணி



சேலத்தில் பாமக பரப்புரை கூட்டத்தில் அதன் தலைவர் அன்புமணி.

# சுற்றுலா: தென்னிந்தியாவின் 6 புத்துணர்ச்சி தரும் இடங்கள்!

வேலைப் பளுவில் இருந்து விடுபட்டு, புத்துணர்ச்சி பெற சரியான நேரம் இது. அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மாதங்களில், தென்னிந்தியா ரம்மியமான வானிலை மற்றும் கண்ணைக் கவரும் காட்சிகளுடன் தன்னை அழகுபடுத்திக் கொள்கிறது. இந்த அழகை ரசிக்க உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

குறிப்பாக, ஹைதராபாத்தில் வசிப்பவர்களுக்கு, இந்த இடங்கள் வார இறுதி நாட்களைச் செலவிட ஏற்ற இடங்களாக இருக்கும். நகரத்தின் சலசலப்பில் இருந்து விலகி, புத்துணர்ச்சியை அளிக்கும். அந்த வகையில், இதுவரை அதிகம் அறியப்படாத, ஆனால் அற்புதமான 6 இடங்களை இங்கே காணலாம்.



1. கர்நாடகாவின் அகும்பே (AGUMBE): மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்திருக்கும் அகும்பே, தென்னிந்தியாவின் சிரபுஞ்சிஎன்று அழைக்கப்படுகிறது. மூடுபனி படர்ந்த மலைகள் மற்றும் பசுமையான மழைக்காடுகளுக்கு பெயர் பெற்றது. ட்ரெக்கிங், மறக்க முடியாத சூரிய அஸ்தமனம், அரிய தாவரங்கள் மற்றும் விலங்குகளைக் காணலாம். இந்தியாவின் மிக உயரமான அருவிகளில் ஒன்றான பர்கானா நீர்வீழ்ச்சி (BARKANA FALLS) மற்றும் பசுமையான காடுகள் இங்கு அமைந்துள்ளன.

2. தமிழ்நாட்டின் பொள்ளாச்சி (POLLACHI):

கோயம்புத்தூருக்கு அருகில் இருக்கும் பொள்ளாச்சி, அமைதியான கிராமப்புற நகரமாகும். இங்குள்ள முடிவில்லா தென்னந்தோப்புகளும் கம்பீரமான ஆனைமலை மலைகளும் மனதை வருடும். நிதானமான, இயற்கையை ரசிக்க ஏற்ற இடம். ஆழியார் அணையில் படகு சவாரி, குரங்கு நீர்வீழ்ச்சியில் புத்துணர்ச்சியூட்டும் குளியல் மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் வனவிலங்குகளைக் காணலாம். உள்ளூர் சந்தைகளில் கிடைக்கும் புதிய பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்களையும் ரசிக்கலாம்.

3. கேரளாவின் அதிரப்பள்ளி (ATHIRAPILLY): கேரளாவின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சி அமைந்துள்ள அதிரப்பள்ளி, தென்னிந்தியாவின் நயாகரா என்று அழைக்கப்படுகிறது. சலக்குடி ஆறு 80 அடி உயரத்தில் இருந்து செங்குத்தாக பாய்வது கண்கொள்ளாக் காட்சி. கம்பீரமான அதிரப்பள்ளி மற்றும் அருகிலுள்ள வாழச்சல் நீர்வீழ்ச்சிகள், இயற்கை நடைப்பயணங்கள், பறவைகள் கண்காணிப்பு மற்றும் தும்பூர்முழி அணை மற்றும் அதன் பட்டாம்பூச்சி பூங்கா பார்த்து ரசிக்க சிறந்த இடங்களாகும். இந்த இடம் அமைதியான மற்றும் அதே சமயம் மனதை ஈர்க்கும் இயற்கை காட்சிகளைக் கொண்ட, அதிகம் அறியப்படாத கேரளாவின் பொக்கிஷம்.

4. ஆந்திரப் பிரதேசத்தின் லாம்பசிங்கி (LAMBASINGI):

ஆந்திராவின் காஷ்மீர் என்று பிரபலமாக அழைக்கப்படும் லாம்பசிங்கி, தென்னிந்தியாவில் அரிதாக உறைபனிக்கு (FROST) உள்ளாகும் சில இடங்களில் ஒன்றாகும். மூடுபனி காலைப் பொழுதுகள், காபி தோட்டங்கள் மற்றும் அமைதியான காட்சி முனைகள், தஜங்கி நீர்த்தேக்கம் (THAJANGI RESERVOIR), பசுமையான பாதைகளில் மலையேற்றம் போன்ற அனுபவங்களை பெற ஏற்ற இடமாகும். குறிப்பாக, ஹைதராபாத்தில் இருந்து மலைப்பிரதேசத்தின் அனுபவத்தை தேடும் சுற்றுலாப் பயணிகளுக்கு இது ஒரு சிறந்த இடம்.

5. கர்நாடகாவின் கோகர்ணா (GOKARNA):

கோவாவிற்கு அமைதியான மாற்றாக இருக்கும் கோகர்ணா, ஆன்மீகத்தையும் அழகான கடற்கரை அழகையும் இணைக்கிறது. மகாபலேஷ்வர் கோவில் மற்றும் ஓம், குட்லே, ஹாஃப் மூன் போன்ற அமைதியான கடற்கரைகள் இங்கு உள்ளன. இங்குள்ள கடற்கரை ஓரத்தில் நடைபயணம், கடற்கரை கஃபேக்கள், நீர் விளையாட்டுகளில் நேரத்தை செலவிடலாம் அல்லது அரபிக் கடலோரத்தில் ஓய்வெடுக்கலாம். ஆண்டின் முடிவில் ஓய்வெடுக்க ஏற்ற ஒரு இடம்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### ஸ்ரீரங்கம் கோவிலில் இளநிலை உதவியாளர் வேலைவாய்ப்பு..!

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோயில் மற்றும் அதன் உப கோயில்களில் காலியாக உள்ள கீழ்கண்ட பணியிடங்களை நிரப்ப இந்து மதத்தைச் சார்ந்த தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

நிறுவனம் : இந்து சமய அறநிலையத் துறை

வகை : தமிழ்நாடு அரசு வேலை

காலியிடங்கள் : 31

பணியிடம் : தமிழ்நாடு

1. பதவி: இளநிலை உதவியாளர்

சம்பளம்: மாதம் ரூ.18,500 முதல் ரூ.58,600 வரை

காலியிடங்கள்: 10 கல்வி தகுதி: 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. பதவி: கூர்க்கா

சம்பளம்: மாதம் ரூ.15,900 முதல் ரூ.50,400 வரை

காலியிடங்கள்: 02 கல்வி தகுதி: தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும்.

3. பதவி: திருவலகு

சம்பளம்: மாதம் ரூ.15,900 முதல் ரூ.50,400 வரை

காலியிடங்கள்: 04 கல்வி தகுதி: தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும்.

4. பதவி: கால்நடை பராமரிப்பாளர்

சம்பளம்: மாதம் ரூ.15,900 முதல் ரூ.50,400 வரை

காலியிடங்கள்: 02 கல்வி தகுதி: தமிழில் படிக்க மற்றும் எழுத தெரிந்திருக்க வேண்டும்.

விண்ணப்பிக்க கடைசி தேதி: 25.11.2025

விண்ணப்பிக்கும் முறை:

விண்ணப்பப் படிவம் மற்றும் நிபந்தனைகளை https://srirangamranganathar.hrce.tn.gov.in/ இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றுகளுடன் அஞ்சல் உறையில் வரிசை எண் மற்றும் பணியிடத்திற்கான விண்ணப்பம் என தெளிவாக குறிப்பிட்டு இணை ஆணையர் /செயல் அலுவலர், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் 620006 என்ற முகவரிக்கு நேரிலோ /அஞ்சல் மூலமாகவோ அனுப்ப வேண்டும்.

மேலும் ரூ.25/- மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டிய சுய விலாசம் இட்ட ஒப்புகை ஆட்டையிடனும், அஞ்சல் உறையிடனும் இணைத்து அனுப்ப வேண்டும்.

## 2026-க்குள் அதிமுக ஒன்றிணையும் - சசிகலா நம்பிக்கை

**மதுரை, நவ.1:**

தமிழக மக்களின் நலன் காக்க மீண்டும் அம்மாவின் ஆட்சியை அமைப்போம் என சசிகலா தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் நடைபெற்ற தேவர் ஜெயந்தி விழாவில் வி.கே சசிகலா இன்று கலந்துக் கொண்டார். இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர் பேசியதாவது;

“அதிமுக இப்போதும் பலவீனமாகத்தான் இருக்கிறது. அந்தப் பலவீனத்தைப் போக்குவதுதான் எனது வேலை. இந்தக் கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் சிக்கலை அனுபவப்பட்டவர்களால் மட்டுமே பிரிக்க முடியும். அ.தி.மு.க. முடிந்துவிட்டதாக நினைக்க முடியாது. காலம் கனிந்துள்ளது. 2026-க்குள் அ.தி.மு.க. ஒன்றிணையும்.

தமிழக மக்களின் நலன் காக்க மீண்டும் அம்மாவின் ஆட்சியை அமைப்போம். தி.மு.க.வை மீண்டும் ஆட்சிக்கு வர விடமாட்டேன். எல்லாமே சர்ப்ரைஸாக நடைபெறும். மீண்டும் அதிமுகவை நான் ஆட்சிக்கு கொண்டு வருவேன். தற்போதைய அரசியல் சிக்கல்களுக்குத் தீர்வு காண தன்னால் மட்டுமே முடியும். நான் என்ன செய்ய இருக்கிறேன் என்பதை பொறுத்தது இருந்து பாருங்கள்.” இவ்வாறு அவர் பேசினார்.

## தாயுமானவர் திட்டத்தில் நவ. 3 முதல் 6 வரை பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகம்

**சென்னை, நவ.1:**

தாயுமானவர் திட்டத்தில் நவம்பர் 3 முதல் 6 வரை முதியோர் மாற்றுத் திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகிக்கப்பட உள்ளது. இது குறித்து, கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

நவம்பர் 2025 திங்களுக்கு 03.11.2025 முதல் 06.11.2025 வரை சென்னையிலுள்ள அண்ணாநகர், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர், தேனாம்பேட்டை, அடையார், திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க.நகர், அம்பத்தூர், கோடம்பாக்கம் மற்றும் வளசரவாக்கம் ஆகிய 15 மண்டலங்களில் கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்படும் 990 நியாயவிலைக்கடைகளின் விற்பனையாளர்கள்.

அத்தியாவசியப் பொருட்களை வீடு தேடி விநியோகம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. இந்த தகவலை அனைத்து நியாய விலைக்கடைகளிலும் பொது மக்கள் அறியும் வகையில் தகவல் பலகையில் எழுதி வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயன்பெறும் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இத்திட்டத்தை தவறாமல் பயன்படுத்திகொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## அருணாசலேஸ்வரர் கோவிலில் வருகிற 4-ந் தேதி அன்னாபிஷேகம்

**திருவண்ணாமலை, நவ.1:**

*வருகிற 4-ந் தேதி மற்றும் 5-ந் தேதி ஆகிய நாட்களில் பவுர்ணமி வர உள்ளது.*

*திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் இணை ஆணையர் பரணிதரன் வெளியிட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-*

*திருவண்ணாமலையில் உலக பிரசித்தி பெற்ற அருணாசலேஸ்வரர் கோவில் உள்ளது. இக்கோவிலில் நடைபெறும் முக்கிய விழாக்களில் அன்னாபிஷேகமும் ஒன்றாகும். அருணாசலேஸ்வரர் கோவிலில் ஐப்பசி மாத பவுர்ணமியையொட்டி உலக உயிர்களுக்கு உணவளிக்கும் இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அன்னாபிஷேகம் விழா நடைபெற்று வருகிறது.*

*இந்த ஆண்டிற்கான அன்னாபிஷேகம் விழா வருகிற 4-ந் தேதி (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது. அன்றைய தினம் பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை கோவிலில் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதி கிடையாது. அப்போது நடை சாற்றப்பட்டு மீண்டும் மாலை 6 மணிக்கு நடை திறக்கப்பட்டு பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள்.*

*மேலும் வருகிற 4-ந் தேதி மற்றும் 5-ந் தேதி ஆகிய நாட்களில் பவுர்ணமி வர உள்ளது. அன்றைய தினங்களில் அதிகளவில் பக்தர்கள் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வருவார்கள் என்பதால் வருகிற 4 மற்றும் 5-ந் தேதிகளில் தரிசனத்திற்கு எவ்வித முன்னுரிமையும் வழங்கப்படமாட்டாது.*

*இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.*







## ரூ.3,000 கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்கள் ஏலம்

**சென்னை, நவ.1:**

*மும்பையில் உள்ள ரிசர்வ் வங்கி கோட்டை அலுவலகத்தில் வரும் 4-ந்தேதி ஏலம் நடத்தப்படும்.*

*தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-*

*தமிழ்நாடு அரசு மொத்தம் ரூபாய் 3000 கோடி மதிப்பில் 10 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் ரூபாய் 1000 கோடி மற்றும் 30 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் ரூபாய் 2000 கோடி ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் நவம்பர் 04, 2025 அன்று நடத்தப்படும்.*

*போட்டி ஏலக்கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) நவம்பர் 04, 2025 அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

*இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## 2030-ம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு: மத்திய மந்திரி பிரகலாத் ஜோஷி

**சென்னை, நவ.1:**

*இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி பிப்ரவரி 2026-க்குள் வெளியிடப்படும் என்றும் மத்திய மந்திரி கூறினார்.*

*2030-ம் ஆண்டுக்குள் நாட்டில் 500 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உற்பத்தி செய்யும் இலக்கை நோக்கி இந்தியா முன்னேறி வருவதாகவும், இதில் 100 ஜிகாவாட் மின்சாரம் காற்றாலை திட்டங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் என்றும் மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை மந்திரி பிரகலாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.*

*சென்னையில் இன்று (30 அக்டோபர் 2025) நடைபெற்ற 7-வது விண்டர்ஜி இந்தியா-2025 மாநாட்டில் உரையாற்றிய அவர், தூய்மையான எரிசக்தி தொழில்நுட்பங்களில் தற்சார்பு இந்தியா என்ற பிரதமரின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப, அசல் உபகரண உற்பத்தியாளர்கள் மற்றும் உதிரிபாக உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட தொழில்துறையின் பங்குதாரர்கள் காற்றாலை திட்டங்களில் உள்ளூர் உள்ளடக்கத்தை தற்போதைய 64 சதவீதத்திலிருந்து 85 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். வளர்ந்து வரும் உலகளாவிய மாற்றங்கள் மற்றும் அதிகரித்து வரும் புவிசார் அரசியல் சவால்களுக்கிடையே, இந்தியாவின் தூய்மையான எரிசக்தி விநியோகச் சங்கிலியை வலுப்படுத்த உள்நாட்டு மதிப்புக் கூட்டலை அதிகரிப்பது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.*

*ஒவ்வொரு துறையிலும் விரைவான முன்னேற்றத்திற்கு இந்தியா ஒரு பிரகாசமான எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது என்று கூறிய பிரகலாத் ஜோஷி, இந்தியா உலகின் நான்காவது பெரிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனைக் கொண்டுள்ளது என்றும், இந்தியாவின் காற்றாலை திறன் தரவரிசையும் உலகில் நான்காவது இடத்தில் உள்ளது என்றும் கூறினார். பிரதமரின் தொலைநோக்குத் தலைமையின் கீழ், பொருளாதாரம், தொழில்நுட்பம் என அனைத்துத் துறைகளிலும் உலகத் தலைமையிடமாக இருக்க வேண்டும் என்பதே நாட்டின் லட்சியம் என்று அவர் கூறினார்.*

*முதல் காற்றாலைப் பண்ணைகள் முதல் இன்றைய அதிநவீன விசையாழிகள் வரை, தமிழ்நாடு இந்தியாவின் தூய எரிசக்தி பயணத்தை வழிநடத்தி வருகிறது என்று பாராட்டிய மந்திரி, அது மேலும் பிற மாநிலங்களுக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கிறது என்றார். தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகியவை இந்தியாவின் மொத்த காற்றாலைத் திறனில் கிட்டத்தட்ட பாதியளவு பங்களிக்கின்றன என்றும், இது 54 ஜிகாவாட் என்றும் அவர் குறுப்பிட்டார்.*

*கடற்கரைக் காற்றாலைத் திட்டங்களுக்கான புதிய பகுதிகளைத் திறக்க ஒரு சாத்தியமான நிதித் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது என்றும், இந்தத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் ராமநாதபுரம் கடற்கரையில் 500 மெகாவாட் திட்டம் நிறுவப்படும் என்றும் மத்திய மந்திரி கூறினார். இந்தத் திட்டம் குறித்த பூர்வாங்க ஆய்வு நிறைவடைந்துள்ளது என்றும், அந்தப் பகுதியில் காற்றாலை மின்சாரம் மிக அதிகமாக உற்பத்தி செய்யும் திறனை அந்த ஆய்வு காட்டுவதாகவும் தெரிவித்த மந்திரி, இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி பிப்ரவரி 2026-க்குள் வெளியிடப்படும் என்றும் கூறினார்.*

*பணிகள் முடிக்கப்பட்ட திட்டங்களைப் பட்டியலிட்ட மத்திய மந்திரி, ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 3 ஜிகாவாட் காற்றாலை திறன் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், மார்ச் 2026-க்குள் மேலும் 3 ஜிகாவாட் காற்றாலை திறன் சேர்க்கப்படும் என்றும் கூறினார், இது கடந்த ஆண்டின் 4 ஜிகாவாட் காற்றாலை மின்சாரத்தை விட மிக அதிகமான வருடாந்திர கூடுதலாகும் என்றும் அவர் கூறினார்.*

*கடந்த பத்து ஆண்டுகளில் தொடர்ச்சியான முயற்சிகள் மூலம், நாட்டின் மொத்த மின்சார நிறுவுதிறனில் 50 சதவீதம் புதைபடிவ எரிபொருள் இல்லாத மூல வளங்களிலிருந்து வருவதை இந்தியா உறுதி செய்துள்ளது என்றார் அவர்.*

# தமிழகத்தில் ஆர்டிஇ சேர்க்கையில் குழந்தைகளுக்கு 70,449 இடஒதுக்கீடு: பள்ளிக் கல்வித் துறை

**சென்னை, நவ.1:**

நடப்பாண்டு தனியார் பள்ளிகளில் ஆர்டிஇ ஒதுக்கீட்டில் 70,449 குழந்தைகளுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக பள்ளிக்கல்வித் துறை செயலர் பி.சந்திர மோகன் தெரிவித்துள்ளார்.

இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி (ஆர்டிஇ) தனியார் பள்ளிகளில் 25 சதவீத இடங்களில் ஏழைக் குழந்தைகள் சேர்க்கப்படுவார்கள். மாநிலம் முழுவதுள்ள 7,717 தனியார் பள்ளிகளில் சுமார் 1 லட்சம் இடங்கள் உள்ளன. இந்த திட்டத்தில் எல்.கே.ஜி அல்லது ஒன்றாம் வகுப்பில் சேருபவர்கள் 8ம் வகுப்பு வரை கட்டணம் செலுத்தாமல் இலவசமாக படிக்கலாம். தமிழகத்தில் 2013-ல் அமலான இந்த ஆர்டிஇ திட்டத்தின் கீழ் இதுவரை 5 லட்சம் குழந்தைகள் தனியார் பள்ளிகளில் படித்து வருகின்றனர்.

இந்த திட்டத்துக்கான நிதியை மத்திய அரசு வழங்காததால், 2025- 26-ம் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கையை பள்ளிக்கல்வித் துறை நிறுத்தி




வைத்தது. இது தொடர்பான வழக்கில் நீதிமன்ற உத்தரவின்படி ஆர்டிஇ திட்டத்தில் தனது பங்கு நிதியை மத்திய அரசு விடுவித்தது. அதன்பின் நடப்பாண்டில் ஆர்டிஇ மாணவர் சேர்க்கை பணிகள் தாமதமாக தொடங்கப்பட்டன.

இதையடுத்து பள்ளிகளில் ஏற்கெனவே சேர்க்கப்பட்ட மாணவர்களில் தகுதியானவர்களை ஆர்டிஇ ஒதுக்கீட்டில் பதிவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, மாநிலம் முழுவதும் உள்ள 7,717 பள்ளிகளில் எல்கேஜி வகுப்பில் சேர 82,016 பேர் விண்ணப்பித்தனர். அவற்றில் தகுதியானவர்களை தேர்வு செய்யும் பணிகள் கடந்த 2 நாட்கள் நடத்தப்பட்டன. முதல் நாளில் ஒதுக்கப்பட்ட இடங்களை விட குறைந்த விண்ணப்பங்கள் வந்த பள்ளிகளில் தகுதியான மாணவர்கள் நேரடியாக தேர்வு செய்யப்பட்டனர்.


தொடர்ந்து 2-வது நாளான நேற்று நிர்ணயிக்கப்பட்ட இடங்களை விட அதிக விண்ணப்பங்கள் வந்த பள்ளிகளில் தலைமை ஆசிரியர், பெற்றோர்கள் முன் வெளிப்படையான குலுக்கல் முறையில் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அதை மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுக்களும் ஆய்வு செய்தனர். ஒட்டுமொத்தமாக ஆர்டிஇ ஒதுக்கீட்டில் 70,449 குழந்தைகளுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து பள்ளிக்கல்வித் துறை செயலர் பி.சந்திர மோகன் வெளியிட்ட அறிவிப்பு விவரம்: ”தனியார் பள்ளிகளில் நடப்பு கல்வியாண்டுக்கான ஆர்டிஇ மாணவர்சேர்க்கை நடைமுறைகள் வெளிப்படையான முறையில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் உள்ள 7,717 பள்ளிகளில் ஆர்டிஇ ஒதுக்கீட்டில் சேர 82,016 குழந்தைகள் விருப்பம் தெரிவித்தன. அதில் விதிமுறைகளின்படி எல்கேஜி வகுப்பில் சேர 70,350 குழந்தைகளுக்கும், ஒன்றாம் வகுப்பில் சேர 99 பேருக்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தற்போது ஆர்டிஇ சேர்க்கை பெற்றவர்களிடம் பள்ளிகள் எந்த கட்டணமும் வசூலிக்கக்கூடாது. ஏற்கெனவே கட்டணம் வசூலிக்கப்பட்டிருந்தால், அதை குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் பெற்றோர்களிடம் திருப்பிதர வேண்டும். இதற்கு முன்பு ஆர்டிஇ ஒதுக்கீட்டின் கீழ் 2020- 21ம் கல்வியாண்டில் 69,225 குழந்தைகளுக்கும், 2021-22ல் 55,671, 2022- 23ல் 66,042, 2023- 24ல் 69,936, 2024- 25ல் 71,398 பேருக்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன” என்று அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

# கரண்ட்டே இல்லாம சாலையில் எப்படி லைட் எரியுது?



நாம் எல்லோருமே ராத்திரி நேரத்தில் கார் அல்லது பைக்கில் நெடுஞ்சாலைகளில் பயணம் செய்திருப்போம். அப்படிப் போகும்போது, நம் வண்டியின் ஹெட்லைட் வெளிச்சம் பட்டவுடன், சாலையின் நடுவிலும், ஓரங்களிலும் இருக்கும் மஞ்சள், வெள்ளை அல்லது சிவப்பு நிறச் சதுரங்கள் 'பளிச்' என்று ஒளிர்வதைக் கவனித்திருக்கிறீர்களா?

பலரும், அதற்கு அடியில் ஏதோ மின்சார வயர் கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கும் அல்லது பேட்டரி இருக்கும் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், உண்மையில் பெரும்பாலான இந்த ஒளிரும் புள்ளிகள் மின்சாரமே இல்லாமல் இயங்குகின்றன.

சாலையில் ஒளிரும் இவற்றிற்கு 'கேட்ஸ் ஐஸ்' (Cat's Eyes) அல்லது 'ரோடுஸ்டட்ஸ்' (Road Studs) என்றுபெயர். இவற்றின் சிறப்பம்சமே, இவை ஒளியை உருவாக்குவது இல்லை, மாறாக, ஒளியைத் திருப்பி அனுப்புவதுதான். இவை 'மீள்பிரதிபலிப்பு' (Retroreflection) என்ற ஒரு எளிய இயற்பியல் தத்துவத்தின் அடிப்படையில் வேலை செய்கின்றன. இந்த ஸ்டட்களின் உள்ளே, மிக நுண்ணிய கண்ணாடிக் கோளங்கள் அல்லது ஒரு சிறப்பு வடிவமைப்பிலான முப்பட்டை லென்ஸ்கள் பதிக்கப்பட்டிருக்கும்.

ஒரு சாதாரண கண்ணாடி அல்லது சுவரின் மீது லைட் அடித்தால், அந்த ஒளி நாலா பக்கமும் சிதறிவிடும். ஆனால், இந்த 'ரோடு ஸ்டட்' மீது உங்கள் வாகனத்தின் ஹெட்லைட் ஒளி படும்போது, அந்த லென்ஸ்கள் ஒளியைச் சிதறடிக்காமல், அதை அப்படியே பிடித்து, மீண்டும் வந்த வழியே, அதாவது ஓட்டுநரின் கண்களை நோக்கி நேராகத் திருப்பி அனுப்புகின்றன. இதனால்தான், வேறு எங்கும் தெரியாத அந்த ஒளி, வண்டியை ஓட்டுபவருக்கு மட்டும் மிகத் தெளிவாக, பிரகாசமாகத் தெரிகிறது.

சூரிய சக்தியில் இயங்கும் நவீன ஸ்டட்கள்!

இது ஒரு வகை என்றால், இப்போது வரும் நவீன நெடுஞ்சாலைகளில் இன்னொரு வகையையும் பயன்படுத்துகிறார்கள். இவை சூரிய சக்தியில் இயங்குபவை. இந்த ஸ்டட்களின் மேல்புறத்தில் ஒரு சிறிய சோலார் பேனல் பொருத்தப்பட்டிருக்கும். அது பகல் நேரம் முழுவதும் சூரிய ஒளியில் இருந்து மின்சாரத்தை எடுத்து, தனக்குள் இருக்கும் ஒரு சிறிய ரீசார்ஜ் பேட்டரியில் சேமித்து வைக்கும்.

சூரியன் மறைந்து இருட்டியவுடன், அந்த பேட்டரியில் சேமிக்கப்பட்ட மின்சாரத்தின் மூலம், உள்ளே இருக்கும் LED விளக்கு தானாகவே ஒளிரத் தொடங்கும். மூடுபனி அல்லது கனமழை காலங்களில், ஹெட்லைட் வெளிச்சம் போதாதபோது கூட, இந்த வகை ஸ்டட்கள் தொடர்ந்து ஒளிர்வதால், சாலைப் பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கிறது.

எனவே, அடுத்த முறை நீங்கள் இரவுப் பயணத்தில் இந்த ஒளிரும் புள்ளிகளைப் பார்க்கும்போது, அவற்றைச் சாதாரண பிளாஸ்டிக் துண்டுகளாக நினைக்காதீர்கள். அவை மின்சாரமே இல்லாமல், இயற்பியலையும் பொறியியலையும் ஒன்றிணைத்து, நமது பயணத்தைப் பாதுகாப்பாக்கும் பாதுகாவலர்கள்.

# மாவட்ட தலைநகரங்களில் ஆதார் சேவை மையம்: உயர் நீதிமன்றம் விருப்பம்

**மதுரை, நவ.1**

ஆதார் அட்டையில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள மாவட்டத் தலைநகரங்களில் ஆதார் சேவை மையம் இருக்க வேண்டும் என்று விரும்புவதாக உயர் நீதிமன்ற நீதிபதி தெரிவித்தார்.



ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியைச் சேர்ந்த பி.புஷ்பம், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், “எனக்கு 74 வயதாகிறது. இந்திய ராணுவத்தில் 21 ஆண்டுகள் பணிபுரிந்து எனது கணவர் ஓய்வுபெற்ற நிலையில் 23.5.2025-ல் இறந்தார். இதையடுத்து, குடும்ப ஓய்வூதியம் கேட்டு விண்ணப்பித்தேன்.

எனது ஆதார் அட்டையில் பெயர் மற்றும் பிறந்த தேதியில் தவறு இருப்பதாகக் கூறி எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. பல இடங்களுக்குச் சென்றும் என் கோரிக்கை நிறைவேறவில்லை. ஆதார் அட்டையில் உள்ள தவறுகளை சரி செய்ய உத்தரவிட வேண்டும்” என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரித்து நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பிறப்பித்த உத்தரவு: மனுதாரரின் ஆதார் அட்டையில் உள்ள தவறால் ஓய்வூதியம் கிடைக்கவில்லை. ஆதார் அட்டையில் தவறுகளைத் திருத்தம் செய்ய சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆதார் சட்டத்தின் 31-வது பிரிவு ஆதார் அட்டையில் இடம்பெறும் விவரங்கள் சரியாக இருப்பதை உறுதி செய்கிறது.

ஆதார் அட்டையில் பெயர், பிறந்த தேதி மற்றும் பயோமெட்ரிக் தகவல்களில் ஏற்படும் மாற்றங்கள் மதுரை ஆதார் சேவை மையத்தில் மட்டுமே சரி செய்ய முடியும். இதற்காக மதுரை ஆதார் சேவை மையத்தில் அதிகாலையில் இருந்தே நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கின்றனர்.

இந்தப் பிரச்சினை தமிழகத்தில் மட்டும் அல்ல. பிற மாநிலங்களிலும் உள்ளது. தமிழகத்தில் 4056 ஆதார் சேர்க்கை மையங்கள் உள்ளன. 2026 மார்ச் மாதத்துக்குள் 28 இடங்களில் ஆதார் சேவை மையம் திறக்கப்படும் என ஆதார் அமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு ஆதார் சேவை மையம் இருக்க வேண்டும் என நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர் மதுரை ஆதார் சேவை மையத்தை அணுக வேண்டும். அவர் கோரும் மாற்றத்தை ஆதார் அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். அதன் பிறகு குடும்ப ஓய்வூதிய ஆவணங்களில் மாற்றம் செய்ய வேண்டும் என்று நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.

# பொன்னேரி அருகே அரசின் உரிய அங்கீகாரம் இன்றி செயல்பட்ட தனியார் பள்ளிக்கு ‘சீல்’

**பொன்னேரி, நவ.1:**

பொன்னேரி அருகே ஆண்டார்மடம் பகுதியில் அரசின் உரிய அங்கீகாரம் இன்றி செயல்பட்டு வந்த தனியார் பள்ளிக்கு நேற்று (அக்.31) மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) அதிரடியாக 'சீல்' வைத்தார்.




திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அருகே ஆண்டார்மடம் கிராமம் உள்ளது. இங்கு 8 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த தனியார் மெட்ரிக்குலேஷன் பள்ளியை அதன் உரிமையாளர், கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு வேறு ஒருவருக்கு விற்பனை செய்துள்ளார்.

இதையடுத்து, பள்ளியை வாங்கியவர், கடந்த 2 ஆண்டுகளாக அரசின் உரிய அங்கீகாரம் இன்றி பள்ளியை நடத்தி வந்துள்ளார்.

ஆகவே, பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள், அரசின் உரிய அங்கீகாரத்தை பெற சம்பந்தப்பட்ட பள்ளி நிர்வாகத்துக்கு தொடர்ந்து அறிவுறுத்தல்களை வழங்கி வந்துள்ளனர். அவற்றை பள்ளி நிர்வாகம் பொருட்படுத்தாமல் இருந்து வந்துள்ளது.

இந்நிலையில், அரசின் உரிய அங்கீகாரம் இன்றி கடந்த 2 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த ஆண்டார்மடம் தனியார் பள்ளியை நேற்று காலை பள்ளிக் கல்வித் துறையின் திருவள்ளூர் மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) தேன்மொழி, பொன்னேரி வட்டாட்சியர் சோமசுந்தரம் உள்ளிட்ட வருவாய்த் துறை அதிகாரிகளின் முன்னிலையில், திருப்பாலைவனம் காவல் ஆய்வாளர் காளிராஜ் உள்ளிட்டோர் அடங்கிய காவல்துறை பாதுகாப்புடன் அதிரடியாக மூடி 'சீல்' வைத்தார்.

தொடர்ந்து, தற்போது 7-ம் வகுப்பு வரை செயல்பட்டு வந்த பள்ளியில் கல்வி பயின்று வந்த 70 மாணவ-மாணவியரை, ஆண்டார்மடம், பழவேற்காடு பகுதிகளில் உள்ள 3 தனியார் பள்ளிகள் சேர்க்க பெற்றோருக்கு அறிவுறுத்தி, அறிவிப்பு நோட்டீஸை மாவட்ட கல்வி அலுவலர் பள்ளி கதவுகளில் ஒட்டியுள்ளார்.

## க்ரைம் கார்னர்

# சென்னை - எண்ணூர் பகுதியில் கடலில் குளித்த 4 பெண்கள் அலையில் சிக்கி உயிரிழப்பு

**சென்னை, நவ.1:**

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி பகுதியை சேர்ந்தவர்களான பவானி (19), ஷாலினி (18), காயத்ரி (18), கும்மிடிப்பூண்டி, பெத்திக்குப்பம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் வாசியான தேவகி (28) ஆகிய 4 பேரும் கும்மிடிப்பூண்டி பஜார் பகுதியில் உள்ள தனியார் துணிக்கடையில் பணிபுரிந்து வந்தனர்.

இந்நிலையில், பவானி உள்ளிட்ட 4 பேரும் இன்று (அக்.31) பணிக்கு செல்லாமல் ரயில் மூலம் சென்னை எண்ணூர் பகுதிக்கு வந்துள்ளனர். மதியம் எண்ணூர், பெரியகுப்பம் கடற்கரை பகுதிக்கு வந்த பிறகு, அவர்கள் கடலில் குளித்துக் கொண்டிருந்தபோது, ஒருவர் கடல் அலையில் சிக்கி, கடலின் உள் பகுதிக்கு இழுத்து செல்லப்பட்டார்.

இதனால், அதிர்ச்சியடைந்த மற்ற மூவரும், அவரைக் காப்பாற்ற முயன்றனர். அப்போது, அவர்களும் கடல் அலையில் சிக்கி கடலின் உள் பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டு, நீரில் மூழ்கி உயிரிழந்தனர். அவர்களின் உடல்கள் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு கரை ஒதுங்கின.

இதுகுறித்து, தகவலறிந்த எண்ணூர் போலீஸார் சம்பவ இடம் விரைந்து, 4 பெண்களின் உடல்களை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக சென்னை – ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து, விபத்து குறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து, தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கிரிப்டோ கரன்சி தருவதாக ரூ.26 லட்சம் மோசடி

**சென்னை, நவ.1:**

அரும்பாக்கத்தைச் சேர்ந்த பட்டதாரி சேத்தன் (25). இவர் கிரிப்டோ கரன்சி வாங்க திட்டமிட்டிருந்தார். அப்போது, சேலத்தை சேர்ந்த சக்தி என்பவரது அறிமுகம் டெலிகிராம் மூலம் கிடைத்தது. அவர் கிரிப்டோ கரன்சியில் முதலீடு செய்தால் அதிக லாபம் கிடைக்கும் எனவும், தன்னிடம் கிரிப்டோ கரன்சி விற்பனைக்காக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். இந்த தகவலை சேத்தன் தனது நண்பர்கள் வேலப்பன்சாவடியைச் சேர்ந்த எல்ஐசி முகவர் லாரன்ஸ், மும்பையைச் சேர்ந்த செந்தில் குமார் மற்றும் பெங்களூருவைச் சேர்ந்த கிரண்குமார் ஆகியோரிடம் தெரிவிக்க, அவர்களும் கிரிப்டோ கரன்சி வாங்க முடிவு செய்துள்ளனர். இதையடுத்து, சக்தி கொடுத்த வங்கி கணக்குக்கு 3 பேரும் சேர்ந்து ரூ.26.55 லட்சத்தை அனுப்பி வைத்துள்ளனர். ஆனால், அவர்களுக்கு அதற்கான கிரிப்டோ கரன்சி கொடுக்கப்படவில்லை. ஏமாற்றப்பட்டதை உணர்ந்த 3 பேரும் காவல் துறையில் புகார் தெரிவித்தனர். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# வீட்டுவசதி வாரிய வீடு ஒதுக்கீடு பெற்றுத்தருவதாக ரூ.20 லட்சம் மோசடி செய்த போலி சாமியார் கைது

**ஆவடி, நவ.1:**

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி, நந்தவனமேட்டூர் பகுதியை சேர்ந்தவர் ஜெகநாதன் (54). இவருக்கு, கடந்த மே மாதம் ஆவடி அருகே உள்ள திருமுல்லைவாயல், வைஷ்ணவி நகரில் வசித்து வந்த சீனிவாசன் என்ற வாசு (32) என்பவரின் அறிமுகம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து சீனிவாசன், தனக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் பணி புரிந்துவரும் ஐஏஎஸ் அதிகாரி ஒருவர் நெருக்கமானவர் எனவும், அவர் மூலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வீடு ஒதுக்கீடுகளை பெற்றுத் தருவதாகவும், அதற்காக ஒரு வீட்டுக்கு ரூ.80 ஆயிரம் செலுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார். இதனை நம்பிய ஜெகநாதன், உறவினர்கள், நண்பர்கள் என 17 பேரிடம் ரூ.20 லட்சத்தை வாங்கி சீனிவாசனின் வங்கிக் கணக்கு அனுப்பியுள்ளார். பணம் அளித்து பல மாதங்களாகியும், வீடு ஒதுக்கீடுகளை பெற்றுத் தராமல் சீனிவாசன் தன்னை ஏமாற்றியதை உணர்ந்த ஜெகநாதன், இதுகுறித்து ஆவடி குற்றப்பிரிவு போலீஸாரிடம் புகார் அளித்தார். அதன் பேரில் போலீஸார் நடத்திய விசாரணையில், நவசக்தி பீடம் என்ற பெயரில் அறக்கட்டளை நடத்தி வரும் சீனிவாசன், போலி சாமியார் என்பதும், அவர் ஜெகநாதனை ஏமாற்றி பணம் பெற்றதும் தெரியவந்தது. இதையடுத்து,சீனிவாசன் கைது செய்யப்பட்டார். மேலும், முக்கிய தேசிய கட்சித் தலைவரின் பெயரை கூறி, அவர் மூலமாக தேர்தலில் எம்.பி. சீட் வாங்கி தருவதாக கூறி, சீனிவாசன் ஒருவரிடம் ரூ.44 லட்சம் பெற்று ஏமாற்றியதாகவும் கூறப்படுகிறது.

# பெண் குழந்தைக்கு பாலியல் வன்கொடுமை: இளைஞருக்கு 23 ஆண்டுகள் சிறை தண்டனை

**சென்னை, நவ.1:**

திருவள்ளூர் அருகே உள்ள நயப்பாக்கம் பகுதியை சேர்ந்தவர் 4 வயது பெண் குழந்தை. இவர் கடந்த 2018-ம் ஆண்டு ஜனவரி 18-ம் தேதி வீட்டருகே சாலையில் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது, அங்கு வந்த நயப்பாக்கம் பகுதியை சேர்ந்த தானேஷ் என்கிற யுவராஜ் (29), குழந்தையை அருகிலிருந்த உறவினர் வீட்டு மாடிக்கு தூக்கிச் சென்று மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இதுதொடர்பாக, குழந்தையின் தாயார் அளித்த புகாரின் அடிப்படையில், திருவள்ளூர் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார், போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து,தானேஷை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை, திருவள்ளூரில் உள்ள மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. முடிவுக்கு வந்த வழக்கு விசாரணையில், தானேஷ் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது. இதையடுத்து, இவ்வழக்கு தொடர்பான தீர்ப்பை, திருவள்ளூர் மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி உமாமகேஸ்வரி இன்று அளித்தார். அதில், தானேஷுக்கு 4 சட்டப்பிரிவுகளின் கீழ், 23 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.21 ஆயிரம் அபராதமும் விதித்து, நீதிபதி உமாமகேஸ்வரி உத்தரவிட்டுள்ளார்.

# "எங்கள் தேர்தல் அறிக்கையை அப்படியே காப்பி அடித்துள்ளது என்டிஏ" - தேஜஸ்வி விமர்சனம்

**பாட்னா, நவ.1:**

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தேசிய ஜனநாயகக் கூட்டணி தங்கள் தேர்தல் அறிக்கையை இன்று வெளியிட்ட நிலையில், அதில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குறுதிகள் தங்கள் தேர்தல் அறிக்கையைப் பார்த்து காப்பி அடிக்கப்பட்டவை என தேஜஸ்வி யாதவ் விமர்சித்துள்ளார்.



பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய மகா கூட்டணியின் முதல்வர் வேட்பாளரும், ராஷ்ட்ரிய ஜனதா தள தலைவருமான தேஜஸ்வி யாதவ், "அவர்கள் எல்லாவற்றையுமே காப்பி அடிக்கிறார்கள். அவர்களின் வாக்குறுதிகள் அனைத்தும் எங்கள் தேர்தல் அறிக்கையைப் பார்த்து காப்பி அடிக்கப்பட்டவையே.

சமீபத்தில் நாங்கள் வெளியிட்ட எங்கள் தேர்தல் அறிக்கையில், ஒவ்வொரு வீட்டிலும் ஒருவருக்கு அரசு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தோம். அப்போது, ஒவ்வொரு வீட்டிலும் ஒருவருக்கு எவ்வாறு அரசு வேலை வழங்க முடியும்; அவ்வளவு வேலை வாய்ப்பை எப்படி உருவாக்க முடியும் என்று எங்களைப் பார்த்து கேள்வி கேட்டார்கள். தற்போது அவர்கள் ஒரு கோடி பேருக்கு அரசு வேலை வழங்கப்படும் என வாக்குறுதி அளித்துள்ளார்கள். இதை எவ்வாறு செயல்படுத்துவார்கள் என்பது குறித்து தற்போது அவர்கள் பதில் அளிக்க வேண்டும்.

பிஹாரில் 20 ஆண்டுகளாக தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சிதான் இருக்கிறது. இருபது ஆண்டுகள் அவர்கள் ஆட்சி செய்தும் பிஹார், ஏழ்மையான மாநிலங்களில் ஒன்றாகவே உள்ளது. மாநிலத்தில் தொழிற்சாலைகள் இல்லை. முதலீடுகள் வரவில்லை. அரசாங்கம் அனைத்துத் துறைகளிலும் தோல்வி அடைந்துவிட்டது. அவர்கள் பொய் வாக்குறுதிகளையே மீண்டும் அளிக்கிறார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், மருத்துவர்களுக்கு செவிலியர்களுக்கு என்ன செய்வார்கள்? ஏற்கெனவே உள்ள மருத்துவக் கல்லூரிகளிலேயே போதிய மருத்துவர்கள் இல்லை, செவிலியர்கள் இல்லை, உரிய சிகிச்சை இல்லை, மருந்துப் பொருட்கள் இல்லை. உண்மையில் 20 ஆண்டுகளாக தோல்வி அரசை கொடுத்ததற்காக அவர்கள் பிஹாரின் 14 கோடி மக்களிடமும் மன்னிப்பு கேட்க வேண்டும்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் அறிக்கையில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை முதல்வர் நிதிஷ் குமார் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அவர் உடல்நிலை அப்படி. தேசிய ஜனநாயகக் கூட்டணியின் உண்மை முகத்தை பிஹார் மக்கள் அறிந்துவிட்டார்கள். இம்முறை அவர்கள் சரியான பதிலடி கொடுப்பார்கள். மகா கூட்டணியின் ஆட்சியை அமைக்கும் மன நிலையில் மக்கள் இருக்கிறார்கள். வேலைவாய்ப்பின்மைக்கு முடிவு கட்ட அவர்கள் விரும்புகிறார்கள்" என தெரிவித்தார்.

243 தொகுதிகளைக் கொண்ட பிஹார் சட்டப்பேரவைக்கு நவ.6 மற்றும் 11 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. வாக்குகள் நவ.14-ம் தேதி எண்ணப்பட உள்ளன.

## நவ.5: கேரளத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம்: முதல்வர் அறிவிப்பு

**திருவனந்தபுரம், நவ.1:**

வாக்காளர் பட்டி யல் சிறப்பு தீவிர திருத்தத் திற்கு எதிராக கேரளத்தில் நவம்பர் 5 அன்று அனைத்து கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக முத லமைச்சர் பினராயி விஜயன் கூறியிருப்பதாவது:

கேரளம் உட்பட நாட்டின் பல்வேறு மாநிலங்களில் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை (எஸ்ஐஆர்) அவசரமாக அமல்படுத்த தேர்தல் ஆணையம் எடுத்த முடிவு மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. இது நமது நாட்டின் ஜனநாயக செயல்முறைக்கு சவாலாக அமைகிறது. இதன் ஆபத்தை சுட்டிக்காட்டி சட்ட மன்றம் ஏற்கனவே ஒரு தீர்மானத்தை நிறை வேற்றியது. அரசியல் கட்சி கள் மற்றும் மாநில தேர்தல் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் புறக் கணித்து எஸ்ஜஆர் செயல் படுத்தப்படுகிறது. மாநிலத்தில் உள்ளாட்சி தேர்தல்கள் நடைபெற விருக்கும் நிலையில், இந்த முடிவை எதிர்க்க வேண்டும். இது தொடர்பான விச யங்கள் குறித்து விவாதிக்க நவம்பர் 5 ஆம் தேதி மாலை 4 மணிக்கு அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறும் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

## மேற்கு வங்கம் நோக்கி திரும்பிய மோந்தா புயல்



**புதுடெல்லி, நவ.1:**

வங்கக்கடலில் உருவாகி ஆந்திர மாநிலத்தில் கரையை கடந்து பெரும் சேதத்தை ஏற்படுத்திய மோந்தா புயல் மகாராஷ்டிரா மாநி லத்தை நோக்கி நகர்ந்து அரபிக் கடலை அடையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வெறும் 5 மணிநேரத்தில் மேற்கு வங்க மாநிலத்தை நோக்கி நகர்ந்த மோந்தா புயல் சத்தீஸ்கர் மாநிலத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி யாக மாறியது. இந்த திசை மாறுதலால் சத்தீஸ்கர், மேற்கு வங்கத்தின் சில மாவட்டங்களில் சனிக்கிழமை வரை பலத்த மழை நீடிக்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்கு வங்க மாநில வடக்கு மாவட்டங்களான டார்ஜிலிங், கலிம்பாங், ஜல்பைகுரி, அலிப்பூர்துவார் ஆகிய பகுதிகளில் சிவப்பு எச்சரிக்கையுடன் வெள்ளிக்கிழமை கன மழை முதல் அதீத கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

## வாராணசியில் எச்சில் துப்பினால் ரூ.250 அபராதம்

**வாராணசி, நவ.1:**



உத்தர பிரதேச மாநிலம் வாராணசி நகராட்சியின் பொது மக்கள் தொடர்பு அதிகாரி சந்தீப் ஸ்ரீவாஸ்தவா கூறியதாவது:

உத்தர பிரதேச திடக்கழிவு மேலாண்மை மற்றும் சுகாதார விதிகள் (2021) வாராணசியில் அமலுக்கு வந்துள்ளது. இதன்படி, பொது இடங்களில் எச்சில் துப்பினால் ரூ.250, வாகனங்களில் இருந்தபடி குப்பையை வீசினாலோ எச்சில் துப்பினாலோ ரூ.1,000 அபராதம் விதிக்கப்படும்.

இதுபோல சாலையில் சுற்றித் திரியும் பிராணிகளுக்கு உணவுப் பொருள் வழங்கினால் ரூ.250, பூங்கா, சாலை உள்ளிட்ட பொது இடங்களில் குப்பை கொட்டினால் ரூ.500 அபராதம் விதிக்கப்படும்.

நீர்நிலைகளில் குப்பைகளை கொட்டினால் ரூ.750, குப்பைகளை மூடப்படாத லாரிகளில் எடுத்துச் சென்றால் ரூ.2,000 அபராதம் விதிக்கப்படும் என்றார்.

# ஆர்எஸ்எஸ் அமைப்பை பிரதமர் மோடி தடை செய்ய வேண்டும்: மல்லிகார்ஜுன கார்கே

**புதுடெல்லி, நவ.1:**



ஆர்எஸ்எஸ் தடை செய்யப்பட வேண்டும் என்று நான் வெளிப்படையாகவே கூறுகிறேன் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மல்லிகார்ஜுன கார்கே, "நாட்டின் தற்போதைய சட்டம் - ஒழுங்கு நிலைக்கு பாஜகவும் ஆர்எஸ்எஸ் அமைப்பும்தான் காரணம். சர்தார் வல்லபாய் படேல் முன்வைத்த கருத்துகளை பிரதமர் நரேந்திர மோடி உண்மையிலேயே மதிக்கிறார் என்றால் அவர், ஆர்எஸ்எஸ் அமைப்பை தடை செய்ய வேண்டும். இது எனது தனிப்பட்டக் கருத்து. இதை நான் வெளிப்படையாகவே சொல்கிறேன்.

காந்தி இறந்ததை அடுத்து ஆர்எஸ்எஸ் தடை செய்யப்பட்டது. இது தொடர்பாக ஜனசங்கத்தின் தலைவர் ஷியாம பிரசாத் முகர்ஜிக்கு, அப்போதைய மத்திய உள்துறை அமைச்சராக இருந்த வல்லபாய் படேல் ஒரு கடிதம் எழுதி இருந்தார். பிப்ரவரி 4, 1948 தேதியிட்ட அந்த கடிதத்தில், 'காந்திஜியின் மரணத்தை அடுத்து, ஆர்எஸ்எஸ் உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைந்து இனிப்பு விநியோகத்தினர். இதனால், அவர்கள் மீது எதிர்ப்பை மேலும் அதிகரித்தது.

இந்த சூழ்நிலையில், ஆர்எஸ்எஸ் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர அரசாங்கத்திற்கு வேறு வழியில்லை. ஆர்எஸ்எஸ் மற்றும் இந்து மகாசபையின் செயல்பாடுகளால் நாட்டில் உருவாக்கப்பட்ட சூழல் காந்திஜியின் படுகொலைக்கு வழிவகுத்தது என்பதை அறிக்கை நிரூபிக்கிறது' என்று தெரிவித்துள்ளார். இந்த கடிதத்தை ஆர்எஸ்எஸ் தலைவர் கோல்வால்கருக்கும் படேல் எழுதினார்.

ஆர்.எஸ்.எஸ்ஸின் உரைகள் வகுப்புவாதத்தின் விஷத்தால் நிரம்பியிருந்தன என்று சர்தார் படேல் கூறுவார். ஆர்.எஸ்.எஸ் காரணமாகத்தான் காந்திஜி படுகொலை செய்யப்பட்டார். காந்திஜியைக் கொன்ற அதே மக்கள் இப்போது காங்கிரஸைக் கேள்வி கேட்கிறார்கள். சர்தார் வல்லபாய் படேல் நாட்டை ஒன்றிணைத்த ஒரு தலைவர். அடிப்படை உரிமைகள் குறித்த தனது கருத்துக்களை அரசியலமைப்புச் சபையில் முன்வைத்து அரசியலமைப்பில் அவற்றுக்கு ஒரு இடத்தைப் பெற்றுத் தந்தவர் படேல்" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, சர்தார் வல்லபாய் படேலின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு குஜராத்தின் ஏக்தா நகரில் உள்ள அவரது பிரம்மாண்ட சிலைக்கு பிரதமர் மோடி இன்று மலர்களைத் தூவி மரியாதை செலுத்தினார். இதையடுத்து படேல் சிலை முன்பாக முதன்முறையாக நடைபெற்ற தேசிய ஒற்றுமை தின அணிவகுப்பை பிரதமர் மோடி பார்வையிட்டார். பின்னர் பேசிய பிரதமர் மோடி, "சுதந்திரத்திற்குப் பிறகு, 550க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை ஒன்றிணைக்கும் சாத்தியமற்ற பணியை சர்தார் படேல் சாத்தியமாக்கினார்.

ஒரே இந்தியா, சிறந்த இந்தியா என்ற யோசனை படேலுக்கு மிக முக்கிய மானது.

# தெலங்கானா அமைச்சராக முன்னாள் கிரிக்கெட் வீரர் அசாருதீன் பதவியேற்பு

**ஹைதராபாத், நவ.1:**



ஹைதராபாத்: இந்திய அணியின் முன்னாள் கேப்டன் முகமது அசாருதீன் நேற்று தெலங்கானா அமைச்சராக பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் ஜிஷ்ணு தேவ் வர்மா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி தலைமையிலான அமைச்சரவையில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில், முகமது அசாருதீன் அமைச்சராக நியமிக்கப்படுவார் என பேசப்பட்டு வந்தது. இதை உறுதிப்படுத்தும் விதமாக, சட்டப்பேரவை உறுப்பினராக இல்லாத அவரை ஆளுநர் கோட்டாவில் சட்ட மேலவை உறுப்பினராக தேர்வு செய்ய தெலங்கானா அமைச்சரவை கடந்த ஆகஸ்ட் மாதம் ஆளுநருக்கு பரிந்துரை செய்தது. எனினும், இந்த பரிந்துரைக்கு ஆளுநர் இதுவரை ஒப்புதல் வழங்கவில்லை.

இந்நிலையில், அசாருதீன் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். ஹைதராபாத்தில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இதற்கான விழாவில், ஆளுநர் ஜிஷ்ணு தேவ் வர்மா, அசாருதீனுக்கு பதிவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். இதில், முதல்வர் ரேவந்த் ரெட்டி, அசாருதீன் குடும்பத்தினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தெலங்கானாவின் ஜூப்லி ஹில்ஸ் தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால், அதில் காங்கிரஸ் கட்சி சார்பில் அசாருதீன் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. 30%-க்கு மேல் முஸ்லிம்கள் உள்ள தொகுதி என்பதால், அவருக்கான வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

இதனிடையே, அசாருதீன் அமைச்சராக்கப்பட்டிருப்பதற்கு பாஜக கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள மாநில பாஜக செய்தித் தொடர்பாளர், அசாருதீனை அமைச்சராக்குவது தேர்தலில் அதிகார துஷ்பிரயோகத்துக்கே வழிவகுக்கும் என எச்சரித்துள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

## தமிழ்நாட்டின் 35-வது கிராண்ட் மாஸ்டரானார் இளம்பரிதி



**சென்னை, நவ.1:**

தமிழ்நாட்டு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உதவியுடன் சாதித்ததாக உதயநிதி ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

போஸ்னியா மற்றும் ஹெர்ஸிகோவினாவில் நடைபெற்ற பிஜெல்ஜினா ஓபன் போட்டியின் மூலம் தமிழ்நாட்டின் 35-வது மற்றும் இந்தியாவின் 90-வது கிராண்ட் மாஸ்டராக ஏ.ஆர்.இளம்பரிதி உருவெடுத்துள்ளார்.

இளம்பரிதிக்கு வாழ்த்து தெரிவித்த தமிழக விளையாட்டுத் துறை அமைச்சரும் துணை முதல்-அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், தமிழகத்துக்கு இந்திய சதுரங்கத்துக்கும் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் மற்றும் பெருமைக்குரிய தருணமாக இது அமைந்துள்ளது. இந்தியாவின் 90-வது கிராண்ட் மாஸ்டராரும் தமிழ்நாட்டின் 35-வது கிராண்ட் மாஸ்டருமான இளம்பரிதிக்கு வாழ்த்துகள். விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சாம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின் பயனாளியான இளம்பரிதி, தொடர்ந்து மேலும் பல வெற்றிகளைப் பெறவும் வாழ்த்துகிறேன் என்று தெரிவித்தார்.

## கிராண்ட்மாஸ்டர் இளம்பரிதிக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து



**சென்னை, நவ.1:**

தமிழ்நாட்டின் 35-வது மற்றும் இந்தியாவின் 90-வது கிராண்ட் மாஸ்டராக இளம்பரிதி உருவெடுத்துள்ளார்.

போஸ்னியா மற்றும் ஹெர்ஸிகோவினாவில் நடைபெற்ற பிஜெல்ஜினா ஓபன் போட்டியின் மூலம் தமிழ்நாட்டின் 35-வது மற்றும் இந்தியாவின் 90-வது கிராண்ட் மாஸ்டராக ஏ.ஆர்.இளம்பரிதி உருவெடுத்துள்ளார். அவருக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

இந்த நிலையில், கிராண்ட்மாஸ்டர் இளம்பரிதிக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"சதுரங்கத்தில் தமிழ்நாட்டின் 35வது கிராண்ட்மாஸ்டராக இளம்பரிதி சாதனை படைத்துள்ளார். இதன் மூலம் தமிழ்நாட்டின் சாம்பியன் கிரீடத்தில் அவர் மற்றொரு ரத்தினத்தைச் சேர்த்துள்ளார். தமிழ்நாடு சதுரங்கத்தில் சூரியன் உதிக்கும் போது இன்னும் பல கிராண்ட்மாஸ்டர்கள் உருவாகின்றனர்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## 2-வது டி20 போட்டியில் இந்தியாவை வீழ்த்தியது ஆஸி. - ஹேசில்வுட் அபாரம்

**மெல்பர்ன், நவ.1:**

இரண்டாவது டி20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியை 4 விக்கெட்டுகளில் வீழ்த்தியது ஆஸ்திரேலிய அணி. அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோஷ் ஹேசில்வுட் அபாரமாக பந்து வீசி இருந்தார்.

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடரை 2-1 என ஆஸ்திரேலியா வென்றது. இந்நிலையில், 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் விளையாடி வருகின்றன. இந்த தொடரின் முதல் போட்டி மழையால் பாதியில் ரத்தானது.

இந்நிலையில், 2-வது டி20 போட்டி இன்று மெல்பர்னில் நடைபெற்றது. இதில் முதலில் பேட் செய்த இந்திய கிரிக்கெட் அணி 18.4 ஓவர்களில் 125 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அபிஷேக் சர்மா 68, ஹர்ஷித் ராணா 35 ரன்கள் எடுத்தனர். ஆஸ்திரேலியா தரப்பில் 4 ஓவர்கள் வீசி 13 ரன்கள் மட்டுமே கொடுத்து 3 விக்கெட்டுகளை கைப்பற்றி இருந்தார் ஜோஷ் ஹேசில்வுட். பார்ட்லெட் 2, நாதன் எல்லிஸ் 2, ஸ்டாய்னிஸ் 1 விக்கெட் வீழ்த்தி இருந்தனர். இந்திய அணி வீரர்கள் அக்சர் மற்றும் பும்ரா ரன் அவுட்டாகி வெளியேறினார்.

126 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை விரட்டிய ஆஸ்திரேலிய அணி, 13.2 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டி வெற்றி பெற்றது. கேப்டன் மார்ஷ் 46, டிராவிஸ் ஹெட் 28, ஜோஷ் இங்லிஸ் 20, மிட்செல் ஓவன் 14 ரன்கள் எடுத்தனர். இந்திய அணி சார்பில் பும்ரா, வருண், குல்தீப் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இந்த தொடரில் 1-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா முன்னிலை பெற்றுள்ளது. இந்தத் தொடரின் அடுத்த போட்டி வரும் ஞாயிறு அன்று ஹோபர்ட்டில் நடைபெறுகிறது.

# ரஷ்யாவுக்குப் போட்டியாக 30 ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் மீண்டும் அணு ஆயுத சோதனை: டிரம்ப் உத்தரவு




**வாஷிங்டன், நவ.1:**

ரஷ்யா அணு ஆயுத சோதனையில் ஈடுபட்ட நிலையில் பதிலுக்கு, சுமார் 30 ஆண்டுகளாக நிறுத்திவைத்திருந்த அணு ஆயுத சோதனைகளை மீண்டும் நடத்துமாறு பாதுகாப்புத்துறைக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தனது ட்ரூத் சோஷியல் ஊடகத்தில் அதிபர் டிரம்ப் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளதாவது:

அமெரிக்கா வேறு எந்த நாட்டையும் விட அதிக அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளது. ரஷ்யா 2-வது இடத்தில் உள்ளது, சீனா 3-வது இடத்தில் உள்ளது. ரஷ்யாவின் தொடர் அணு ஆயுத சோதனைகளால் 5 ஆண்டுகளுக்குள் அது அமெரிக்காவை ஈடு செய்யும்.

பிற நாடுகளின் (ரஷியா, சீனா) மேம்பட்ட சோதனை திட்டங்கள் காரணமாக, நமது அணு ஆயுதங்களையும் அந்த திட்டங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் சோதிக்க வேண்டும் என்று ராணுவத் துறை அமைச்சகத்துக்கு (பென்டகன்) உத்தரவிட்டுள்ளேன். இந்த உத்தரவின் அமலாக்கம் உடனுக்குடன் தொடங்கும் என தெரிவித்துள்ளார். இதனால் 30 ஆண்டுகளுக்கு பிறகு அமெரிக்கா அணு ஆயுத சோதனையில் ஈடுபட உள்ளது.

மாஸ்கோ, சோவியத் ரஷ்யா மற்றும் அமெரிக்கா இடையே 1990-களில் பனிப்போர் நிலவியது. இதனால் இருநாடுகளும் அணு ஆயுத சோதனைகளில் தொடர்ந்து ஈடுபட்டு உலக நாடுகளை அச்சுறுத்தி வந்தனர். இதனை தொடர்ந்து போரில் சோவியத் ரஷ்யா தோல்வி அடைந்ததை தொடர்ந்து அது ரஷ்யாவாக பிரிக்கப்பட்டது. மேலும் அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட உலக நாடுகள் அனைத்தும் அணு ஆயுத சோதனையை மேற்கொள்ள ஐ.நா. அமைப்பால் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் உக்ரைன்ரஷ்யா இடையே போர் தொடங்கி 3 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. போரை முடிவுக்கு கொண்டு வர உலக நாட்டு தலைவர்களின் தொடர் முயற்சி தோல்வியடைந்து வருகிறது. குறிப்பாக ரஷ்ய அதிபர் புதின் இந்த போரை முடிவுக்கு கொண்டு வராமல் தொடர்ந்து இழுத்தடிப்பு செய்து வருகிறார். இதனிடையே ரஷ்ய ராணுவம் தற்போது அணுசக்தி சோதனையில் ஈடுபட்டு வருகிறது. 'பறக்கும் அணு உலை' என்று சொல்லக்கூடிய அதிநவீன அணுசக்தி ஏவுகணையான 'புரெவெஸ்ட்னிக்'கை சோதித்தது.

**கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கும்...**

எதிரிகளின் ரேடாரில் சிக்காமல் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து எதிரி இலக்குகளை துல்லியமாக தாக்கும் தன்மை கொண்டதாக இது உள்ளது. இந்த நிலையில் மீண்டும் ஒரு அணு ஆயுதத்தை ரஷ்யா நேற்று சோதித்தது. அணுசக்தியால் இயங்கும் வல்லமை கொண்ட கட்டுக்கடங்காத தூரம் செல்லும் நீர்மூழ்கி டிரோனை ரஷ்யா வெற்றிகரமாக சோதித்தது. 'போசைடன் சூப்பர் டார்பிடோ' என பெயரிடப்பட்டுள்ள இந்த டிரோன் ரஷ்யாவின் மிகவும் சக்திவாய்ந்த ஏவுகணையைவிட தாக்கும் திறன் கொண்டது. இதனை ரஷ்ய அதிபர் புதின் உறுதிப்படுத்தினார். அவர், "அணு உலையைபோல 100 மடங்கு சக்திவாய்ந்த அணு என்ஜின் பொருத்தப்பட்ட நீர்மூழ்கி டிரோன் சோதனை வெற்றிப்பெற்றுள்ளது" என்றார். ரஷ்யாவின் இந்த சோதனைக்கு டிரம்ப் கடும் கண்டனம் தெரிவித்தார். ஏவுகணை, நீர்மூழ்கி ட்ரோன் ஆகியவற்றை ரஷ்யா வெற்றிகரமாக சோதித்துள்ள நிலையில், டிரம்ப் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

1998-ம் ஆண்டுக்குப் பிறகு உலகில் வடகொரியா தவிர வேறு எந்த நாடும் அணு ஆயுத வெடிப்பு சோதனை நடத்தவில்லை. ஆனால் அமெரிக்கா போன்ற அணு ஆயுத பலம் கொண்ட நாடுகள், சக்திவாய்ந்த கணினிகளைப் பயன்படுத்தி உருவகப்படுத்தப்பட்ட அணு வெடிப்புகள், அணு இயற்பியல் சோதனைகள், அணு ஏவுகணை சோதனைகள், அணு ஆயுதப் போர் ஒத்திகைகள் போன்ற சோதனைகளை நடத்தி வருகின்றன.

## பாக். ராணுவ தாக்குதல்: பலுசிஸ்தானில் 18 போராளிகள் உயிரிழப்பு


**கராச்சி, நவ.1:**

உளவுத் தகவலின் அடிப்படையில் பலுசிஸ்தானின் குவெட்டா மாவட்டம், சில்டன் மலைத்தொடரிலும், கெச் மாவட்டத்தின் புலே டாவிலும் பாகிஸ்தான் ராணுவம் புதன்கிழமை இரவு தேடுதல் பணி மேற்கொண்டது. இதில் ராணுவத்தினர் - பலுசிஸ்தான் போராளிகள் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது. இதில் 18 போராளிகள் உயிரிழந்தனர். அங்கிருந்து ஆயுதங்கள், வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன.

## ஐ.நா ஊழியர்களை விடுவிக்க ஹவுதி குழுவுடன் பேச்சுவார்த்தை

ஏமனில் உள்ள ஹவுதி ராணுவக் குழுவினால் அக்.27 திங்களன்று ஐ.நா அவை ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இதுவரை அவ்வமைப்பால் 59 ஐ.நா அவை ஊழியர்கள் கைது செய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிப்பதற்காக ஓமன் அதிகாரிகளுடன் இணைந்து ஐ.நா அதிகாரி கள், ஹவுதி குழுவுடன் பேச்சுவார்த்தையை நடத்தி வருகிறார்கள். இதற்காக ஐ.நா.அவையின் சிறப்புத் தூதர் ஹான்ஸ் க்ருண்ட்பெர்க், முயின் ஷ்ரெய்ம் ஆகியோர் ஓமன் நாட்டில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## காலநிலை மாற்றத்தால் அதிதீவிரமடையும் புயல்



ஜமைக்காவைத் தாக்கியமெலிசாபுயல்பற்றிலண்டனில் உள்ள இம்பீரியல் கல்லூரியின் ஆராய்ச்சியாளர்கள் ஒரு ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளனர்.அதில் மெலிசா புயல் கால நிலை மாற்றத்தால் அதன் இயல்பைவிட நான்கு மடங்கு மிக சக்தி வாய்ந்த அழிவை உருவாக்கக் கூடிய புயலாக மாறி இருக்கலாம் என தெரிவித்துள்ளனர். மேலும் இதனை தடுக்க பசுமை இல்ல வாயுக்கள் வெளியேற்றப்படுவதை நிறுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

## பாகிஸ்தானில் குண்டு வைத்து 6 ராணுவ வீரர்கள் பலி

பாகிஸ்தானின் கைபர் பக்துன்குவா மாகாணத்தில் ராணுவ வீரர்கள் சென்ற வாகனத்தை குறிவைத்து வெடி குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மேலும் அந்த ராணுவ வாகனம் மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடும் நடத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் 6 ராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ராணுவம் அறிவித்துள்ளது. இந்தத் தாக்குதல் பயங்கரவாதிகளால் திட்டமிட்டு நடத்தப்பட்டதாகவும், அப்பகுதியில் ராணுவம் தேடுதல் வேட்டை நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இதய ஸ்டென்ட்டுக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைத்துள்ளது



**சான்பிரான்சிஸ்கோ, நவ.1:**

இதய சிகிச்சை நிபுணர்களின் உலகளாவிய மாநாடு அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோவில் நேற்று முன்தினம் முடிவடைந்தது. இதில் டெல்லி பத்ரா மருத்துவமனை டீனும், இதய சிகிச்சை நிபுணருமான டாக்டர் உபேந்திர கவுல், டுக்ஸ்டோ-2 என்ற பெயரில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளை தாக்கல் செய்தார். இந்த பரிசோதனை டாக்டர் கவுல் தலைமையில் நடைபெற்றது. இதில் துணைத் தலைவராக பெங்களூரைச் சேர்ந்த டாக்டர் பால், திட்ட இயக்குனராக டாக்டர் பிரியதர்ஷினியும் பணியாற்றினர்.

இந்த பரிசோதனையில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட புதிய தலைமுறை இதய ஸ்டென்ட் 'சுப்ராப்ளக்ஸ் க்ரஸ்' மற்றும் சர்வதேச சந்தையில் கிடைக்கும் அமெரிக்க தயாரிப்பு 'ஜீயன்ஸ்' இதய ஸ்டெண்ட்டும் தீவிரமாக ஒப்பிடப்பட்டது. அப்போது டாக்டர் கவுல் கூறியதாவது:

இந்தியாவில் 66 இதய சிகிச்சை மையங்களில் இந்த பரிசோதனை நடத்தப்பட்டது. நீரிழிவு மற்றும் இதயத்துக்கு ரத்தம் செலுத்தும் 3 முக்கியநாளங்களிலும் அடைப்பு உள்ளவர்களுக்கு இந்திய தயாரிப்பு ஸ்டென்ட் பொருத்தி பரிசோதிக்கப்பட்டது. இவர்களில் 80 சதவீதம் பேர், 3 முக்கிய ரத்த நாளங்களிலும் அடைப்பு உள்ளவர்கள்.

இந்த பரிசோதனை இந்திய தயாரிப்பு 'சுப்ராபிளக்ஸ் க்ரஸ்' ஸ்டென்ட், சர்வதேச தரத்திலான ஸ்டென்ட்டுக்கு எந்தவிதத்திலும் குறைவு இல்லை என்பதை நிரூபித்தது. குஜராத்தின் சூரத் நகரில் இந்த ஸ்டென்ட் தயாராகிறது.

இவ்வாறு டாக்டர் கவுல் கூறினார்.

## பணி உரிமம் மறுஆய்வு செய்யப்படும்: அமெரிக்கா அறிவிப்பு

**வாஷிங்டன், நவ.1:**

அமெரிக்காவில் பணியாற்றும் வெளிநாட்டினருக்கான பணி உரிமத்தை தானாக நீட்டிக்கும் முறையை அமெரிக்க அரசு முடிவுக்குக் கொண்டு வந்து விட்டது. அக்.30 முதல் பணி அனுமதி அங்கீகார ஆவணத்தை புதுப்பிக்க விண்ணப்பிக்கும் எந்த ஒரு வெளிநாட்டினருக்கும் இனி தானாக அனுமதி நீட்டிக்கப்படாது எனவும் அதனை புதுப்பிக்கும் முன்பாக அந்த விண்ணப்பதாரர்கள் முழுமையான மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

## ஒப்பந்தத்தை மீறிய தாக்குதல்கள் இனப்படுகொலைகளை தொடரச் செய்கிறது

இடைக்காலப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி காசாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்கள் இனப்படுகொலைகளை முடிவில்லாமல் தொடர வழிவகுக்கிறது என எல்லைகள் அற்ற மருத்துவர்கள் சங்கம் எச்சரித்துள்ளது. மேலும் இஸ்ரேல் அக்.29 அன்று காசாவில் நடத்திய குண்டு வீச்சில் பலரும் படுகாயமடைந்து அப்பகுதி முழுவதும் பயங்கரமான சூழ்நிலை நிலவுகிறது. குழந்தைகள் கொல்லப்படுகிறார்கள். இது, பொதுமக்கள் மீதான தாக்குதல் என்பதில் சந்தேகமே இல்லை எனவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

## வியட்னாமில் வெள்ளம்; உயிரிழப்பு அதிகரிப்பு, பலரைக் காணவில்லை,



ஹனோய்: வியட்னாமைப் பாதித்துள்ள மோசமான வெள்ளத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை குறைந்தது 13க்குக் கூடியுள்ளது.

மேலும் 11 பேரைக் காணவில்லை. அந்நாட்டு அரசாங்கம் வெள்ளிக்கிழமை (அக்டோபர் 31) இத்தகவல்களைத் தெரிவித்துள்ளது.

வரலாறு காணாத மழைப் பொழிவால் மத்திய வியட்னாமில் கடந்த சில நாள்களாகப் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. யுனெஸ்கோ மரபுடைமைப் பட்டியலில் இடம்பெறும் முந்தைய தலைநகரமான ஹியூ, பழம்பெரும் நகரான ஹொய் ஆன் ஆகியவை வெள்ளத்தால் ஆக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

அவ்விரு நகரங்களின் பெரும்பாலான பகுதிகளும் நீரில் மூழ்கியிருப்பது வியட்னாமிய அரசாங்கத்துக்குச் சொந்தமான ஊடகங்களில் பகிரப்பட்ட படங்களில் தெரிந்தது. அதிலும் சில வீடுகள் கூரை வரை நீரில் மூழ்கியது காணப்பட்டது.

வியட்னாம், வெள்ளத்தால் பாதிக்கப்படும் அபாயத்தை அதிகம் எதிர்நோக்கும் நாடாகும். குறிப்பாக ஜூனிலிருந்து அக்டோபர் மாதத்துக்கு இடைப்பட்ட காலத்தில் இந்நிலை ஏற்படுகிறது. இந்தக் காலகட்டம், புயல்கள் அதிகம் வீசக்கூடிய காலமாகும்.

வெள்ளம் இதுவரை 116,000க்கும் அதிகமான வீடுகளைப் பெரிய அளவில் பாதித்துள்ளது, 5,000 ஹெக்டர் பரப்பளவிலான பயிர்களை நாசப்படுத்திவிட்டது. சாலைகள், ரயில் பாதைகள் ஆகியவைசேதமடைந்துள்ளன, பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது என்று வியட்னாமிய பேரிடர் அமைப்பு அறிக்கையில் தெரிவித்தது.

## மலேசிய டுரியானுக்கான தேவை உலக அளவில் அதிகரிப்பு



**கோலாலம்பூர், நவ.1:**

சீனா முதல் ஐரோப்பா, அமெரிக்காஎனப்பலநாடுகளில் மலேசியாவின் டுரியான் பழங்கள் உலக அளவில் பிரபலமடைந்துள்ளன. இதனால் டுரியானுக்கான தேவையும் பல மடங்கு கூடியுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக மலேசியாவில் டுரியான் ஏற்றுமதியும் விரிவடைந்துள்ளது. மேலும் டுரியான் சாகுபடியும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருகிறது.

2020ஆம் ஆண்டுக்கும் 2024ஆம் ஆண்டுக்கும் இடையில் ஐரோப்பிய நாடுகளுக்கான டுரியான் ஏற்றுமதி 162 விழுக்காடு கூடியுள்ளது. அதேபோல் வட அமெரிக்க நாடுகளுக்கான மலேசிய டுரியான் ஏற்றுமதி 5.2 விழுக்காடு உயர்ந்தது. மத்தியக் கிழக்கு நாடுகளுக்கான ஏற்றுமதி 8.8 விழுக்காடு அதிகரித்தது.

இந்தத் தரவுகளை மலேசியாவின்வேளாண்மற்றும் உணவுப் பாதுகாப்புத்துறை அமைச்சர் முகம்மது சாபு நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

"உயர்ரக டுரியான் பழங்களுக்கானதேவைஉலக அளவில் அதிகரித்துள்ளது. குறிப்பாக மூசாங் கிங் டுரியானை மக்கள் விரும்பிச் சாப்பிடுகிறார்கள்," என்று அமைச்சர் சாபு குறிப்பிட்டார்.

டுரியான் ஏற்றுமதியை அதிகரிக்கவும் பழம் தொடர்பான விளம்பரத்தை மக்களுக்குக் கொண்டு செல்வதையும் மலேசிய அரசாங்கம் தொடர்ந்து செய்யும் என்று அவர் தெரிவித்தார்.

2023ஆம்ஆண்டுசீனாவுக்கு மட்டும் 367.4 மில்லியன் வெள்ளிமதிப்பிலான டுரியான் பழங்களை மலேசியா ஏற்றுமதி செய்துள்ளது.

அதேபோல் ஹாங்காங்கிற்கு 31.3 மில்லியன் வெள்ளி, சிங்கப்பூருக்கு 23.5 மில்லியன் வெள்ளி, இந்தோனீசியாவுக்கு 18 மில்லியன் வெள்ளி, அமெரிக்காவுக்கு 11 மில்லியன் வெள்ளிமதிப்பிலான டுரியான் பழங்களை மலேசியா ஏற்றுமதி செய்துள்ளது.

2020ஆம் ஆண்டு மலேசியாவின் மொத்த டுரியான் ஏற்றுமதி 176.7 மில்லியன் வெள்ளி. 2024ஆம் ஆண்டு அது 367 மில்லியன் வெள்ளியாகப் பதிவானது.

பழங்களின் அரசன் என்ற அழைக்கப்படும் டுரியானை மலேசியா 40க்கும் அதிகமான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

கனடா, ஜப்பான், தென்கொரியா, கத்தார், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு சிற்றரசுகள், பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளும் டுரியானை இறக்குமதி செய்கின்றன.

மலேசியாவில் 1,933 டுரியான் தோட்டங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது

## மலேசியாவில் ஆதிகால கப்பலின் சிதைவுகள் கண்டெடுப்பு



**மலாக்கா, நவ.1:**

ஆதிகாலத்து மலாய் கப்பல் ஒன்றின் சிதைவுகள் மலாக்கா மாநிலத்தில் உள்ள செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள தீவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு, வரலாற்றுச் சிறப்புமிக்க மலாக்காவில் அண்மைய ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆக முக்கியமான தொல்பொருளாய்வுக் கண்டுபிடிப்புகளில் ஒன்று என மாநில முதலமைச்சர் அப்ராவ்ஃப்யூசோ கூறினார். ஏறத்தாழ 50லிருந்து 70 மீட்டர் நீளம்கொண்டதாக கணிக்கப்பட்டுள்ள, மரக்கட்டையால் செய்யப்பட்டிருக்கும் இக்கப்பல் மலாக்காவின் வரலாற்றுச் சிறப்புத் தன்மையை மேலும் எடுத்துரைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

"சரிபார்த்துப் பாதுகாப்பாக வைக்க இந்தத் தொல்பொருளாய்வுக் கண்டுபிடிப்பு மிகுந்த கவனத்துடன் கொண்டு செல்லப்படுகிறது.

"பாதுகாத்து ஆய்வு மேற்கொண்ட பிறகு இது மலாக்காவின் அரும்பொருளகங்களில் ஒன்றில் வைக்கப்படும்," என்று அவர் வியாழக்கிழமை (அக்டோபர் 30) குறிப்பிட்டார்.

இந்தக் கண்டுபிடிப்பு, மலாக்காவின் வரலாற்றுச் சிறப்பை மேலும் எடுத்துக்காட்டுவது மட்டுமின்றி வித்தியாசமான கலாசார சிறப்புமிக்க சுற்றலாத் தலத்தை உருவாக்கவும் வகைசெய்யும் என்று திரு அப் ராவ்ஃப் தெரிவித்தார்.

"மரபு, வரலாறு, நாகரிகமயமாதல் ஆகியவற்றைச் சித்திரிக்கும் உலகப் பிரபல மாநிலம் என்ற சிறப்புக்கு இந்தக் கண்டுபிடிப்பு மேலும் மெருகூட்டும்," என்றும் அவர் பெருமைபட்டார்.